உமா

ஆசிரியர்: ஜி. உமாபதி

ஐப்பசி

4 அணா

NOV 1954

தீபாவளி விசேஷ இதழ்

834

நவம்பர் - 1954

2 - DEC 1954

834

JL
NSHA
N54·7·2
177209

அழகிற்கு
அழகு

மனதிற்கு
மகிழ்ச்சி

உயர்ந்த
உறுதியான
வேலைப்பாடுள்ள

வைரம்
தங்க
நகைகள்

வெள்ளி
பாத்திரங்களுக்கு

T. கோவிந்தராஜுலு நாயுடு

JEWELLERS & DIAMOND MERCHANTS

28. நேதாஜி
சுபாஷ் சந்திரபோஸ் ரோடு
மதராஸ் . 1

பண்டிகை நாட்களிலும்
மற்றும் எல்லா நாட்களிலும்
துஷார
வனஸ்பதி
துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிட்.,
கர்னூல், தென் இந்தியா

2 - DEC 1954

Devarajaswamy Temple, Conjeeveram.
பிரசித்திபெற்ற
நீபா
ஹேர் ஆயில்
டாய்லட் சோப்
பிரில்லியண்டைன்
ஸ்னோ
ஊதுபத்திகள்
கங்கா ஒர்க்ஸ், அடையார், மதராஸ்-20.
நறுமணத்திற்கு மறுபெயர்

OK
SOAPS
KEEP YOU
FRESH AND YOUR
CLOTHES CLEAN
AND BRIGHT
THE EAST ASIATIC COMPANY (INDIA) LIMITED.
MADRAS

இந்தியத் தொழிலிலே உயர்வு !

"பாரத்" பிளேடுகள் !

க்ஷவரத்திலே மென்மை !

சருமத்திலே தனி அழகு !

விலையிலே மலிவு !

எங்கும் கிடைப்பது !

பாரத்
பிளேடுகள்

5
அணாவுக்கு
10
பிளேடுகள்

"பாரத்" புளூ ஸ்டீல் பிளேடுகள் 10 - விலை 8 அணா

★

தமிழ் நாடு, ஆந்திரா, ஹைதராபாத், மைசூர்,
குடகு, திருவாங்கூர்-கொச்சி சமஸ்தானங்களுக்கு

பூரண விநியோக உரிமையாளர்கள் :

லாலா கோபிகிருஷ்ண கோகுல்தாஸ்,

119, த்ங்கசாலைத் தெரு. : : சென்னை - 1.

போன் : 3275

தந்தி : 'ஜாவர்'



Popular
for more than 70 years
LITTLE'S
ORIENTAL
BALM
தலைவலி, மார்சளி,
தொண்டை பொருமல்,
நரம்பு வலி, சுளுக்கு, கை,
கால் பிடிப்பு, கீல் வாதம்
முதலிய எல்லா வலிகளுக்
கும் மிகச் சிறந்தது.
ORIENTAL BALM
All Aches and Pains
LITTLE'S ORIENTAL BALM & PH. LTD.
MADRAS - 2

விநாயகர்
V. ARUMUGA CHETTY
சுருட்டுகள்
ஷெல்
பிராண்டு
TRADE MARK REGISTERED
PROPRIETOR: V. ARUMUGA CHETTY
மணிலா
சுருட்டுகள்
Partham
V. ஆறுமுக செட்டி.,
18. அண்ணா பிள்ளை தெரு, சென்னை-1.
N.B. பொடிக்கு உயர்ந்த பந்தர் புகையிலைகளும் எம்மிடம் கிடைக்கும்.
ஸ்தாபிதம்: 1922
போன் நெ. 3325

தமிழை ஆட்சி மொழியாக்குவதே
நமது முதல் லட்சியம்.

செடி 2 மலர் 7	நவம். 1954	ஜய ௵ ஐப்பசி ௴

பொருளடக்கம்

வரவேற்கின்ருேம்!	 9
வானகத்துப் பத்தினி	 11
பேச்சின் பெருமை!	... 14
யாருக்கு தீவளி?	 16
அலை ஓய்ந்தது (தொடர் கதை)	... 19
விடை என்ன?	 27
தாம்பத்தியம்	... 35
அத்தை மகன்	 42
இரவல் பேனு	 53
அதிசயத் திருமணம்	... 59
சித்தன்ன வாசல்	... 65
பிரமை	 71
மனப்புயல் (தொடர் கதை)	... 75
பட உலகம்	... 88

உமா'வில் வெளியாகும் கதைகளில் உள்ள
பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே.
சம்பவங்களும் கற்பனையே.

WHY FRET ABOUT YOUR FOUNTAIN PEN?



Used wherever good pens are used.

Manufactured for

THE PILOT PEN CO. (INDIA) LTD.

RED HILLS **MADRAS.**

EP

197209

வரவேற்கின்றோம்!

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைப் பின்பற்றி பிரெஞ்சு சாம்ராஜ்யம் இந்தியாவின் கடற்கரையோரப் பகுதிகளிலிருந்து வெளியேறுவதென்று தீர்மானித்துவிட்டது. அது வெளியேறத்தான் வேண்டுமென்று பிரெஞ்சிந்திய மக்களின் பிரதிநிதிகளும் தீர்ப்பளித்துவிட்டார்கள். ஆகவே, இனி புதுவையும் காரைக்காலும் அன்னிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்று கன்னித் தமிழ் நாட்டோடு விரைவில் சேருமென்று எதிர்பார்க்கலாம்.

பாரத நாடு தனது அயல் நாட்டுப் பிரச்சினைகளை படையெடுப்பின் மூலம் தீர்த்துக்கொள்வதில்லை. சமரசப்பேச்சுக்களின் மூலம் தீர்த்துக் கொள்வதுதான் அதனுடைய கொள்கை. இதை பிரெஞ்சிந்திய பிரச்சினையில் நேரு ஆட்சி நிரூபித்துவிட்டது. நேரு நினைத்திருந்தால் முன்பே சாதாரண 'போலீஸ் நடவடிக்கை' மூலம் இந்தியப் பகுதியிலிருந்து பிரெஞ்சுக்காரர்களை வெளியேற்றியிருக்க முடியும். அப்படி வெளியேற்ற வேண்டுமென்றும் தீவிர அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுத்ததுண்டு. ஆனால், காந்தி அடிகளின் வாரிசான நேரு அப்படிச் செய்ய விரும்பவில்லை. மக்களின் சக்தி மூலமே வெற்றிபெற முடியுமென்று நம்பினார். அவர் நம்பியது நடந்துவிட்டது.

பிரெஞ்சிந்திய மக்கள், இந்தியா பிரிட்டிஷாருக்கு அடிமைப்பட்டிருந்த காலத்தைவிட அதிக காலம் பிரெஞ்சுக்காரருக்கு அடிமைப்பட்டிருந்தனர். ஆம்! இந்தியா அடிமைப்பட்டதற்கு முன்பே புதுவை—காரைக்கால் பகுதிகள் பிரெஞ்சு சாம்ராஜ்யத்திற்கு அடிமைப்பட்டுவிட்டன. இந்தியா விடுதலை பெற்று 7 ஆண்டுகள் கழிந்த பிறகே பிரெஞ்சிந்திய மக்கள் விடுதலை பெற்றார்கள். ஆம்; இந்தியா விடுதலை பெற்ற தன் எதிரொலியாகத்தான் பிரெஞ்சிந்தியா விடுதலை பெற்றிருக்கிறது.

பிரெஞ்சுப் புதுவையில் அரசியல் கட்சிகளிடையே அபிப்பிராய பேதங்கள் நீடித்திருந்த வரையில் அன்னிய சாம்ராஜ்யம் அங்கே நிலைத்திருக்க முடிந்தது. ஆம், பிரெஞ்சிந்திய தமிழர்கள் பிரிந்திருந்தார்கள்; ஆகவே, பிரெஞ்சு ஆட்சி அவர்களைப் பிரித்தாண்டது. ஆனால் மக்கள் பிரிவினையை யொழித்து ஒற்றுமை அடைந்ததும், பிரித்தாண்ட அன்னி

யர்கள் பின்வாங்கி ஓடுகிறுர்கள். மக்கள் ஒற்றுமைப்பட்டால் எப்படிப் பட்ட சக்தி வாய்ந்த சாம்ராஜ்யத்தையும் ஆயுதமில்லாமலே அழித்து விட முடியும் என்பதற்கு இது சரியான அத்தாட்சியாகும். சுருங்கச் சொன்னுல், பிரெஞ்சிந்திய மக்களின் வெற்றிக்கு பயன்பட்ட கருவி ஆயுதம் அல்ல; அஹிம்சா நெறியே!

பிரெஞ்சிந்தியப் பகுதி என்பது அப்படியொன்றும் பெரிய பிரதேசம் அன்று. சுமார் 180 மைல் சதுர மைல்களுடையது. அதுவும், தொடர்ந்தாற்போல் உள்ள நிலப் பரப்பன்று. பல கூறுக சிதறிக் கிடந்த சின்னஞ் சிறு பண்ணைகள் போன்றதுதான். ஆயினும், அடிமைத்தனத்தின் கொடுமை அடிமைப்பட்டுள்ள பிரதேசத்தின் அளவைப் பொறுத்ததல்ல. எவ்வளவு சிறிய பிரதேசமாயினும் அன்னியருக்கு அடிமைப்பட்டு இருப்பது நரகவாழ்வினும் கொடுமையானதாகும். அதனுற்றுன், பிரெஞ்சிந்திய தமிழர்கள் விடுதலை கோரினர். இந்தியத் தமிழர்களும் அதற்கு தார்மீக ஆதரவு தந்தனர்.

பிரெஞ்சிந்தியத் தமிழர்கள் தங்கள் சுதந்திரத்தைத் தங்களுடைய சுய முயற்சியாலும் உழைப்பாலுமே அடைந்தனர். அதற்காக அவர்களை மனமாரப் பாராட்டுகின்ருேம்.

விடுதலைப் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகளுக்கு நமது வீர வணக்கத்தைச் செலுத்துகின்ருேம். பல்லாண்டுகளாக தாயகத்தோடு சேரவேண்டுமென்று தவம் கிடந்து வரம் பெற்ற பிரெஞ்சிந்தியத் தமிழர்களை, "தாயகத்துக்கு வாரீர்! வாரீர்!!" என்று மனமுவந்து வரவேற்கின்ருேம்.

மேலட்டைச் சித்திரம் :

மகிழ்ச்சித் திருநாளில்...!

உலகத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்தோடும் நன்னுள். நரகாசுரன் ஒழிந்த நாள், உலகத்தை விட்டுத் தீமை மறைந்த நாள் என்று முதியோர் குதூகலிக்கின்றனர். மத்தாப்பும், சின வெடியும் கொளுத்திப் பார்த்து மனம் பூரிக்கும் இனிய நாள், என்று சின்னஞ் சிறு குழந்தைகள் வட்டாரத்திலே ஆனந்த அலை பொங்கி எழுகிறது. புது மணமக்களின் புதுமை இதயத்தைப் பற்றிக் கூறவா வேண்டும். 'தலை தீபாவளி' இளைஞர்களின் மனப் பூந்தோட்டத்தில் பெய்யும் இன்ப மழையல்லவா! இந்த இன்ப நேரத்திலும் இதோ இந்த மதிவதனத்திலே ஏன் ஏக்கத்தின் நிழல்? சாதாரண விஷயமாகத்தான் இருக்க முடியும். அவள் இதயக் கடவுளின் வருகையில் சற்று தாமதமாகிவிட்டிருக்கலாம், இந்த இனிய முகத்தின் சோக நிழலில்தான் என்ன அன்பு. தீபாவளி தமிழ் மக்களின் வாழ்வோடு ஒட்டிய திருநாள்.

வானகத்துப் பத்தினி

ம. பொ. சிவஞானம்

தமிழினத்தார் புதுமையை நுகர வேண்டுமானால், முதலில் பழமையைப் புரிந்துகொள்ள வேண்டும். பழங்காலத்தில் தமிழரிடையே நிலவிவந்த பழக்க வழக்கங்களை ஆராய வேண்டும். 'நேற்று' என்ற ஒன்று இல்லாமல், 'இன்று' என்ற ஒன்று இல்லை. அது போலவே, 'இன்று' என்பதில்லாவிடில், 'நாளை' என்ற ஒன்றும் இருக்க முடியாது. ஆம்; நேற்று—இன்று — நாளை ஆகிய மூன்று காலமும் ஒன்றோடொன்று தொடர்புடையது. நேற்றிலிருந்துதான் இன்று பிறந்தது; இன்றிலிருந்துதான் 'நாளை' என்ற ஒன்று பிறக்கப் போகிறது. இது காலக் கணக்கு.

அது போலவே, இன்று நாம் எவையெல்லாம் 'புதுமை' என்று நினைத்துக் கொண்டிருக்கிறோமோ, அவையெல்லாம் கடந்துபோன பழமையிலிருந்துபிறந்தவைதான். அவை கூட, நிலையான புதுமையல்ல; காலப் போக்கில் பழமையாகிவிடக் கூடும்.

ஆகவே, பழமையென்று எதையும் கழித்து ஒதுக்காமல், அவற்றின் உண்மையை விருப்பு வெறுப்பின்றி ஆராய்வோமாக.

'கற்பு' என்பது உலகுக்கெல்லாம் தேவையான பொதுப் பண்பு. ஆயினும், அப்பண்பு தமிழகத்தில் மட்டுமே தனி மதிப்போடு விளங்குகின்றது. கற்பு பெண்ணுக்கே உரித்தென்பது வட நூலார் கொள்கை. அது, ஆண் — பெண் ஆகிய இரு பாலார்க்கும் தேவை யென்பது தமிழ் மொழிப் புலவர்களின் தீர்ப்பு. வடமொழியில் 'பதிவிரதா தர்மம்' என்ற பெயரிலேயே கற்பு என்னும் பண்பு குறிப்பிடப்படுகிறது. இந்த சொற்றொடரை ஆராய்ந்தால் வடமொழியாளர் கற்பைப் பெண்பாலாருக்கே உரித்தாக வைத்திருப்பது புலப்படும். ஆனால், தமிழில், 'கற்பு' என்ற சொல், 'பால்' வேற்றுமையோடு உறவுடையதன்று. அஃது, ஆண் – பெண் ஆகிய இரு பாலாருக்கும் பொருந்தக் கூடிய பொதுச் சொல்லாகவே வழங்கி வருகின்றது. தமிழினத்தார் பெண்ணடிமை பேணாதவர்கள் என்பது இதனாலும் புலனாகின்றதல்லவா?

கற்புக்குத் தமிழர் கண்ட இலக்கண வழி வையத்தில் வாழ்ந்து காட்டிய பெண்களில் கண்ணகி தேவி தலைசிறந்தவள் என்பது எல்லோரும் அறிந்ததே. அதனாலேயே, அம்மங்கை 'பத்தினித் தெய்வம்' எனப் பாராட்டப்பட்டதோடு, சேர மன்னன் அவளுக்குச் சிலையெடுத்து வணங்கினான்; பாண்டியன் வெற்றிவேற் செழியன் அந்த வீர பத்தினிக்கு விழா நடத்தும் வழக்கத்தைத் துவக்கி வைத்தான். அன்று தொட்டு இன்று வரை 'மாரி விழா' என்ற பெயரில் தமிழ் மக்கள் ஆடித் திங்கள் தோறும் கண்ணகி விழா நடத்துவது நாம் கண்டுவரும் காட்சி.

தமிழ் இலக்கியங்களில் மற்றொரு பத்தினிப் பெண்ணுக்கும் சிறப்பு கூறப்படுகிறது. அவள் வசிட்ட முனிவரின் மனைவி எனப்படும் அருந்ததியாவாள். இவள் இன்றளவும் மக்களுடைய கண்களுக்குக் காட்சியளித்துப் பெண்ணினத்தின் கற்புக்குச் சாட்சியாகவும் இருப்பதாக சமய வாதிகள் நம்புகின்றனர். ஆனால், அருந்ததி காட்சியளிப்பது, வையத்திலல்ல; வானத்தில்! அங்கும் பெண் வடிவிலல்ல; நட்சத்திர உருவில்!

இக்காலத்திலும் தமிழகத்தில், இந்துக்களுடைய திருமணங்

களில். அம்மி மிதித்து அருந்ததி பார்க்கும் வழக்கம் அனுட்டிக்கப் படுகின்றது. அம்மிக் கல்லை கற்பிழந்த அகலிகையாகவும், வானத்தில் காணும் நட்சத்திரத்தைக் கற்புத் தெய்வம் அருந்ததி யாகவும் நம்புகின்றனர் மக்கள். ஆகவே, திருமண இல்லங்களில், மணமகள் அம்மியைக் காலால் மிதித்து, வானத்திலுள்ள அருந்ததி நட்சத்திரத்தைக் கணவன் காட்டக் காண்பது வழக்கமாக இருந்து வருகிறது.

இப்படி, அம்மி மிதித்து அருந்ததி பார்க்கும் வழக்கம் சங்ககால தமிழகத்திலிருந்ததாகத் தெரியவில்லை. பிற்காலத்தில் பிறந்ததாகத்தான் அறிகிறோம்.

ஆனால், அருந்ததிபற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றிருக்கின்றன.

பெருநல் வானத்து
வடவயின் விளங்கும்
சிறுமீன் புரையும்
கற்பின் நறுநுதல்

எனப் பெரும்பாணாற்றுப் படையிலும்,

வடமீன்போல் தொழுதேத்த
வயங்கிய கற்பினள்

எனக் கலித் தொகையிலும்,

செம்மீன் அனையள்நின்
பொன்னகர்ச் செல்வி

எனப் பதிற்றுப் பத்திலும், வானத்துப் பத்தினியான அருந்ததியைப் பற்றி குறிப்பிடப்படுகின்றன.

அருந்ததி பார்க்கும் வழக்கம் பற்றி சீவக சிந்தாமணியில்தான் முதன் முதலாகக் குறிப்பிடப்படுகிறது.

விளங்கொளி விசும்பிற் பூத்த
அருந்ததி காட்டி

சீவகன் இலக்கணை என்பாளை மணந்ததாகத் திருத்தக்க தேவர் கூறுகின்றார். இங்கும், அம்மி மிதிக்கும் வழக்கம் இருந்ததாகக் கூறப்படவில்லை.

சிந்தாமணிக்குப் பின் தோன்றியதாகச் சொல்லப்படும் கம்பராமாயணத்தில், கடிமணப் படலத்துள்,

வலங்கொடு தீயை
வணங்கினர் வந்து
பொலம்புரி நூலவர்
செய்பொருண் முற்றி
இலங்கொளி அம்மி
மிதித்தெதிர் நின்ற
கலங்கலில் கற்பின்
அருந்ததி கண்டார்

என்ற பாடலில், ராமனுக்கும் சீதைக்கும் திருமணம் நடைபெற்றபோது அம்மி மிதித்து அருந்ததி காணும் சடங்கு நிகழ்ந்ததாகக் கம்பர் அறிவிக்கின்றார்.

கம்ப ராமாயணத்திற்குப் பின்னர் இயற்றப்பட்ட 'நைடதம்' என்னும் நூலில், 'மணம்புரி படலத்'தில் தமயந்தியை மணந்த நளன்,

பங்கயப் பதம்
பைம்பொனின் அம்மிவைத்து
அங்கண் வானத்(து)
அருந்ததி காட்டினன்

என்கின்றார் அதிவீரராம பாண்டியனர்.

சிலப்பதிகாரத்தில், கண்ணகி—கோவலன் திருமணத்தைக் கூறும் இளங்கோவடிகள்,

தீதிலா வடமீனின்
திறமிவள் திறம்

* * *

அங்கண் உலகில்
அருந்ததி யன்னாள்

என்ற வரிகளில், கண்ணகியை அருந்ததியோடு ஒப்பிட்டு அவளுக்குச் சிறப்பு கூறியதன்றி, திருமணத்தில் கண்ணகி அம்மி மிதித்து அருந்ததிகாணும் சடங்கு நிகழ்ந்ததாகக் கூறவில்லை.

இதனல், இந்தச் சடங்கு சிந்தாமணி இயற்றப்பட்ட காலத்திலிருந்துதான் தமிழருடைய திருமணங்களில் இடம் பெற்றதென நிச்சயிக்க முடிகிறது.

அருந்ததியின் கணவராகச் சொல்லப்படும் வசிட்ட முனிவர், வட நாட்டில் வாழ்ந்ததாக வடமொழி நூல்கள் அறிவிக்கின்றன. ஆகவே, அருந்ததி வட நாட்டுப் பெண் என்பதை ஐயமற அறிகிறோம். இருந்தும், வடக்கே உள்ள இந்துக்களின் திருமணங்களில் அம்மி மிதித்து அருந்ததி காணும் வழக்கம் எந்தப் பகுதியிலும் இருப்பதாகத் தெரியவில்லை. இல்லையென்றே சொல்லப் படுகின்றது. ஆகவே, இந்தச் சடங்கு தமிழகத்தில் அல்லது தென்னட்டில் மட்டுமே நிகழ்ந்து வருவது நிச்சயமாகிறது.

பொதுவாக, வானத்து நட்சத்திரமொன்றை, வையத்து வாழும் பெண்கள் கணவனைப் பிரியாமல் வாழும் கற்பு நெறிக்குச் சான்று கூறுவது சங்க காலத் தமிழரிடையேயும் இருந்தது. இதையொட்டியே, பிற்காலத்தில் திருமணச் சடங்குகள் வகுத்த வடமொழியாளர்கள், வானத்து மீனை அருந்ததியாக்கி, வையத்துப் பெண்கள் தங்கள் திருமணத்தின் போது, வழிபடும்படி செய்திருக்கலாமென்று தோன்றுகிறது.

இன்று திருமணங்களில் கற்புக்கு வழி காட்டியாக எண்ணி வையத்து மாதர்கள் வணங்கும் வானத்து மீன், சங்க இலக்கியங்களில், 'வடமீன்', 'சிறு மீன்', 'சாலி யொருமீன்' 'செம்மீன்' எனக் குறிப்பிடப்பட்ட தன்றி, 'அருந்ததி' என்ற பெயரில் கூறப்படவில்லை.

ஆனல், சங்க இலக்கியங்களில் ஒன்ருகக் கருதப்படும் 'ஐங்குறு நூறு' என்ற நூலில் மட்டும் 'அருந்ததியனைய கற்பு' என்று கூறப்படுகிறது. சங்க இலக்கியங்களில், ஐங்குறு நூறு ஒன்றில் மட்டுமே அருந்ததி இடம் பெற்றது ஆராயத் தக்கதே.

பேச்சின் பெருமை!

ஜி. உமாபதி

பேச்சுச் சக்தி படைத்தவர்கள் தான் உலகில் புகழ் பெற முடிந்தது. ஆம்; அந்தச் சக்தி தன்னைத் தானே அறிமுகப்படுத்திக் கொள்ளும் ஒரு ஆற்றல் படைத்தது. அத்துடன் அந்த சக்தி படைத்த ஒழுக்க முள்ளவர்களுக்கு தன் கருத்துக்களை அப்படியே எழுதும் சக்தி பெற்று விட்டால் அப்போது நாட்டை ஆளும் சக்தியையும் பெற்று விடுகிறார்கள். இந்த இலக்கணத்திற்கு நம் ஏகத் தலைவன் நேருவே சான்று.

மற்ற ஒவ்வொரு துறைகளிலும் சக்தி பெற்றவர்கள் சமுதாயத்தில் தன்னைத் தானே அறிமுகப் படுத்திக் கொள்ள முடிவதில்லை.

இவர்களின் உண்மை உழைப்பின் சிறப்புகளின் பெருமைகளைச் சொல்லி அறிமுகப்படுத்தி பெருமை தேடித்தர வேண்டுமானால், பேச்சுச் சக்திப் படைத்தவர்களால்தான் முடிகிறது.

ஒரு ஓவியன் அற்புதமான ஓவியத்தைத் தீட்டுகிறான். அந்தக் கலைஞன் அந்தஓவியத்தை உயிரோவியமாகத் தீட்டி ஒரு பொருட்காட்சி சாலையில் வைக்கின்றான். அந்த ஓவியங்களைப் பார்க்க வரும் மக்கள் அந்தக் கலைஞன் தீட்டிய ஓவியத்தையும் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் அவர்களில் கலைக் கண்களோடு அதில் பொதிந்துள்ள கலை நுட்பங்களை எல்லாம் ஆராய்ந்து பார்க்கும் திறன் பலருக்கு இருப்பதில்லை. அதன் அருகில் தான் வீற்றிருக்கிறான் அந்த ஓவியக் கலைஞனும்.

ஆனால் அதன் சிறப்புக்களை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் பேச்சுச் சக்தி பெற்றானில்லை. அங்கு பேச்சுச் சக்தி படைத்தவர் ஒருவரிருந்து அந்த ஓவியத்தைக் காட்டி, "அந்த நீரோடையைப் பாருங்கள். அதன் சலசலப்பு ஓசை நமக்குக் கேட்கிறது. அதன் அருகேயுள்ள மரத்தின் மீது உள்ள கூட்டில் தாய்ப்பறவை தன் குஞ்சுகளுக்கு இரை தந்து கொண்டிருக்கும் போது, அந்த குஞ்சுப் பறவைகளின் இனிய கீதத்தைக் கேளுங்கள். அந்த மரத்தின் அருகேயுள்ள செடி கொடிகளின் அருகில் ஒரு காதலன் காதலி உட்கார்ந்து பேசிக் கொண்டு இருக்கும் அழகையும், அந்த ஓவியத்தின் பலப் பல சிறப்புக்களை எல்லாம் சொல்லி, இதைத் தீட்டியவர் இவர்தான் என்று, அந்த ஓவியக் கலைஞரை மக்கள் முன்னே அறிமுகப்படுத்த முடிகிறது.

ஒரு சிற்பி கற்பாறைகளை எல்லாம், தன் கலைக் கண்களோடு பார்த்து என்னென்ன பாறையில் எதையெதை வடிக்கலாம் என்று முடிவுக்கு வந்து ஒரு பாறையில் அழகு பொதிந்த ஒரு பெண் உருவத்தை வடிக்கிறார். அந்த ஒரு சிற்பத்தின் சிறப்பையும் பேச்சுச் சக்தி படைத்தவர்கள் அதை வடித்த சிற்பியின் கலைக் கண்களை விட மிக நுட்பத்துடன் ஆராய்ந்து ஆஹா — ஆஹா — என்ன அழகான கண்கள். நகக் கண்கள், அந்த இடையின் நெளிவும், மங்கையொருவளே வீற்றிருக்கிறாள். இப்படி அதன் எல்லா சிறப்புகளையும் சொல்லும் பொழுதுதான் அந்தச் சிற்பியே, தான் வடித்துப் பார்த்து மகிழ்ந்ததை விட, இப்போது அதிகமாகப் பூரிப்படைகிறான்.

எத்தனையோ கவிஞர்களின் கவிதைகளைப் படித்து இன்புற்றிருக்கிறோம். ஆனால் அந்தக் கவிஞன் அளித்த கவிதைகளின் கருத்துக்களையெல்லாம் பரிபூரணமாக நம்மால் புரிந்து கொள்ள முடிவதில்லை. பேச்சுச் சக்தி படைத்தவன் ஒரு கவிதையை எடுத்துக் கொண்டு அதன் ஒவ்வொரு

பொருள் பதிந்த விளக்கங்களைத் தந்து, அந்தக் கவிஞனின் பெருமையையே உயர்த்தி விடுகிறான். அப்போதுதான் அந்த தீர்க்க திருஷ்டிக் கவிஞனின் பெருமையை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

இசைவாணர் பக்க வாத்தியக் குழுவினரோடு, பாடிக் கொண்டிருக்கும் போதுதான் நாமெல்லோரும் ரசித்துக் கொண்டிருப்போம். ஆனால் அவ்விசை விழாவிற்கு ஓர் பேச்சுச் சக்தி படைத்தவர் வந்திருப்பார். அந்த இசை வாணனைப் பாராட்ட சபையோர்களைப் பார்த்து "இவர் பாடியதை இது வரையில், உங்களையே மறந்து கேட்டுக் கொண்டிருந்தீர்கள். ஆம்! அவர் பாடிய ராகமாலிகையைக் கேட்டுக் கொண்டிருந்தபோது என்னையே நான் மறந்து விட்டேன்" என்று அவர் பாடிய நயபாவங்களை யெல்லாம் கூறி அவ்விசை வாணருக்கு இன்னும் அதிக உயர்வைத் தேடித் தந்துவிடுகிறார்.

பொருளாதார நிபுணர்கள் நாட்டின் உயர்வுக்காக எத்தனையோ, புதிய புதிய திட்டங்களை யெல்லாம் வகுக்கின்றார்கள்.

வான சாஸ்திரிகள் நட்சத்திர ஆராய்ச்சி செய்து நூறு ஆண்டுகளுக்குப் பின்னே, நடக்கப் போகும் வான விசித்திரங்களை யெல்லாம் சொல்லுகின்றார்கள்.

மருத்துவ மேதைகள் மனிதர்கள் நோயற்ற வாழ்வு வாழ வேண்டுமென்று அந்த அருங்கலையில் அரும் பாடுபடுகின்றனர்.

பொறி இயல் நிபுணர்கள் மாபெரும் நீர்த் தேக்கங்களைக் கட்டுவதற்கான திட்டங்களை வகுத்துத் தந்து லக்ஷக்கணக்கான ஏகர் நிலங்களை செழிப்புள்ள பூமியாக பயிர் செய்ய பண்படுத்துகின்றார்கள்.

விஞ்ஞானிகள் எவ்வளவோ புதிய புதிய இயந்திரங்களையும், ஆயுதங்களையும் கண்டுபிடித்து மக்களின் ஆக்க சக்திக்கும், அழிவுக்கும் காரணமாக யுள்ளார்கள்.

இவர்கள் செய்த அற்புதங்களை யெல்லாம் நாட்டு மக்கள் புரிந்து கொள்ளச்செய்வது பேச்சுச் சக்தியும் எழுதும் திறமையும் கொண்டவர்களாலேயே முடிகிறது. ஆதலால் பேசிப் பழக வேண்டும் என்பதற்காகத்தான் மேலே சில உதாரணங்கள் காட்டியிருக்கிறேன். பேச்சுச் சக்தியைப் பற்றி இப்படி ஒரு சிறு கட்டுரை மூலமாக விளக்கிவிட முடியாது. இன்றுள்ள உலக மாறுதலுக்கு அந்த பேச்சுச் சக்தியே காரணம். இதற்குத்தான் சிறு சிறு சங்கங்கள் அமைத்து அதில் வாரத்துக்கு ஒரு முறையோ அல்லது இரு முறையோ பேச்சுப் பயிற்சிக் கூடத்தை அமைத்து ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பொருளைப் பற்றி – நாட்டின் முன்னேற்றம் – விஞ்ஞானம் – கல்வி – சுகாதாரம் – நல்லொழுக்கம் – கலாசாரம் பொருளாதாரம் – அன்பு – இன்னும் மக்கள் நலனுக்கு தேவையான பொருள்களைப் பற்றி யெல்லாம் பேசுவதற்குத் திறன் பெற்று – அது போலவே நடக்க முற்பட்டால் தான் நாட்டுக்கு நல்வாழ்வு கிடைக்கும்.

பேசப் பழகுங்கள் என்று சொன்னவுடன் அந்தப் பேச்சுத் திறனை நல்ல முறையில் பயன்படுத்த முயல வேண்டும். அழிக்கும் சக்தியாகிய அணுகுண்டு கண்டுபிடித்த விஞ்ஞானியையும் – காக்கும் சக்தியாகிய பெனிசிலின் மருந்தைக் கண்டுபிடித்த விஞ்ஞானியையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது காக்கும் சக்தி கண்ட அந்த விஞ்ஞானியைத்தான் பாராட்ட முடிகிறது. அது போல் பேசும் திறன் படைத்தவர்கள் மற்றவர்களை மாற்றுவதற்கோ – நாட்டை நாசமாக்கும் சூழ்நிலையை உண்டாக்கவோ தங்கள் திறனைப் பயன்படுத்தக் கூடாது. நாட்டின் முன்னேற்றத்துக்கான பயனுள்ள கருத்துக்களை பண்புள்ள சொற்களால் நல்ல முறையில் பயன்படுத்தும் பேச்சுச் சக்தி தான் நமக்குத் தேவை என்று கூறுகிறோம்!

யாருக்கு தீவளி?

பிரம்மம்

பெண்: தீவளி வருகுது தீவளி வருகுது ஆசை மாமா!

ஆண்: தீவளி வந்தா ஆவது என்ன, பேதைப் புள்ளே?

பெண்: தீவளிச்சேலே தீவளிக் கோடி வாங்கவேணும்
தீவளிப் பண்டிகைப் பச்சணமெல்லாம் பண்ணவேணும்.

ஆண்: சிறு கீரை வித்துச் சேத்த பணத்திலே சேலே வாங்கு!

பெண்: சிறு கீரைச் செடிக்கு வெயிலினாலே வெளச்சலும் பத்தல்லே!

ஆண்: செம்மறிக்குட்டியைச் சந்தைக்குப் போட்டுச் சேலே வாங்கு!

பெண்: செஞ்சொறி புடிச்ச செம்மறி ஆடு சரியாப்படியாது!

ஆண்: சேவலே வித்துச் சேரும் பணத்திலே சேலே வாங்கு!
தேவலே அதிலே மேவிலே வந்தா வேட்டியும் வாங்கு!

பெண்: கோளியை வித்துக் கோடியை வாங்கினா கேலி ஆகாதா?
கூலிப் பணத்தைப் போட்டு வாங்கினா சேலே வாராதா?

ஆண்: கூலிப் பணத்திலே செல்லாக் காசும் கூட மிச்சமில்லே!
கூளுக்குப் போட்டே அத்தனை பணமும் காலி ஆச்சல்லோ!

இருவரும்: பணத்தை நெறைய வச்சுப் பொளக்கிற
பணக்காரங்களுக்கே, பண்டிகை தீவளிவந்துட்டுப்
போவுது நமக்கதேதுக்கு?

தீபாவளியன்று
M.R.ராதா நடிக்கும்
நேஷனல் பிக்சர்ஸ்
தயாரித்த
ரத்தக்கண்ணீர்
டைரக்ஷன்: கிருஷ்ணன் பஞ்சு
கதை வசனம்: திருவாரூர் K. தங்கராசு

ஆப்டோன், லைன்,
கலர் பிளாக்குகள்,
ரப்பர் ஸ்டாம்புகள்,
எங்கிரேவிங் வேலைகள்,
செய்யப்படும்.

ஜீதா அண் கோ,
17. பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, மதராஸ்-1.

உமா
சந்தா விபரம்

வருட சந்தா

இந்தியா, இலங்கை	ரூ.	3
வெளி நாடுகள்	ரூ.	4

ஆறு மாதத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

உமா
4/32, தாதா முத்தியப்பன் தெரு,
சென்னை-1.

புஷ்கலா கூந்தல் தைலம்

மாதர் குலத்தின்
வசீகர பொக்கிஷம்.

தயா காஸ்மெடிக்ஸ் (இந்தியா) லிமிடெட்
அமிஞ்சிக்கரை, சென்னை-10.

அலை ஓய்ந்தது

ஏ. சண்முகம்

"சாவித்திரி அங்கே சேரிப் பிள்ளைகளுக்காக ஒரு இரவு பள்ளிக் கூடம் நடத்துகிறாள். மற்றும் அவர்களுக்கு பல வழிகளிலும் நல்ல ஆலோசனைக் கூறி உதவி செய்கிறாள். சேரிமக்கள் தங்களால் இயன்ற பொருளுதவி செய்கின்றார்கள். அந்த உதவி அவள் வாழ்வுக்கும் போதுமானதாக இருக்கிறது...."

"சபாஷ்.... சிரமப்பட்டு பல விஷயங்களைப் புரிந்து கொண்டிருக்கிறாய்...." என்று கூறிவிட்டுச் சிரித்தார் கனகசபை. பிறகு சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு "சாவித்திரி இரவு நேரங்களில் திருவரங்கநாதர் வீட்டுக்கு வந்து சந்தித்துவிட்டு போவதில் கூட ஏதாவது அர்த்தமிருக்கத்தான் செய்யும்! இல்லையா!" என்றார்.

"ஒருக்காலும் இருக்காது...." என்று கத்தவேண்டும் போலிருந்தது ஆரோக்கியத்திற்கு. ஆனால் கனகசபையும் அனாவசியமாகப் பேசமாட்டார் என்று அவனுக்குத் தெரியுமாதலால் மௌனமாக இருந்துவிட்டான்.

சிறிது நேரங்கழித்து ஆரோக்கியம் என்னவோ பேச வாயெடுத்தான். அதற்குள் ஒரு விசித்திர நிகழ்ச்சி நடந்துவிட்டது.

அவர்களுக்கு மிகவும் சமீபத்தில் யாரோ ஒரு ஆள் நடந்து அவர்களைக் கடந்து அப்பால் சென்றார். அவர்களைக் கடக்கும்போது சரியாக கவனிக்காததால் அது யாராக இருக்கும் என யூகிக்க முடியவில்லை. அந்த ஆளின் கையில் நீண்ட கத்தியொன்று இருப்பது போலத் தோன்றியது.

அந்த நிகழ்ச்சியால் கனகசபையே அதிர்ச்சியடைந்துவிட்டார். அது யாராக இருக்கும் என்று யோசனை செய்து பார்த்தார். புலப்படவே இல்லை. அந்த உருவத்தைப் பின் தொடரலாமா என்று ஒரு கணம் எண்ணினார். ஒன்றும் புரியாமல் அப்படிச் செய்வது நல்லதல்ல என்று அவருக்குத் தோன்றியது! ஒருவேளை அது தன்னைத் தேடிவரும் திருவரங்கநாதரின் ஆளாக இருந்தால்...?

ஆகவே இருந்த இடத்தில் இருந்த வண்ணம் அந்த உருவத்தின் நடவடிக்கைகளைக் கவனிப்பது என்று தீர்மானித்தார்.

அந்த உருவம் கொஞ்ச தூரம் போய் சுற்றுச் சுவர் ஓரமாக நின்று திருவரங்கநாதரின் வீட்டில் வெளிச்சம் தெரிந்த ஜன்னலை அசையாமல் நின்று பார்த்தது. பிறகு சுவற்றின் மீது ஏறி அப்புறம் குதிக்க முயற்சித்தது. அந்த வேலையை அவ்வளவு சுறு சுறுப்பாக செய்யாததை கனகசபை கவனித்தார்.

அந்த உருவத்தை வேலைக்காரர்களில் யாரோ பார்த்துவிட்டார்கள் போலிருக்கிறது. மாளிகை

> பொருளாதார திட்டங்கள் மனித குலத்தினின்று வறுமை நீங்க மனிதன் செய்யும் முயற்சி, ஆனல் இதுவே மனித குலத்தின் ஒரு பகுதியை வறுமைக்குட்படுத்தவும் செய்கிறது.
>
> —வி. ஸ்ரீ. சர்மா.

யின் முன் புறமிருந்து "திருடன் விடாதே....பிடி...." என்ற கூச்சல் எழுந்தது. சுவற்றின் மீது ஏற முயற்சித்துக் கொண்டிருந்த உருவம் சட்டென வெளிப்புறம் குதித்து ஓடத் தொடங்கியது. பின் தொடர்ந்து ஓடினல் அந்த உருவம் யார் என்பதைத் தெளிவாக கண்டு பிடித்துவிட முடியும். ஆனல் அந்த சூழ்நிலையில் அந்த இடத்தை விட்டு அசைவது தங்களுடைய பாதுகாப்புக்கே ஆபத்து என்று பட்டதால் கனக சபையும் ஆரோக்கியமும் அப்படியே மறைவாகக் கீழே உட்கார்ந்துவிட்டனர்.

8

பழையனூர் குன்றின் மத்திய பாகத்தில் திருவரங்கநாதர் ஒரு சிறு உல்லாச மாளிகை அமைத்திருந்தார். அந்த மாளிகை கிட்டத்தட்ட குன்றின் பின்பக்கம் அமைந்திருந்தது. சாதாரணமாக அந்தப் பக்கம் ஜனநடமாட்டம் இருப்பதில்லை. திருவரங்கநாதரின் கட்டுப்பாடும் உடன் சேரவே அந்தப் பக்கம் யாருமே தலை காட்டுவதில்லை.

உல்லாசமாக காற்று வாங்குவதற்காக திருவரங்கநாதர் அந்தப் பக்கம் வருவார் என்பது சாதாரணமாக ஜனங்களிடையே நிலவி வந்த அபிப்பிராயம். ஊரில் எவனை ஏமாற்றலாம், எவனைக் கெடுக்கலாம் என்றெல்லாம் திருவரங்கநாதர் தன் சக தோழர்களோடு ஆராய்ச்சி செய்யும் சதியாலோசனை மண்டபந்தான் அது என்று சிலர் பேசிக்கொண்டனர். வேறு சிலர் அந்த மாளிகைதான் அவருடைய காமவெறியைத் தணித்துக்கொள்ளும் கேளிக்கை மண்டபம்; ஊரிலுள்ள அழகான பெண்களின் கற்பைச் சூறையாடும் கிடங்கு அது என்றும் கூறினர். திருவரங்கநாதரோ மன அமைதி பெறுவதற்காகவும், தன் குல தெய்வத்தை மனதார வணங்குவதற்காகவும்தான் அங்கு செல்வதாகக் கூறிக் கொள்வார்.

முன்பெல்லாம் அந்த மாளிகைக்கு திருவரங்கநாதர் விஜயம் செய்வார். சில சமயம் பானுமதியோடு வருவதும் உண்டு. கொஞ்ச காலமாக அவர் அந்தப்பக்கம் வருவதே இல்லை. பொதுவாக அவர் வெளியே உலாவக்கூட புறப்படாமல் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடந்தார்.

சாவித்திரி திருவரங்கநாதரை அவர் வீட்டில் சந்தித்த சில தினங்களுக்குப் பிறகு ஒருநாள் இரவு சுமார் எட்டு மணி இருக்கும். திருவரங்கநாதரின் மேற் குறிப்பிட்ட அந்தரங்க மாளிகையினுள் சிறு விளக்கு ஒன்று மங்கிய ஒளியை பரப்பிக்கொண்டிருந்தது. வெளியிலிருந்து நோக்கினல் உள்ளே விளக்கெரிவது அவ்வளவு சுலபத்தில் தெரியாதபடி விளக்கு வைக்கப்பட்டிருந்தது.

ஒரு சிறு கட்டிலின் மீது திருவரங்கநாதர் சாய்ந்த வண்ணம் அமர்ந்து ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். நெற்றிப் பொட்டைக் கைவிரல்களால் அழுத்திப் பிடித்தவண்ணம் யோசனை செய்வதும் பிறகு வாசல் பக்கம் ஆவலோடு எட்டிப் பார்ப்பதுமாக அவர் உட்கார்ந்திருந்தார்.

சற்று நேரத்திற்கெல்லாம் யாரோ வரும் காலடியோசை கேட்கவே நிமிர்ந்து உட்கார்ந்தார். காலடியோசை மிகவும் அருகில் கேட்டதும் "ஆஞ்சனேயா....?" என்று ஆவலுடன் கூப்பிட்டார் திருவரங்கநாதர்.

அவர் எதிர்பார்த்தது போலவே ஆஞ்சனேயன் புன்சிரிப்போடு உள்ளே பிரவேசித்தான். பிறகு பின்புறம் திரும்பி யாரையோ உள்ளே வரலாமே....'' என்றான் மரியாதையுடன்.

தயங்கித் தயங்கி சாவித்திரி உள்ளே வந்தாள். கருப்புச் சேலையொன்றை அவள் உடல் முழுதும் போர்த்திக்கொண்டிருந்தாள்.

''வா சாவித்திரி....'' என்று ஆர்வம் ததும்பும் குரலில் அவளை வரவேற்றார் திருவரங்கநாதர்.

சாவித்திரி போர்த்தியிருந்த சேலையை எடுத்து பக்கத்தில் கிடந்த மேஜைமீது வைத்தாள். பிறகு ஆஞ்சனேயன் இழுத்துப் போட்ட ஒரு பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்தாள்.

திருவரங்கநாதர் ஆஞ்சனேயன் முகத்தைப் பார்க்கவே அவன் வணங்கிவிட்டு வெளியேறிவிட்டான்.

திருவரங்கநாதர் எழுந்து வந்து மேஜை மீதிருந்த 'பெட்ரூம்' விளக்கைக் கொஞ்சம் தூண்டிவிட்டு வேறொரு நாற்காலியை இழுத்துப் போட்டு சாவித்திரியின் எதிரில் உட்கார்ந்தார்.

சாவித்திரி அந்த மங்கிய ஒளியில் திருவரங்கநாதரின் முகத்தைக் கவனித்தாள். அவர் முகத்திலே பரவியிருந்த கவலைக் குறிகளும் சோர்வும் அவளையுமறியாமல் அனுதாபத்தை உண்டாக்கியது.

திருவரங்கநாதர் சாவித்திரியின் முகத்தை நிதானமாகப் பார்த்தார். பிறகு ''என் வேண்டுகோளுக்கு இரங்கி நீ வருவாயோ, மாட்டாயோ என்று பயந்தேன். நல்லவேளை, என்மீது கொஞ்சம் நம்பிக்கையிருப்பதாகத் தோன்றுகிறது....'' என்று கூறிச் சிரித்தார். அந்தச் சிரிப்பு ஜீவனற்றுக் கிடந்தது.

சாவித்திரி பதிலொன்றும் பேசவில்லை. திருவரங்கநாதர் பேச்சைத் தொடர்ந்தார். ''ஊரில் எல்லோரும் என்னை அயோக்கியன் என்கிறார்கள். யார் யாரோ என்னைக் கொலை செய்ய சந்தர்ப்பத்தை எதிர்பார்க்கிறார்கள். இந்த சமயத்தில் என் மனதுக்கு ஆறுதலாக இரண்டு வார்த்தை பேச இந்த உலகத்திலேயே யாரும் இல்லை என்று எண்ணியிருந்தேன். என் அதிர்ஷ்டம் உன்னை எதிர்பாராத விதமாய் சந்திக்க நேர்ந்தது....'' பைத்தியம் பிடித்தவர் போல என்னென்னவோ பேசிக்கொண்டே சென்றவர் திடீரென ''உன் தந்தை சுகமாக இருக்கிறாரா? ஏதோ அடிக்கடி உடல் நிலைக் கோளாறு ஏற்பட்டு விடுவதாகக் கேள்விப்பட்டேனே!'' என்றார்.

சாவித்திரி ''உம்'' என்றாள். அதற்குமேல் ஒன்றும் பதில் பேசவில்லை.

''இன்று உன்னை எதற்காக வரவழைத்தேன் தெரியுமா? பாவமன்னிப்பு பெறுவதற்காக! சாகும் தருவாயில் இதுவரை வாழ்வில் தான் செய்த பாவங்களை மதத் தலைவரிடம் கூறி மன்னிப்புக் கோரினால் கடவுளால் அவன் மன்னிக்கப்படுவான் என்று கிருஸ்தவ மக்கள் நம்புகிறார்கள். இப்போது எனக்கும் அந்த நம்பிக்கை வந்திருக்கிறது. என்ன இருந்தாலும் நான் விரைவில் சாகப்போகும் மனிதன். என் வாழ்வு, இன்றோ—நாளையோ.... ஏன், இந்த நிமிஷமே கூட என் விரோதிகளால் முடிக்கப்படலாம். அதற்குள் என் தெய்வத்திடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும் என்றுதான் உன்னை வரவழைத்தேன். நீ மன்னிக்கிறாயோ இல்லையோ; அது பற்றி நான் கவலைப்படப் போவதில்லை....'' இதைச் சொல்லும்போது அவருடைய நாத் தழதழத்தது. குரல் கம்மியது.

சாவித்திரியால் பொறுக்கமுடியவில்லை. நாற்காலியை அவருக்கு மிகவும் சமீபத்தில் இழுத்துப் போட்டுக்கொண்டு ''இதெல்லாம்

என்ன பேச்சு....'' என்று பரிவு ததும்ப கண்டித்தாள்.

திருவரங்கநாதர் மெய்மறந்த நிலையில் பேசிக்கொண்டே யிருந்தார். ''இப்படியெல்லாம் யோக்கியன் மாதிரி பேசுகிறனே! கட்டின மனைவியை கைவிட்டு, ஊரை விட்டே ஓடிய அற்பனுக்கு அப்பொழுது மூளை எங்கே போயிற்று என்று உனக்குக் கேட்கத் தோன்றும். என்னுடைய இந்தப் பேச்சுக்களெல்லாம் உன் வயிற்றெரிச்சலை நிச்சயம் கிளப்பிவிடும். கணவனைப் பிரிந்து, தந்தையின் திரண்ட செல்வத்தை இழந்து, தாயை இழந்து, வாழ்வை தன்னந்தனியாக எதிர்த்துப் போராடக் கிளம்பிய உன் இதயம் என்ன பாடுபட்டிருக்கும் என்பதை நான் உணராதவனல்ல. இதையெண்ணி நான் எத்தனையோமுறை கண்ணீர் விட்டுக் கதறியழுதிருக்கிறேன். ஆனல் உன்னல் இதை நம்ப முடியாது''.

கல்யாணம் ஆன புதிதில் பரிவும் பாசமும் காட்டிய இவன் மிகக் குறுகிய காலத்தில் எப்படி நயவஞ்சகனக மாறினன் என்று உனக்கு ஆச்சரியம் ஏற்பட்டிருக்கும். என்னிடம் அளவுகுறையாக இருந்த பணப்பித்துதான் என்னுடைய நன்றிகெட்ட செயலுக்குக் காரணமாகும் என்று நீங்களெல்லாம் நினைத்திருப்பீர்கள். பணப்பித்தால் மனைவியையே நடுத்தெருவில் விட்ட பாதகன் என்று என்னைத் தூற்றியிருப்பீர்கள். ஆனல் நான் முழுக் குற்றவாளியல்ல என்பதை நீ மனதார உணர்ந்து வெளிப்படையாக இல்லாவிட்டாலும் மனதிற்குள் என்னை மன்னிக்கும் வாய்ப்பு கிடைக்குமாயின் என்னைக் கொல்லாமல் கொல்லும் மனப்பளு பெரிதும் குறைந்துவிடும். அது ஒரு பெரிய கதை....''

உணர்ச்சிப் பெருக்கால் திருவரங்கநாதரின் தொண்டை கரகரத்தது. கண்களை மூடிக்கொண்டு நாற்காலியில் சாய்ந்துக் கொண்டார்.

அறையின் ஒரு மூலையில் சிறு மண்பானையில் தண்ணீர் மூடிவைக்கப்பட்டிருப்பது சாவித்திரியின் கண்களில் படவே சட்டென எழுந்து அதில் ஒரு டம்ளரில் கொஞ்சம் நீர் எடுத்துவந்து திருவரங்கநாதரிடம் நீட்டி, ''இதை அருந்துங்கள்'' என்றாள்.

கண்களைத் திறந்து பார்த்த திருவரங்கநாதருக்கு அவள் நின்றிருந்த தோற்றம் பரவசத்தை உண்டாக்கியது. டம்ளரை வாங்கி ஒரே விழுங்கில் தண்ணீரை அருந்தி விட்டு ''ம்.... நான் மட்டும் கொஞ்சம் புத்தி பிசகி நடந்திராவிட்டால்... உன் கைஉபசாரம் என் வாழ் நாள் முழுவதும் எனக்குக் கிடைத்திருக்கும். களங்கமற்றஅன்பின் காணிக்கையை நான் மெய்மறந்து, அனுபவிக்கும் பாக்கியம் கிடைத்திருக்கும். தவறி விட்டேன்....!

சரி.... வீணாக என்னென்னவோ பேசிக் காலத்தைக் கடத்துகிறேன். விஷயத்துக்கு வருகிறேன்.

நான் உன்னை மணப்பதற்கு முன்னால் வெறும் ஸ்ரீரங்கநாதனாக இருந்த சமயம்; கட்டுப்பாடற்ற சுதந்திர வாழ்வு நடத்தியபோது என் வாழ்க்கையில்சில குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள்நடந்தன.

பெற்றோரை உற்றாரை இழந்து அனாதையாக சுற்றிய எனக்கு அரசியல் உலகத் தொடர்பு என் மன அமைதிக்கு அரியதொரு மருந்தாக இருந்தது. நான் அப்பொழுது அப்பட்டமான ஒரு லட்சியவாதியாக இருந்தேன். என் செயலிலும் சிந்தனையிலும் நமது நாட்டையும், மக்களையும்பற்றிய கனவுகளைத் தவிர வேறெதும் இருப்பதில்லை. மக்களுக்கு

ஏதாவது சேவை செய்யும் வாய்ப்பு கிடைத்தால் அதுவே என் ஜென்மம் சாபல்ய மடைவதற்கான வழி என்று நான் தவங் கிடந்தேன்.

இப்படி நான் தீவிரமான அரசியல் வாதியாகத் திகழ்ந்ததற்கு மூலகாரணமாக விளங்கியவர் ஒரு நண்பர், அந்தக் காலத்தில் அவர் பிரசித்தி பெற்றதொரு தேசத் தொண்டராக விளங்கினர்; தேசத் தொண்டர் என்ருல் சொல்லால் தேசத்தொண்டராகவும் செயலில் வேறு மாதிரியாகவும் இன்று காட்சியளிக்கும் சிலரைப் போல் அல்ல. ஒரு அப்பழுக்கற்ற தேச சேவனுக்கு இலக்கணமாக அவர் வாழ்ந்து காட்டினர்; அவர் எனக்கு நண்பனக மட்டுமல்ல அன்னையாய், தந்தையாய், ஞானசிரியனய் இருந்து அல்லும் பகலும் என்னை மனிதனுக்கப் பாடுபட்டார்.

அவருடைய மனைவியின் பெயர் பானுமதி; உலகத்தில் ஏறுக்கு மாருன விசித்திரக் காட்சியை நான் எங்காவதுகாண நேரிட்டால் உடனே எனக்கு இந்த பானுமதியின் நினைவுதான் வரும். ''நல்ல மரத்தில் புல்லுருவி'' என்பார்களே அந்தப் பழமொழி; என் நண்பனையும் இந்த அம்மாளையும் குறிப்பதற்காகவே யாரோ தீர்க்க தரிசனமாக முன்னல் சொல்லியிருக்கிருர்கள் என்றுதான் எனக்குத் தோன்றும். என் நண்பர் எவ்வளவுக்கெவ்வளவு நல்ல வழியில் செல்ல பிரயத்தனப் பட்டாரோ அவ்வளவுக்கு எதிர்த்திசையில் பானுமதி நடை போட்டுக் கொண்டிருந்தாள்; உலகத்து மக்களைச் சீர்திருத்தி அவர்கள் வாழ்வில் இன்பம் கமழ்வதைக் கண்ணரப் பார்க்க வேண்டும் என்பதற்காக தன் சொந்த நலன்களை அறவே துறந்து எத்தனையோ இன்னல்களை வலிய தோள்மேல் போட்டுக் கொண்டு உழைத்த அந்தத் தியாகி வீட்டுக்குள் தனக்கு மிகவும் அருகில் இருந்த அந்த மகத்தான பிற உருவத்தின் சக்தியைப் புரிந்துக்கொள்ள முடியவில்லை. இது வியப்புதரும் விஷயந்தான்.

பானுமதியின் திருமண வாழ்வுக்கு முந்திய சரித்திரத்தை நான் பலர் வாயிலாகக் கேட்டுத் தெரிந்துக் கொண்டிருந்தேன். அவளைப் பற்றி நான் தெரிந்துக் கொண்ட அளவு என் நண்பருக்குப் புரியுமா என்பது சந்தேகம்தான்.

பானுமதியின் தந்தை கொஞ்சம் வசதியாக வாழ்ந்தவராம். பானுமதி அவருக்கு ஒரே செல்வப் பெண்ணும். பானுமதி வயதுவந்த பெண்ணுகும்போது அவருடைய தந்தை எதிர்பாராத விதமாய் செல்வமெல்லாம் போய் நொடித்து விட்டாராம். ஆனல் தன்னுடைய நிலையை வெளியே காண்பித்துக் கொள்ள வெட்கப்பட்டு பழைய படாடோப வாழ்வில் சற்றும் குறையாமல் காலத்தை ஓட்டினராம். தன்னுடைய நிலையை மகளுக்குக்காட்டத் தெரியாமல் மறைத்து விட்டாராம்.

தந்தையைப் பெரிய லட்சாதிபதியாக எண்ணிக்கொண்டு பானுமதி கும்மாளமடித்துக் கொண்டிருந்தாளாம். வீட்டில் அவள் தன் சினேகிதிகளுக்கு நாள் தவருமல் டின்னர் — தேநீர் விருந்தாகக் கொடுப்பாளாம். கல்லூரியில் அவள் படிப்புக்காக செலவழித்த பணத்தைவிட நான்கு மடங்கு அதிகமாக அவள் ஈடுபட்ட தேசியத் தொண்டுக்காக செலவழியுமாம்.

கல்லூரியில் நடைபெறும் கொண்டாட்டங்கள் — கூட்டங்கள் போன்றவற்றில் பானுமதிதான் முதலிடம் வகிப்பாளாம். சண்டமாருதமாக சொற்பொழிவும் செய்வாளாம். கல்லூரிக்கு வெளியே ஏதாவது மாதர்கள் சம்பந்தப்பட்ட மாநாடுகள் நடந்தால் அவற்றில் அழையா விருந்தாளியாகக் கலந்துகொண்டு மாநாட்டுச் செலவுகளைக்கூட தானே ஏற்றுக் கொண்டு நடத்த முற்படுவாளாம். மாநாடுகள் எதுவும் நடக்காவிட்

டாலும் இவளே எதையாவது நடத்துவதற்கு ஏற்பாடு செய்வாளாம். பெண்கள் மாநாடுகள் மட்டுமன்றி ஆண்கள் நடத்தும் மாநாடுகளிலும் திடீர் பிரவேசம் செய்து வலிய சொற்பொழிவாற்றத் தொடங்கி விடுவாளாம். கல்லூரியில் படிக்கும்போதே அவள் கலந்துகொள்ளும் கூட்டங்களைப் பற்றியும், அவள் செய்யும் சொற்பொழிவுகள் பற்றியும் பத்திரிகைகளில் பிரமாதமாக செய்திகள் வருமாம். எப்பொழுது பார்த்தாலும் காரில் யாராவது ஒருவரோடு சுற்றிக் கொண்டிருப்பாளாம். தந்தை கேட்டால் 'அவர் ஒரு பிரபல தேசத்தலைவர்' என்று சொல்லிவிடுவாளாம்.

தந்தைக்கு அவள் அடிக்கும் கொட்டம் சகிக்க முடிவதில்லை. செலவும் நாளுக்கு நாள் புயல் வேகத்தில் ஏறிக்கொண்டிருந்தது. அப்பொழுது அவர் வாழ்வே கடன் வாங்கும் பணத்தில் ஓடிக்கொண்டிருந்தது. பானுமதி செய்யும் ஊதாரிச் செலவைச் சரிகட்ட அவர் அதிகக் கடன் வாங்க வேண்டி நேர்ந்தது. கடமை சுமை நாளுக்கு நாள் தலைக்கு மேலேறியது. அவரால் மகளைக் கண்டிக்க முடியவில்லை. அப்படி அவளை சிறு வயதிலிருந்தே வளர்த்துவிட்டார். மேற்கொண்டு கடன் வாங்குவதும் இயலாத விஷயமாகி விட்டது. திணறினர். கவலையால் வாடி வதங்கினர். தன் மனக் கஷ்டங்களைப் பிறரிடம் சொல்லிக் கொள்ளக்கூட வகையின்றி திண்டாடினர். இதே ஏக்கத்தால் ஒரேயடியாக ஒருநாள் கண்களை மூடிவிட்டார்.

இந்த சமயத்தில்தான் எனது நண்பர் ஒரு மாநாட்டில் பானுமதியைச் சந்தித்தார்.

அந்த மாநாட்டின் வரவேற்புக் குழுவின் காரியதரிசியாக அவள் இருந்தாளாம். அந்த மாநாட்டில் என் நண்பரும் பானுமதியும் நெருங்கிப் பழக வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டனவாம்.

இந்த சந்தர்ப்பங்கள்தான் அவளை அவரோடு பிணைக்கும் அந்த துர்ப்பாக்கிய நிகழ்ச்சியின் அடித்தளமாக அமைந்துவிட்டது.

என் நண்பருக்குத் திருமணமாவதற்கு வெகு நாட்களுக்கு முன்பே நண்பர் பானுமதியைப்பற்றி அடிக்கடி பேசுவார். தமிழ் பெண்ணுலகு அவளால்தான் எதிர்காலத்தில் உணர்ச்சியும் ஜீவனும் பெறப் போகிறது என்று பெருமையோடு சொல்வார். யாராவது அவளைப் பற்றி எங்காவது உரையாடிக் கொண்டிருந்தால் அங்கே உற்சாகத்தோடு கலந்து கொள்வார்.

பொதுவாக அவளைப் பற்றி அவர் மனதில் ஒரு உறுதிப்பாடு ஏற்பட்டுவிட்டதை நான் கவனித்தேன். அவளை மணந்துகொள்வதன் மூலம் தன்னுல் அதிகப்படியான பொதுநல சேவையை முன்னிலும் அதிகமான உற்சாகத்தோடு செய்ய முடியும் என்று நம்பினர். ஆகவே மாநாட்டில் அவளோடு நெருங்கிப் பழக சந்தர்ப்பத்தை அவர் தவறவிடவில்லை. பானுமதியை ஆடம்பரமற்ற எளிய முறையில் திருமணம் செய்துக்கொண்டார். பாபம், இந்தத் திருமணத்தின் மூலம் தன்னுடைய மன நிம்மதிக்கு தானுகவே படுகுழி தோண்டிக்கொண்டதை வெகு நாட்களுக்குப் பிறகுதான் உணர்ந்து கொண்டார்.

(தொடரும்)



Retail Branches

285, China Bazar Road, MADRAS

71, Pondy Bazar, T. NAGAR

விடை என்ன?

பஸ்ஸில் கூட்டமே இல்லை. இருந்த சிலரும் சொல்லி வைத்தாற்போல் பேசாமல் அமைதியாக உட்கார்ந்திருந்தனர். பத்மநாபனின் சீட்டுக்குப் பின் வரிசையிலிருந்த அந்த இரண்டு பெண்களைத் தவிர.

''கோவிச்சுக்காதே வஸு!... நேற்று உங்காத்துக்கு வரணும்னு தான் நினைச்சேன். கடைசியிலே எத்தனையோ வேலைகள் நடுவிலே குறுக்கிட்டு ரொம்ப தொல்லை கொடுத்துடுத்து. நீ நம்பினால் நம்பு. நம்பாவிட்டால் போ! நேற்று தினம் டெலிபோன் மாத்திரம் எத்தனை இடத்துக்குப் பண்ணியிருப்பேன் தெரியுமா? எங்க சித்தப்பாவுக்கு, அத்தை பெண்ணுக்கு, மாமா பிள்ளைக்கு....''

''ஏது? நேற்று 'போன் யோகம்'னு உனக்குக் காலபலன் போலிருக்கு! அதென்ன.... அப்படி அத்தனை இடத்துக்குப் போன் பண்ணும்படி?''

''அதுவா?.......எங்க அண்ணா இருக்கான் பாரு!....அவன் பலே டாம்பீகப் பேர்வழி! அவன் குழந்தைக்கு இன்னும் இரண்டு நாளிலே ஆண்டு நிறைவு. அழைப்பு அனுப்பிச்சது போதாதாம். இங்கே சுற்று வட்டாரத்திலே இருக்கிறவாளுக்குப் 'போன்' வேறே பண்ணி வேண்டியழைக்கணுமாம்! அப்பப்பா!.... எத்தனை நம்பர்..?''

''சரி! ஏதோ சாக்கு சொல்லிட்டே! பிழைச்சுப்போ! நாளன்றைக்கு அமளி துமளியெல்லாம் ஓய்ந்த பிறகு ஒருநாள் எங்காத்துக்கு வரயா?.... நம்பலாமா கீதா உன் வார்த்தையை?''

''தொண்ணூற்றொன்பது பங்கு நிச்சயம்!''

'சட்புட்' 'வளவள' வென்று ஓயாமல் பேசிக் கொண்டிருந்த அந்த நாரீமணிகளைத் தன்னையும் மீறிய ஆவலில் திரும்பிப் பார்த்தான் பத்மநாபன். நாகரீகமே வடிவெடுத்து வந்தாற்போன்ற அழகி ஒருவள். மற்றொரு பெண்ணும் அழகிதான். கற்பனையாளரின் வர்ணனைக்கு உருவகமாக அவள் இல்லாவிட்டாலும், பார்த்தவர் உள்ளத்திலே பதியும் அழகு அவளிடம் இருந்தது. தன்னையும் மறந்து பேச்சில் ஈடுபட்டிருந்த அவள் பத்மநாபன் திரும்பிப் பார்த்தபோது யதேச்சையாக நிமிர்ந்தவள் அவனுடைய கூர்ந்து கவனிக்கும் பார்வையைச் சந்தித்து விட்டாள்.

மௌண்ட் ரோட்டில் அந்த நாகரீகயுவதி—வஸு—இறங்கிவிட்டாள். தன் சிநேகிதி இறங்கியவுடன் கீதா பஸ்ஸில் ஒருதரம் கண்ணோட்டம் விட்டாள். அவளைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் ஆண்கள்தான்.

பத்மநாபன் நல்ல அழகன். கம்பீரமான தோற்றம்; ஆணின் அழகுக்கு ஒரு எல்லைக் கோடிட்டுச் சொல்லுவதாக இருந்தால் அதற்கு அவனை உபமானமாகக் காட்டலாம். ஆண்களில் யாரேனும் தன்னை உற்று நோக்கினால் சட்டென்று முகத்தை வேறு புறம் திருப்பி நோக்கித்தான் இறங்கும் இடம் வரும்வரை அந்தண்டை இந்தண்டை திரும்பாமல் அமர்ந்திருக்கும் உயர்ந்த பண்பாடுள்ளவள் கீதா. ஆனால் அந்தப் பாழும் உயர்ந்த பண்பாடு இம்முறை அவளிடம் சொல்லாமல் கொள்ளா

கே. ஆர். கௌஸல்யா

மல் எங்கோ மறைந்துவிட்டதே! அவள் தன்னைப் பார்க்கிருளா என்று பத்மநாபன் திரும்பிய ஒவ்வொரு தடவையும் அதே ஆவலில் கீதாவும் திரும்பிப் பார்த்தாள். அவனுடைய காந்தம் போன்று இழுக்கும் பார்வையைச் சந்தித்த போது கீதாவின் உடம்பிலே ஒரு அதிர்ச்சியும், மனத்திலே பெண்களுக்கே உரித்தான அச்சமும், கூச்சமும் கலந்த ஒரு வித கிளர்ச்சியும் தோன்றி அவளை வதைத்தன.

'சேப்பாக்' என்று கண்டக்டர் உரத்துக் கத்தியபோது கீதா இறங்க மனமின்றி இறங்கினுள். அடுத்த கணமே அவளைத் தொடர்ந்து இறங்கிய நபரின் பூட்ஸ் காலடி ஓசை அவளைத் திரும்பிப் பார்க்கச் செய்தது. அவளிடம் ஏதோ கேட்க விரும்பும் ஆவலில் துடிப்பவன் போல் விடுவிடு வென்று அவளைத் தொடர்ந்து நடந்து வந்து கொண்டிருந்த வாலிபனைக் கண்டு அவளுக்குக் 'குப்' பென்று முகம் சிவந்தது. உடல் ஒருமுறை வேர்த்துக் கொட்டியது.

''ஒரு நிமிஷம்! உங்களிடம் ஒரு வார்த்தை! இப்படி நடு வழியில் நிறுத்திக் கூப்பிடு வது பற்றி ஒன்றும் தவருக நினைக்காதீர்கள்'' என்று ஒலித்த அந்த வாலிபனின் குரல் கேட்டு கீதாவின் கால்கள் சோர்ந்து தளர்ந்து விட்டன.

''நேற்று உங்கள் உறவினர் யார் யாருக்கோ 'டெலிபோன்' செய்ததாகப் பஸ்ஸில் உங்கள் சிநேகிதியிடம் சொல்லி வந்தீர்களே! அந்தக் கலவரத்தில் நேற்று ஒரு முறை ஏதாவது 'ராங்க் நம்பர்' செய்து விட்டீர்களோ? யோசித்துப் பாருங்கள்! அப்பா அதனுல் எனக்கு எத்தனை பெரிய உதவி ஏற்பட்டது தெரியுமா?''

கீதா சிந்தனையுடன் நெற்றியைக் குவித்தாள் ''ஆமாம்!... உங்க ஆபீஸ் போன் நம்பர் எட்டு ரெண்டு''.

''ம்.... சொல்லுங்கள்! கரெக்ட் தான்!...''

''எட்டு ரெண்டு நாலு ரெண்டுதானே! அதாவது சங்கர் மோட்டார் ஒர்க்ஸ்!''

''ரொம்ப ரொம்ப சரிதான்! அடாடா என்ன ஆச்சரியம்! நீங்கள் தானு அது? உங்களுக்கு ரொம்ப நன்றி தெரிவிக்கணும் நான்! ரெண்டு மூன்று நாட்களாகவே எனக்கு ரொம்ப உடம்பு சரியில்லை. ஒரே தலைவலி. லேசாக ஜுரம். ஆபீசுக்குக் காலையிலேயே லீவு போட்டிருக்கவேண்டியது. ஏதோ மெள்ள சமாளிச்சுண்டு போனேன். நாள் பூரா ''ஹெவி ஒர்க்'', மாலை சீக்கிரம் கிளம்பணும்னு நினைச்சிண்டிருக்கச்சே மத்தியானம் 'மானேஜர் ஆறரை மணிவரை ஆபீசிலே இருக்கச் சொன்னுர். என்னையும் என்னு

டன் இன்னும் நாலைந்து பேரையும் முக்கியமான ஒரு ஓர்க் விஷயமாக'ன்னு உத்தரவு வந்தது. அவ்வளவுதான். எனக்கு ஏற்கனவே இருந்த தலைவலி நூறு மடங்காகி மண்டை வெடிச்சு நான் குளோஸாக வேண்டியதுதான்னு தோணிடுத்து. என்ன செய்யறது. முக்கியமான வேலை பற்றிய உத்தரவாச்சே, என்ன சாக்கு சொல்லி வீட்டுக்குக் கிளம்பறதுன்னு திண்டாடிண்டிருந்தேன். சமயத்திலே உங்க 'போன் கால்' வந்தது. நீங்கள் ரொம்ப வினயமாக இது 'மங்களா சோப் பாக்டரி' தானேன்னு கேட்டபோதே 'ராங்க்' நம்பர் பண்ணிட்டேள்னு தெரிஞ்சு போச்சு. அந்த ஒரு செகண்டிலே என் மூளையிலே மின்னல் மின்னும் வேகத்திலே, ஒரு யோசனை உதயமாயிடுத்து...''

'டக்'கென்று கீதா இடையில் குறுக்கிட்டாள். "அதுதான் 'இல்லை.... வந்து என்ன?.... அப்பா மயக்கம் போட்டு விழுந்துட்டாரா? அடடா! இரு அம்மா ஒரு நிமிஷத்திலே கேட்டுண்டு வரேன்'னு சம்பந்தா சம்பந்தமில்லாம ஏதேதோ சொன்னேளாக்கும்!''

பத்மநாபனும் கீதாவும் கல கலவென்று சேர்ந்து சிரித்தனர். ''ஆமாம்! அடுத்த நிமிஷமே ரிஸீவரை 'டொப்'னு வச்சேன், முகத்தில் ரொம்ப சிரமப்பட்டு கலவரத்தையும், பயத்தையும் வரவழைச்சுண்டு, கண்ணைக் கசக்கிவிட்டு, 'அப்பாவுக்குத் திடீர்னு மயக்கம் போட்டுவிட்டதாம். அம்மா தனியாக அகப்பட்டுண்டு சிரமப்படுகிறார்கள். ரொம்ப நாழியாக மயக்கம் தெளியவில்லையாம்! 'அர்ஜண்டாக' போன் கால் வந்திருக்கு என்று என் பக்கத்து ஸீட் ஆசாமியிடம் சொல்லிவிட்டு மானேஜருக்கும் 'எக்ஸ்யூஸ்' கேட்டு எழுதிவிட்டு வீட்டுக்குவந்து; யூகலிப்ட்ஸ் ஆயிலை அபிஷேகம் பண்ணிண்டு ஹாய்னு படுத்துட்டேன்! ராத்திரி மணி எட்டுக்குத்தான் கண் விழிச்சேன். அன்றைக்கு மட்டும் நான் ஆபீசிலே இருந்து மிச்ச வேலையையும் கவனிச்சிருந்தேனால்....''

''கடுமையான ஜுரம் வந்து....''

''உங்களுடன் பேசும்படியான இந்த ஒரு அயனான சந்தர்ப்பம் கிடைத்திருக்காது!'' அவன் உதடுகளில் நெளிந்த குறு நகை கீதாவின் தலையைக் கிறு கிறுக்க வைத்தது, அப்பப்பா! இம்மாதிரி திடுதிப்பென்று அகப்பட்ட கடுகத்தனை 'சான்ஸை' மலையளவாக்கிப் பயன்படுத்தி பெண்களைக் காதல் சிக்கலில் சிக்க வைத்து அதைக் கண்டு மகிழ்ந்து பூரிக்கும் பழக்கம் இந்த ஆண் வர்க்கத்துக்கே பரம்பரை பரம்பரையாக படிந்து விட்ட குணம் போலும்!

''என்ன யோசிக்

கிறீர்கள்? இம்மாதிரி முன்பின்னறியாத இவன் நம்மிடம் வலுவில் வந்து பேசுவது அழகா? இவன் எப்படிப்பட்டவனோ என்றுதானே?.... உங்கள் மனம் அப்படிச் சிந்தித்தால் அதற்காக மன்னிப்புக் கோருகிறேன்!''

ஒரு கணம் கீதா திடுக்கிட்டுவிட்டாள். பத்மநாபனின் முகத்தை நிமிர்ந்து நோக்கியபோது அதில் குடிகொண்டிருந்த சாந்தமும், கள்ளங்கபடற்ற தன்மையும் அவனிடத்தில் அவளுக்கு மட்டற்ற நம்பிக்கையை ஊட்டின.

''அதெல்லாம் ஒன்றுமில்லை!'' என்றாள் மலர்ந்த முகத்துடன்.

கீதா திரும்பவேண்டிய தெருவுக்குக் கொஞ்சம் முன்னாடியே பத்மநாபனிடம் விடை பெற்றுக்கொண்டாள்.

அநேகமாக கீதா ஆபீஸ் விட்டு வரும் நேரமும், பத்மநாபன் வரும் நேரமும், ஒன்றாகத்தான் இருந்தது. ஏதோ சில தினங்கள் தவிர மற்ற தினங்களில் அநேகமாக இருவரும் ஒன்றாகச் சந்தித்தனர். ஒருவர் மற்றொருவர் மனத்தை வெகுவாகக் கவர்ந்துவிட்டனர்.

'மிஸ் கீதா' வெறும் 'கீதாவாகி' 'நீங்கள்' நீயாகும் அளவுக்கு பத்மநாபன் கீதாவின் பரிபூரண சம்மதத்தின் பேரில் சுவாதீனம் எடுத்துக்கொண்டான்.

அன்று மாலை கடற் கரையில் சுற்றுப்புறத்தில் அதிக ஜனங்கள் இல்லாத பக்கமாகப் பார்த்து, ஒரு படகுக்குப் பக்கத்தில் உட்கார்ந்தனர் வஸுமதியும் கீதாவும்.

''ஆமாம் கீதா! உங்க அம்மா அப்பாவிடம் நீ 'அவரை'ப் பற்றி எப்போ பிரஸ்தாபிக்கப் போறே? இல்லாவிட்டால் நான் வேணா வந்து சொல்லட்டுமா? காதல், அடுத்தது கல்யாணம்னு சட்டுபுட்டுனு வேலையை முடிச்சுக்காமல் வீணாக ஆறப் போடறயே....'' என்று பேச்சைத் தொடங்கினாள் வஸு.

கீதாவின் முகத்தில் வருத்தத்தின் சாயை படர்ந்தது. ''வஸு நான் உன்னிடம் என் 'லவ்'வைப் பற்றிக் கூடச் சொல்லிட்டேன்!.... ஆனால் ஒரு முக்கிய விஷயத்தை உன்னிடம்கூட மறைச்சு வச்சிருக்கேன்... சொன்னால் நீயே என்னைப் பற்றி என்ன நினைத்துவிடுவாயோ என்ற பயத்தில்!''

''அடி கீதா! உன்னிடம் உயிர் போல பழகும் என்னை இத்தனை நாட்களாக நீ புரிந்துகொண்டது இவ்வளவுதானா....?''

''இல்லை வஸு கோவிச்சுக்காதே! சொல்றேன்! அது என் அசட்டுத்தனமான ஞாபக மறதியில் வந்த விளைவு! நாம் காலேஜ் படிக்கச்சே, கடைசி வருஷம் 'அன்னிவர்ஸரி' நடந்ததோல்லியோ? அது நடந்த இரண்டு நாளுக்கெல்லாம் என் பெயருக்கு-வீட்டு விலாசத்துக்கு - ஒரு 'லவ்' லெட்டர் மொட்டைக் கடிதமாக வந்திருந்தது. அப்பா! அதில் என்னவெல்லாம் எழுதியிருந்தது தெரியுமா?.... 'என் அன்பே கீதா! என்று ஆரம்பித்து, உனக்குக் கலைவாணி, சகலகலாவல்லி என்று பட்டம் கொடுக்கலாம். நீ எல்லாக் கலையிலும் 'எக்ஸ்பர்ட்'டாக இருக்கிறாயே! நேற்று நீ மேடையிலே சுழன்று சுழன்று நாட்டியம் ஆடியபோது என் உள்ளத்தையும் சேர்த்தல்லவா சுழற்றினாய்! அடிக்கடி என்னைப் பார்த்து முறுவலித்தாயே;.... உன் உள்ளம் புரிந்து விட்டது எனக்கு! நம் காதல் நிறைவேறுமா?.... என்ன? நான் யாரென்றே புரியவில்லையா உனக்கு? தினமும் காலேஜ் விடும்போது உன் வகுப்பைத் தாண்டி நான் படிகளில் இறங்கும்போது என்னை நீ நன்றாகக் கவனித்திருப்பாயே?...'' இப்படியாகத் தத்துப்பித்தென்று நீளமாகக் கடிதம்! வஸு அதைப் படித்தபோது என் மனசு எப்படியிருந்தது தெரியுமா? என்னை—என் வீட்டு விலாசத்தைக்கூட அறிந்து எவனோ 'இடியட்' ஒருவன் அதை எழுதியிருந்தான்.... அப்பாவிடம் கடிதத்

தைக் காட்டிவிட்டுப் பிறகு பிரின்ஸ் பாலுக்குச் சொல்லி, காலேஜ் மாணவர்களின் கையெழுத்துக்களுடன் ஒப்பிடச் சொல்லி குற்றவாளியைக் கண்டுபிடித்தே தீருவது என்று முடிவு செய்து விட்டேன்!.... இங்கேதான் சிக்கல் ஒன்று நேர்ந்துவிட்டது! அந்தக் கடிதம் வந்த அன்று நான் லைப்ரரி புஸ்தகம் ஒன்றை 'ரிடர்ன்' பண்ணவேண்டியிருந்தது. கடைசி தேதி அன்றுதான். ஆதலால் அவசர அவசரமாகப் படித்து முடித்துக் கொடுத்துட்டு வந்துட்டேன். மறுநாள் அந்த லெட்டரைத் தேடியபோதுதான் ஞாபக மறதியில் அதை லைப்ரரி புஸ்தகத்திலேயே வச்சு நான் 'ரிடர்ன்' பண்ணிட்டேன்னு புரிஞ்சுது! அப்பப்பா! அப்போ என் உள்ளம் பட்ட பாடு!... உடனே ஓடினேன் லைப்ரரிக்கு. அந்தப் புஸ்தகத்தை அன்றுதான் யாரோ எடுத்துச் சென்றுவிட்டது தெரிந்தது வஸு! அன்றே எனக்கு மனசு நிம்மதி பறிபோய் விட்டது. அந்தப் புத்தகத்தை யார் அடுத்தபடியாக எடுத்துண்டு போனுளோ! அந்தக் கடிதத்தைப் படிச்சிருப்பாளே!.... அதன்மேலே என் விலாசம்வேறே இருக்கே.... என்று திருடனுக்குத் தேள் கொட்டினாற்போல் நான் நடுங்கி செத்துக் கொண்டிருந்தேன். இந்த விஷயம் பின்னடி எப்போதாவது எப்படியாவது 'அவரு'க்குத் தெரிஞ்சுடுமோ?.... அப்போ அவர் என்னைப் பற்றி என்ன நினைப்பார்? என் வார்த்தைகளை, நேர்மையை, குற்றமற்ற தன்மையை நம்புவாரா? என்று சதா சர்வ காலமும் பயமும், வருத்தமும் என்னை வாட்டறது.... என் விவாகத்தைப்பற்றி நினைச்சாலே இதுதான் எனக்கு நினைவுக்கு வரது...''

''....ரொம்ப வருத்தமான விஷயம்தான் கீதா!... ஆனால் பயப்படாதே. நாம் பாஸ் பண்ணி நாலைந்து மாசம் ஆகப்போறதே! அந்த லெட்டர் கிடைச்ச நபர் ஏதாவது செய்யறதாக இருந்தா இத்தனை நாளாகப் பேசாமலிருப்பானேன்? ஒன்று, அந்த லெட்டர் யாரேனும் ஒரு அப்பாவி கிட்டேயோ, அல்லது நேர்மையே உருவானவரிடமோ கிடைத்திருக்க வேண்டும். இந்த இரண்டு தினுசு ஆசாமிகளும் 'நமக்கேன் இந்த வம்பெல்லாம்!' என்று அந்தக் கடிதத்தைக் கிழித்துப் போட்டுவிடக் கூடியவர்கள்! நீ வீணு மனசைக் குழப்பிக்காதே! சீக்கிரம் அப்பாவிடம் உன் மேரேஜைப் பற்றிப் பேச ஆரம்பி! என்ன?''

கீதா பதிலுக்கு ஒரு நீண்ட பெருமூச்செறிந்துவிட்டு, ''என்னவோ! என் மனசு சாந்தப்படவில்லை வஸு!'' என்று கூறியவாறே வீட்டுக்குப் புறப்பட எழுந்தாள்.

அன்று கீதா ஆபீஸ் விட்டுவர கொஞ்சம் லேட்டாகிவிட்டது. ''கீதா! உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் கேட்க வேண்டும்! ஆனல் நீ கோபித்துக் கொள்ளக் கூடாது!'' என்றுன் பத்மநாபன் திடுதிப்பென்று.

''என்ன?'' கீதாவின் நெஞ்சு ஏனோ திகிலால் படபடத்தது. புதிதாக இன்று இப்படி அவன் பீடிகை போடுவானேன் என்று.

''நீ காலேஜ் படிக்கும் போது உனக்கு யார் பேரிலாவது காதல்'' அவன் மெல்ல முடிக்காமல் இழுத்தான்.

''என்ன ....?'' கீதாவின் நெஞ்சு வரண்டது. நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது.

''அம்மாதிரி ஒரு நபர் உனக்கு எழுதிய லெடரை நீ ஞாபக மறதியாக லைப்ரரி புஸ்தகத்தில் வைத்து 'ரிடர்ன்' பண்ணிவிட்டாயோ? அப்போது நானும் கல்லூரிப் படிப்பு படித்துக் கொண்டிருந்ததால், ஒரு நாள் நான் ஒரு லைப்ரரி புஸ்தகம் வாங்கும் போது அதில் அந்த கவர் இருந்தது அது நீயா? அல்லது வேறு யாராவது கீதாவா? விலாசம் என்னவோ உன்னுடையது தான்....''

கீதாவின் நெஞ்சில் இருந்த அந்தப் பயம் இப்படி சற்றும் எதிர்பாராத விதமாக, அதுவும் பத்மநாபனுலேயே வெளிப்பட்டு விடவே அவள் நெஞ்சை திகிலும், துயரமும் சேர்ந்து பிழிந்தெடுத்தன. கீதா உண்மையை ஒளிக்காமல் அவனிடம் கூறி, ''அதை நீங்கள் நம்புகிறீர்களா? என் நடத்தையைச் சந்தேகிக்கிறீர்களா? சத்தியமாக, கடவுள் பொதுவாய் நான் நிரபராதி!'' கீதாவின் கண்கள் காகரவென்று கண்ணீரைப் பெருக்கின.

பத்மநாபன் சுற்று முற்றும் பார்த்தான். அச்சமயம் அருகே ஜனநாட்டமேயில்லை. சட்டென்று தன் கைக் குட்டையால் அவள் கண்ணீரைத் துடைத்து, முதன் முறையாக அவள் கையைப் பற்றி வருடினன். ''என்னருமை கீதா! உன்னை என்றும் நான் சந்தேகிக்க மாட்டேன்! உன் தூய்மை உள்ளம் எனக்குத் தெரியும்! அவசரப்பட்டு ஒருவரைப் பற்றி ஒரு தவறெண்ணம் கொண்டு 'தாட்பூட்' என்று கூத்தாடும் வழக்கம் எனக்கு என்றுமே கிடையாது. இத்தனை நாளைய பழக்கத்தில் நீ எத்தனையோ அன்புதான் என்னிடம் வைத்திருந்தபோதிலும், அந்த மட்டற்ற அன்பையும் ஒரு வரம்புக்குள்ளேயே அடைத்து நிறுத்தியிருந்த அடக்கத் தன்மையை நான் கவனிக்கவில்லை என்று நினைத்துவிட்டாயா? நான் அந்த லெட்டரைப் பற்றிப் பிரஸ்தாபித்தது தவருனல் மன்னித்துவிடு...''

கீதா அவனுடைய அன்பின், தேறுதலில் திக்குமுக்காடிப் போனுள். ''என் மனசிலிருந்த பெருத்த பாரம் நீங்கிவிட்டது!'' என்றுள் ஆனந்தக் கண்ணீர் பொங்கி வழிய.

கீதா பெற்றோருக்குக் கடைசி செல்லப் பெண்; அதனுல் மிகவும் அருமை. ''என்ன! நீங்கமாட்டில் சும்மாயிருக்கேளே படித்து, வேலை பார்க்கவும் ஆரம்பிச்சுடவே கீதாவை ஆண் பிள்ளைன்னு நினைச்சுட்டேளா என்ன?....'' என்று தன் தாயார் பீடிகையுடன் அவள் விவாக விஷயத்தை ஆரம்பித்தபோது, சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த கீதா ரகசியமாய், அம்மாவிடம் ஏதோ முணுமுணுக்க, அந்த அம்மாள் அடுத்த கணம் 'லௌட் ஸ்பீக்கராக மாறி தன் பர்த்தாவிடம் விஷயத்தை வெளியிட, ''இந்தாடா சோமு! லீவிலே தானே இருக்கே இப்போ நீ! நான் சொல்றதை உடனே கவனி போ! சங்கர் மோட்டார் ஒர்க்'ஸிலே'' என்று

அவர் ஆரம்பித்து விடவே குதூகலத்தால் கீதா துள்ளினுள்.

பிறகு என்ன? பத்மநாபனின் பெற்றோரின் சம்மதம் விரைவில் கிடைத்து, நல்ல வேளையாக 'ஜாதகக் கோளாறு, சீர்வரிசைத் தகராறு, எந்த 'ஆறும்' இடையிலே வந்து குறுக்கிடாமல் கீதா ஒரு சுபதினத்தில் மிஸஸ் கீதா பத்மநாபனுகிவிட்டாள்.

கல்யாணம் முடிந்து முதல் முதலாகத் தலை தீபாவளிக்குத் தன் வேட்டகத்துக்கு வந்தான் பத்மநாபன். உள்ளே நுழையும்போதே ''வாங்கோ! வாங்கோ மாப்பிள்ளை!'' என்று தடபுடலாக உபசாரம் நடந்தது அவனுக்கு.

கீதாவின் அக்கா ராதா தட தடவென்று ஓடிவந்தாள் அவனிடம் ஏதோ கேட்கும் ஆவலில் ''மாப்பிள்ளை உங்களிடம் ஒரு தமாஷான விஷயம் கேட்கணும்! வந்து உங்க ஆபீசிலே டமாரச் செவிடும், அஸமஞ்சமுமான ஆசாமி யாரேனும் இருக்காளோ?'' என்று கேட்டுப் பலமாகச் சிரித்தாள்.

''ஏன்?'' —என்றுன் பத்மநாபன் திகைப்புடன் விழித்தவாறே.

''வந்து கொஞ்ச நாட்களுக்கு முன்னே எங்க அண்ணு குழந்தை ஆண்டு நிறைவுக்காக உள்ளூரிலேயுள்ள எங்க உறவினர் சிலரைக் கூப்பிட வேண்டியிருந்தது. நான் சிலரையும் கீதா சிலரையும் 'போன்' பண்ணியே அழைச்சுட்டோம். அப்போ தவறுதலாக ஒரு தடவை 'ராங்க்' நம்பர் பண்ணிட்டேன். 4282-ங்கறதுக்கு 8242 ன்னு பண்ணிட்டு, ஹலோ.... இது 4282 தானேன்னு கேட்டேன். அப்போ ஒரு அசடு உங்க ஆபீசிலே, சம்பந்தா சம்பந்தமில்லாம ''இல்லை வந்து என்ன? அப்பாவுக்கு மயக்கமா? இதோ வரேன்'' னு உளறிக் கொட்டியது. எனக்குத் தூக்கி வாரிப்போட்டது 'அட கஷ்டகாலமே'ன்னு நினைச்சுண்டு 'டைரக்டரி'யைப் புரட்டி அப்புறம் சரியான நம்பருக்குப் போன் பண்ணிட்டேன்! இந்த தமாஷை வீட்டிலேயே சொல்லிச் சொல்லிச் சிரிச்சோம்! நீங்கள் அந்த ஆபீசிலே இருக்கேளேன்னு கேட்டேன்! அந்த 'செவிடு' யாருன்னு!....''

பத்மநாபனுக்குப் பளிச்சென்று விஷயம் விளங்கிவிட்டது. தனக்கு முன்பு வந்த அந்த 'ராங் நம்பர் போன் கால்' ராதை பண்ணியது. கீதா தன்னிடம் 'கதைத்து' ஏமாற்றி விட்டாள் என்று. அவனுக்கு வெட்கத்தால் முகம்சிறுத்து விட்டது. ''அப்புறம் 'நைஸா'க விசாரிச்சுப் பார்க்கிறேன். அது

யாருன்னு தெரியலையே எனக்கு!'' என்று வேண்டுமென்று வரவழைத்த அசட்டு சிரிப்பு சிரித்து மழுப்பிவிட்டு மாடிக்குச்சென்றான். அவன் ஏறும்போதுதான் தட தட வென்று கீதாவும் மேலே ஓடினாள். அதுவரை மாடிப் படிகளில் நின்று எல்லாவற்றையும் கேட்டு ரசித்து விட்டு!

''அடி திருட்டிக் கள்ளி! என்னை எப்படி ஏமாற்றி விட்டே நீ! இப்போ தோப்புக் கரணம் போடு 'தப்பு' 'தப்பு'ன்னு சொல்லி!'' என்றான் கீதாவின் பின்னலைப் பிடித்திழுத்த பத்மநாபன்.

''நீங்க ஒண்ணும் என்னிடம் பேசவேண்டாம்!'' என்றாள் கீதா ஜன்னலருகில் போய் நின்று கொண்டு!

''ஏன் கீதா! உன் குறும்புத் தனத்தினால் உங்க அக்காவிடம் அஸமஞ்சம் டமாரக் செவிடுன்னெல்லாம் திட்டுக் கேட்டவன் நான்! கோபம் உனக்கோ? பேஷ்!'' என்றான் திகைப்புடன்.

''ஓஹோ! பரமசாதுதான் நீங்கள்! முன்பு எனக்கு வந்த அந்த 'லவ்' லெட்டர் உங்கள் கையிலே லைப்ரரி புஸ்தகத்திலேயிருந்து கிடைச்சதாகப் பொய் சொன்னேளே! அந்தப் புஸ்தகத்தின் பெயர் என்ன? இப்போ சொல்லுங்கள் பார்க்கலாம் உங்களைச் சண்டை பிடிக்கணும்னு காத்துண்டிருந்தேன்....''

''வந்து வந்து ஏதோ 'எகனமிக்ஸ்' புஸ்தகம்!...''

''சபாஷ்! நான் காலேஜிலே எடுத்த பாடம் கணக்கு! அன்று 'ரிடர்ன்' செய்ததும் அது சம்பந்தமான புஸ்தகம்! கணக்குக்கும் பொருளாதாரத்துக்கும் ரொம்ப ஒற்றுமை பாருங்கள்! எதேச்சையாகப் போனவாரம் என் பிரைஸ் புஸ்தகங்களைப் பீரோவிலிருந்து எடுத்தேனானால் அதிலே இருந்தது இந்தக் கவர்! இதோ பாருங்கோ அந்தக் கடிதம்! அன்றைக்கு இரண்டு தினங்கள் முந்திதான் 'அன்னிவர்ஸரி நடக்கவே, இந்தப் புது பிரைஸ் புத்தகங்கள் என் டிராயரிலேயே இருந்திருக்கு. இதிலே. கைமறதியா வச்சு இந்த பீரோவிலே வச்சுட்டு, லைப்ரரி புஸ்தகத்திலே வைத்ததாக நினைச்சு, சஞ்சலப்பட்டு, இந்த அரிச்சந்திரனின் பேச்சையும் நம்பி ஏமார்ந்தேனே! என் ஞாபக மறதிக்கு 'நோபல்' பரிசு கொடுக்கலாம்! ஆமாம்! என்னை எப்படி ஏமாற்றினீர்கள் நீங்கள்? உங்களுக் கெப்படி தெரிந்தது நான் லைப்ரரி புஸ்தகத்திலே அதை வச்சதாக நினைச்சிருந்தது?'' என்று வியப்பு அடங்காமல் கேட்டாள்!

''அதுவா!'' என்று கேட்டு உடல் குலுங்க நகைத்தான் பத்மநாபன். ''தப்பு என்பேரில் இல்லை கீதா! ஒருநாள் நான் பீச்சுக்கு வந்திருந்தபோது ஒரு படகின் மறைவிலே உட்கார்ந்து என் இதயராணி கீதாவும் அவள் உயிர்த் தோழி வஸுவும் பேசியதை என் காதுகள் கேட்டுவிட்டன. நான் என்ன செய்வது?''

''ஓஹோ...! அது போன்றுதான், உங்கள் அழகிய முகம் என்னைக் கிறுகிறுக்க வைத்து, மோகனப் புன்னகை புரியும் உதடுகள், ''நேற்று வந்த 'ராங்க் டெலிபோன் நம்பர்' நீங்கள் செய்ததா''ன்னு அன்று கேட்டபோது என்னால் மறுக்க முடியவில்லை.... 'நான் இல்லை' என்று அசட்டுத்தனமாகச் சொல்லி அந்த பொன்னான வாய்ப்பை நழுவவிட மனசு வரவில்லை'' என்றாள் குறும்புச் சிரிப்புடன்.

''சரிதான்! ஏ கணக்குப் புலியே! கீதாவின் தந்திரம் மைனஸ் பத்மநாபனின் தந்திரம் விடை என்ன தெரியுமா? ஸைபர்'' என்று கூறிய பத்மநாபன் கீதாவின் தலையில் நோகாமல் செல்லமாகக் குட்டினான்.

நவம்பர் 27
முதல்
தென்னாடெங்கும்
சந்திரமோஹன் சலீம் பிக்சர்ஸ்,
மதியும் மமதையும்
டைரக்ஷன் : ஜி. எம். பஷீர். ஸ்டுடியோ : சென்ட்ரல், கோவை.

போன் : 4071.

N. V. ஷண்முகம் கம்பெனி

பட்டணம் பொடியைப் போட்டு அனுபவித்து
உண்மை தெரிந்த கனவான்கள்

N. V. S. என்ற
விலாசத்தை என்றும் மறவாதவர்கள்

N. V. S. பட்டணம் பொடியை போட்டமாத்திரத்தில், உற்சாகமும், ஊக்கமும் பெறுகிறார்கள், உள்ளம் களிக்கிறார்கள். உள்ளத்தின் பூரிப்பே **N. V. S.** விலாசம் உச்ச நிலை யடைந்ததற்கான உண்மைக் காரணம்.

என். வி. எஸ். புகழின் ஏற்றத்தைக் கண்டு பொறாமை கொண்டு போலிகள் **N. V. S.** நடைமுறையை நகல் எடுத்து நடிக்கப் பார்க்கிறார்கள். புகையிலையின் தத்துவமுணர்ந்து தயாரிகக வகையறியாது, காம்பு கட்டைகளை சிக்காய் மெஷினில் கொடுத்து அறைத்து பட்டணம் பொடி என்று பெயர் சூட்டி பகட்டச் செய்கிறார்கள். போலிப் பொடிகளின் பகல் வேடப் பகட்டுச் செய்கைகளைச் சிதறடிக்கச் செய்த பெருமை நமது அபிமானிகட்கே சேரும். அவர்கள் 60 ஆண்டுகட்கு மேலாக அனுபவித்தடையும் ஆனந்தம் **N. V. S.** பட்டணம் பொடியின் இணையற்ற குணச் சிறப்பினாலாகும். **N. V. S.** பட்டணம் பொடி ஒன்று தவிர நமது மார்க்கெட்டுகளில் இதர போலிகள் இன்றளவு இடம்பெற முடியாதிருப்பது அவர்கள் **N. V. S.** விலாசத்திற்கு மட்டும் கொடுக்கும் ஆதரவே காரணம்.

என்றென்றும் **N. V. S.** பெயர் ஓங்கி வளரத் தாங்கள் கொடுக்கும் ஆதரவிற்கு எமது நன்றியறிதல் என்றும் தங்கட்கு உறித்தாகுக.

N.V.ஷண்முகம் கம்பெனியார்
பட்டணம்பொடி தொழிற்சாலை
த.பெ.555. மதராஸ்-21.

தாம்பத்தியம்

எல்லார்வி

வக்கில் வாசுதேவன் கேஸ் கட்டுக்களை ஆராய்ந்து கொண்டிருந்தான். அவனது ஆறு வயதுக் குழந்தை பிரமீளா ஹாலின் ஒரு புறத்தில் அமர்ந்து பொம்மைகளை வைத்து விளையாடிக் கொண்டிருந்தாள். விளையாட்டு மும்முரத்திலே அவள் முணு முணுவென்று தனக்குத்தானே என்னவோ பேசிக் கொண்டாள். வாசு வெகு நேரம் வரையில் அவளையோ அவள் பேச்சையோ கவனிக்கவில்லை. திடீரென்று வந்த புதிய கேஸை ஆராய்வதிலே அப்படி ஈடுபட்டிருந்தான்.

அவனுக்கு முப்பது வயது கூட முழுசாக ஆகவில்லை. அதற்குள் அவனுக்குக் குடும்பத்திலும் வெளி உலகத்திலும் கிடைத்த அனுபவங்கள் ஏராளம். மிகவும் புத்திசாலியான அவன் மளமளவென்று படித்துப் பட்டங்களைப் பெற்று ஜூனியர் பிராக்டிஸை முடித்துப் பக்கா வக்கிலாக ஆகிவிட்டான். தொழிலில் ஈடுபட்ட சிறிது காலத்திற்குள்ளாகவே நல்ல பெயர் கிடைத்து விட்டது; வருவாய்க்கும் குறைவில்லை. அவனை எல்லோரும் நன்கு மதித்தார்கள்.

லாயர் கிருஷ்ணசாமியும் அவனும் நெருங்கிய நண்பர்கள். அவர் சிறிது காலமாக ஒரு வழக்கில் ஈடுபட்டிருந்தார். அன்றோடு அந்த வழக்கு முடிந்துவிடும். ஆனால் கிருஷ்ணசாமியால் அன்று கோர்ட்டில் ஆஜராக முடியவில்லை. கிராமத்தில் அவருடைய தாய்க்கு உடல் நிலை மிகக் கடுமையாக இருக்கிறதென்று தந்தி வந்தது. குடும்பத்தோடு கிளம்பிச் சென்றார். வழக்கை வாசுதேவன் வசம் ஒப்படைத்துச் சென்றார். அந்த வழக்கின் கட்டுக்களைத்தான் அப்போது அவன் பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதியா?....''

திடுக்கிட்டுத் தலை நிமிர்ந்தான் வாசுதேவன். 'யார் பேசினது? பிரமீளாவா? அவளைத் தவிர இங்கே யாருமே இல்லையே! அவள் வாயிலிருந்தா இப்படிப் பட்ட சொற்கள்!'...

திகைப்புற்ற வாசு அவளையே கண்கொட்டாமல் பார்த்தான். அவன் பார்ப்பதைக் குழந்தை கவனிக்கவில்லை. தன் போக்கிலே

சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டும் விளையாடிக் கொண்டுமிருந்தாள்.

''இப்போ தெரியாது; கூடிய சீக்கிரம் தன்னாலே தெரியும்''— இவையும் அவள் வார்த்தைகள் தான். வாசுவின் நெஞ்சிலே ஈட்டிகள் பாய்ந்தாற் போலிருந்தது. உணர்ச்சி வசமாகி நீண்ட பெருமூச்செறிந்தான்.

யாரோ வந்திருப்பதாக வேலைக்காரப் பையன் வந்து தெரிவித்தான். வாசு தன் மன நிலையைச் சரிசெய்துக் கொண்டு அவர்களை அழைத்துவரச் சொன்னான்.

சுமார் இருபது வயதுடைய அழகான பெண்ணும் மற்றும் சிலரும் அங்கே தோன்றினர், கிருஷ்ணசாமி ஒப்படைத்துச் சென்ற வழக்கை நடத்துபவர்கள் அவர்கள் என்பது உடனே தெரிந்தது. அவர்களை உட்காரச் சொல்லி என்ன என்னவோ கேள்விகள் கேட்டான் வாசு.

வழக்கின் சாரம் இதுதான், அந்தப் பெண் பெயர் சுசீலா. அவள் கணவன் இரண்டுங் கெட்டான் பிரகிருதி. வெளியூர் வாசியாகவே இருந்துவரும் சுசீலாவின் அத்தை மகன் அவள் வீட்டுக்கு விருந்தாளியாக வந்தான். அவனால் அவள் பெற்றோர் பல நன்மைகளை எய்தியுள்ளனர். அந்த நன்றியுணர்ச்சியினாலும் பொதுப்படை அன்பினாலும் சுசீலா அவனை வரவேற்று உபசரித்தாள்; அளவளாவினாள்.

அவள் கணவன் அவளை அவள் அத்தானோடு பேசக்கூடாது என்று தடுத்தான். அவளால் பேசாமல் இருக்க முடியவில்லை. வரவரக் கணவனின் கண்டிப்பு வலுத்து அடிதடியிலே வந்தது.

அத்தான் ஊருக்குப் போய்விட்டான். சுசீலாவை அவள் கணவன் தாய் வீட்டிற்குத் துரத்திவிட்டான். மீண்டும் தன்னிடம் அழைத்துக் கொள்ள மறுக்கிறான். அவள் அவன்மீது வழக்குத் தொடர்ந்து விட்டாள் — ஜீவனாம்சம் கோரி அல்ல; கணவனோடு கூடி வாழ வேண்டும் என்று.

இதுதான் வழக்கு. இந்த விவரங்களைக் கண்ணீருடன் கலந்து கொட்டினாள் சுசீலா. தெரிந்து கொள்ள வேண்டியதைத் தெரிந்து கொண்டு சொல்ல வேண்டியதைச் சொல்லி, ''பத்து மணிக்கெல்லாம் கோர்ட்டுக்கு வந்து சேருங்கள்'' என்று கூறி அவர்களுக்கு விடை கொடுத்து அனுப்பினான் வாசு.

அதுவரையில் சுசீலாவையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த பிரமீளா அவர்கள் சென்றவுடன், ''அப்பா!'' என்று கூவிக்கொண்டே ஓட்டமாக ஓடி வந்து வாசுவைக் கட்டிக் கொண்டாள்.

''ஏண்டா கண்ணு?'' என்று அவளை வாரி எடுத்து முகத்தோடு முகம் பதித்த வாசு அவள் மாம்பழக் கன்னங்களில் வழிந்தோடியிருந்த கண்ணீரைக் கண்டு திடுக்குற்றவனாய், ''எதற்கடா கண்ணு அழுதாய்?'' என்றான்.

''அந்த மாமியைப் பார்த்தால் அம்மா போல இல்லே?''

''செ செ. உன் அம்மா எங்கே, இவள் எங்கே?''

''அது இல்லே அப்பா. நீ அடித்த போது அம்மா அழுதாளே, அதே மாதிரி இருந்தது அந்த மாமி அழுததும். அதைப் பார்த்ததும் எனக்கும் அழுகை வந்துவிட்டது அப்பா''.

வாசுதேவன் பெருமூச்செறிந்தான்.

''அம்மா எப்போ வருவாள் அப்பா?''

பிரமீளா வழக்கமான கேள்விகளைக் கேட்க ஆரம்பித்ததும் வாசுவும் வழக்கமான சாகச மொழிகளைப் பேசி, பராக்குக் காட்டி அவளைச் சமாதானம் செய்தான்.

மணி ஒன்பதானதும் சமையற்காரக் கிழவர் வந்து வாசுவைச்

சாப்பிட அழைத்தார். தகப்பனும் மகளும் உணவு உண்டனர். பிறகு வாசு உடுத்துக் கொண்டு கோர்ட்டுக்குச் சென்றான். பிரமீளா வேலைக்காரியுடன் பள்ளி சென்றாள்.

வாசுவின் உள்ளம் அலைபாய்ந்துக்கொண்டிருந்தது. பரம உத்தமியான சுந்தரியை அநாவசியமாக வம்புக்கு இழுத்து ஏசிப்பேசி அடித்துப் புடைத்து அருமைக் குழந்தையைத் தன்னிடம் இருத்திக்கொண்டு அவளைத் தாய் வீட்டிற்குத் துரத்திய கொடுமையை எண்ணிப் பார்த்து மனங் கசிந்தான். அக்கம் பக்கம் உள்ளவர்களும் தன் குழந்தையும் தன்னையே நிந்தித்ததை நினைத்து வேதனையுற்றான். அன்று முதல் இன்று வரையில் பிரமீளா, தாய்க்கு ஏங்கித் தவிப்பதையும் வாய் ஓயாது தாய் எப்போது வருவாள் என்று கேட்டுக் கொண்டே இருப்பதையும் எண்ணி ஏங்கினான். சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை போல அன்று நடந்த சண்டையிலே தன் தாய் பேசிய வார்த்தைகளை அப்படியே மனத்தில் வாங்கிப் பதித்துக்கொண்டு, காலையில் விளையாடும்போது குழந்தை சொன்னவற்றை நினைத்துத் துடித்தான். இத்தனை லட்சணத்தில் கிருஷ்ணசாமி ஒப்படைத்த வழக்கு, தன் நிலைமையை அப்படியே பிரதிபலிப்பதாக இருப்பதைச் சிந்தித்தபோதுதான் அவன் உணர்ச்சி உச்ச நிலையை எட்டிற்று. இதில் தெய்வத்தின் அறிவிப்பு ஏதாவது இருக்குமோ என்று கூட எண்ணினான்.

சிந்தனையின் ஓட்டம் திடீரென்று நின்றது. மறுபடி அது ஓடத் தொடங்கியபோது திசை மாறி விட்டது.

''செ! என்ன கோழை உள்ளம் என்னுடையது! ஆண் பிள்ளைச் சிங்கமாக இருந்துகொண்டு இப்படிக் கலங்கலாமா? சுந்தரி நல்லவளாகத்தான் இருந்தாள்; இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் பத்து வருஷம் பசுப்போல் இருந்தவள் ஒரே நாளில் தன் உண்மைச் சொரூபத்தை வெளிக்காட்டி விட்டாளே, கலப்பாலைக் கறந்து வைத்து அதிலே கடுகத்தனை சுண்ணும்பைத் தெறித்தாற்போல! 'நான் உங்கள் அடிமை அல்ல' என்றல்லவா சொன்னாள்! அது மட்டுமா? இன்னும் என்னவெல்லாம் பேசிவிட்டாள்! 'ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதியா' என்று இவள் என்னைப் பார்த்துக் கேட்பதா? 'இப்போது தெரியாது; கூடிய சீக்கிரம் தன்னாலே தெரியும் என்று கறுவினாளே, பூனை கண்ணை மூடினால் உலகமே அஸ்தமனமோ? அப்படியாவது நான் சுசிலாவின் கணவனைப் போல் இரண்டுங் கெட்டான் பிரகிருதியா? முட்டாளா? முரடனா? வீட்டிலே இல்லாமை முதலிய கஷ்டம் ஏதாவது உண்டா? பெரிய ஜமீன்தாரிணி போலல்லவா அவளை நடத்தினேன்? அப்படி நடத்தப் பாத்தியம் உள்ளவனுக்கு ஒரு தட்டுத் தட்ட உரிமை இல்லையா? இருந்திருந்து வெகு நாள் கழித்துவந்த ஆப்த நண்பனை இவள் அவமதிக்கலாமா? அவனோடு பேசினால் இவள் பதிவிரதைத் தன்மைக்குப் பங்கம் வந்து விடுமோ? அவனோடு பேசும்படி அவளை வற்புறுத்த எனக்கு உரிமை கிடையாதாமே! ஏன் பேசினாய் என்றான் சுசிலாவின் கணவன்; ஏன் பேசவில்லை என்றேன் நான். கிட்டத்தட்ட இரண்டும் ஒரே மாதிரிதான்........''

இந்த இடத்தில் மீளவும் அவன் சிந்தனை திசை மாறியது.

'இரண்டும் எப்படி ஒன்றாகும்! பிற புருஷனோடு பேசுவது தவறு

> ஏன் என்ற வினா விஞ்ஞானத்தை (விளக்கிய) சுடர்? அது இல்லாமலிருந்திருந்தால் மனித குலம் மரத்திற்கு மரம் தாவும் நிலையிலேயே இருந்திருக்கும்.
>
> — வே. ஸ்ரீ. சர்மா

என்பது சரியோ இல்லையோ, இந்துப் பெண் சமூகத்தில் அந்தக் கொள்கை நெடுங்காலமாக இருந்து வருகிறது. அத்தான் என்ருலும் கணவனுக்கு இஷ்டமில்லை; தடுத்தான். அதை மீறிக்கொண்டு அவள் பேசினது குற்றம். அவளுக்காகப் பரிந்து வாதாடப் போகிறேன் நான். சுந்தரியோ இந்தியப் பெண்ணின் பண்பை ஒட்டிப் பிற புருஷனுடன் பேசமாட்டேன் என்ருள்; நான் ரகளை செய்தேன். இரண்டும் எப்படி ஒன்ருகும்?........ பார்க்கப்போனுல் என் செயலில் தான் கிராதகத்தனம் நிறைந்திருக்கிறது........

'இல்லை; ஒருபோதும் இல்லை, சரியோ தவருே கணவன் சொற்படி நடப்பதுதான் மனைவியின் கடமை. ஊராருக்கு என்ன? நாலு விதமும் பேசுவார்கள். பிரமீளா குழந்தை; அவள் என்ன கண்டாள்? தாய்ப் பாசம் இல்லாத குழந்தை ஏது?

'ஆனுலும் குழந்தை வாடி வதங்கிப்போய் விட்டாள். இப்படியே இன்னும் சிறிது காலம் ஓடினுல்....

'ஓடினுல் என்ன ஆய்விடும்? அதையுந்தான் பார்க்கலாமே! பெண்ணுய்ப் பிறந்தவளுக்கு இத்தனை என்ருல்.......

'எதிலும் விஷப் பரீட்சை உதவாது. குழந்தை இப்படியே ஏங்கினுளானுல் அவள் உயிருக்கே........'

"ஹலோ, மிஸ்டர் வாசுதேவன்! அந்தத் தாம்பத்திய வழக்கிலே இன்று நீ ஆஜராகிருயாமே!" என்று வாசுவின் தோளில் கை வைத்தான் ரங்கராஜன். அவன் பக்கத்தில் இருந்த ஜகதீசன், "மிகவும் பொருத்தம்! நாளைக்குச் சுயமே வழக்காட இது ஒத்திகை ஆகும்" என்று கண்ணைச் சிமிட்டினுன். வாசுவின் விஷயம் ஊரில் பரவி எங்கும் புகைந்து கொண்டிருந்தது.

மனப் போராட்டத்தில் மயங்கியிருந்த வாசுவுக்கு அவர்கள் பேச்சு அரைகுறையாகவே காதில் விழுந்தது. அவன் ஒன்றுமே வாய் திறக்கவில்லை. மனதில் கூத்திட்ட எண்ணங்களை உதறிவிட்டுக் கோர்ட்டினுள் புகுந்தான்.



அன்று பெரிய வழக்கு ஒன்றும் விசாரணைக்கு வந்திருந்ததால் கோர்ட்டில் ஏகக் கூட்டம். எடுப்பிலேயே சுசிலாவின் வழக்கு விசாரணை ஆரம்பமாகிவிட்டது. எதிரிதரப்பில் ரகுநாதன் என்பவர் ஆஜராகியிருந்தார், அவருக்கும் வாசுவுக்கும் விரோதம் உண்டு. அதனல் அன்றைய வாதப் பிரதிவாதங்கள் சற்றுக் காரமாகவே இருந்தன. பொது ஜனங்களுக்கு நல்ல வேடிக்கை. வாதி, பிரதிவாதி அவர்களைச் சார்ந்தவர்கள் ஆகியோருக்குக் கவலை. ரகுநாதனுக்கு உற்சாகம். வாசுவுக்கோ அளவற்ற வேதனை.

அநேகமாக வாதப் பிரதிவாதங்கள் தீர்ந்தன. சுசிலாவுக்கே வெற்றி என்று அனைவரும் ஊகித்தனர். தோல்வியைச் சமீபித்துக் கொண்டிருந்த ரகுநாதன் அந்த ஆத்திரத்தில் தம்மை மறந்து பேசினர்:

''மிஸ்டர் வாசுதேவன் மிகவும் சமத்காரமாக வாதாடுகிருர். ஆனல் வாதியாகிய ஸ்ரீமதி சுசீலா செய்த அதே

தவறையே மிஸ்டர் வாசுதேவனின் மனைவியார் இழைத்ததற்காக அவர் அந்த அம்மாளுக்கு அளித்திருக்கும் தண்டனை என்ன? என் கட்சிக்காரர் செய்தைத்தான் அவரும் செய்திருக்கிருர். தம் வாழ்விலே ஊழலை உடையவர் பிறர் வாழ்விலே........''

நீதிபதி பலமாக மேஜையைத் தட்டினர். ''இது கோர்ட்டு என்பதை நினைவில் கொள்ளுங்கள் மிஸ்டர் ரகுநாதன்! சம்பந்தமற்ற முறையில் கண்ணியமான மனிதர் ஒருவருடைய சொந்த விஷயம் பற்றிப் பகிரங்கக் கோர்ட்டில் நீங்கள் இவ்வாறு பேசியது பெருந் தவறு. உங்கள் கட்சியில் நியாயத்திற்கு ஆதாரம் எதுவும் இல்

லாததால் ஜூரர்களின் ஏகோபித்த அபிப்பிராயத்தை ஒட்டி நான் வாதியின் பக்கம் சாதகமாகத் தீர்ப்பு செய்கிறேன்.''

நீதிபதி இவ்வாறு கூறி முடித்ததும் அங்கே ஒரே ஆரவாரம் எழுந்தது. சுசீலாவைச் சார்ந்தவர்கள் வாசுதேவனைச் சூழ்ந்து கொண்டு ஒரேமட்டாகப் புகழ்ந்தனர். சிற்றுண்டிக்கு அழைத்தனர். ஒருவர் அவசரந்தாங்காமல் நூறு ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினர். வாசுதேவன் அவர்களுடன் நின்று பேசவில்லை. யாரையும் ஏறிட்டுப் பார்க்கவில்லை. பணத்தையும் பெறவில்லை. அங்கே கூடியுள்ள அவ்வளவு பேரும் தன்னையே வெறித்துப் பார்ப்பது போல் உணர்ந்தான். கணமும் தாமதியாமல் வேகமாக நடந்தான். அவ்வளவு பேரும் பின்னல் துரத்திக் கொண்டு ஓடி வருவது போலிருந்தது. கண்மண் தெரியாமல் விரைந்தான். வீதியை அடைந்து டாக்ஸி ஒன்றில் அமர்ந்து வீட்டை நோக்கிச் சென்ருன். டாக்ஸியின் சக்கரங்கள் வெகுவேகமாகச் சுழன்றன. அவன் உள்ளம் அதைவிட வேகமாகச் சுழன்றது.

''தம் வாழ்விலே ஊழலை உடையவர் பிறர் வாழ்விலே...''

ரகுநாதனின் ஆணித்தரமான சொற்கள் வாசுவின் நெஞ்சைப் பிளந்தன.

'அவர் சொன்னது உண்மைதானே? 'குடும்பத்தில் கணவனும் மனைவியும் சம அந்தஸ்து உடையவர்கள். மென்மையான உள்ளமும் உடலும் பெற்ற பெண்கள், உரமான உடலையும் உள்ளத்தையும் கொண்டவர்கள் என்பதற்காக ஆண்களுக்கு அடிமையாக வாழ வேண்டும் என்பது நியதியில்லை. என் கட்சிக்காரரை அவர் கணவர் அடித்தது தவறு! தவறு! மகத்தான தவறு!' என்றெல்லாம் வாதிட்டேனே, அப்படி வாதிட எனக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? ஊருக்கு உபதேசம்! சட்! நானும் ஒரு மனிதன!....

டாக்ஸி வாசு வீட்டின் முன்னே சென்று நின்றது. வராந்தாவில் விளையாடிக் கொண்டிருந்த பிரமீளா, ''அப்பா!'' என்று ஓடி வந்தாள். ''என்னைக் காரிலே அழைத்துக் கொண்டு போ அப்பா'' என்று கொஞ்சினள்.

''இதோ, காரிலே போகலாமடா கண்ணு'' என்று கூறிக் கொண்டே குழந்தையைத் தூக்கிக் கொண்ட வாசு டிரைவரை நோக்கி, ''இரு அப்பா வருகிறேன். ஸ்டேஷனுக்குப் போக வேண்டும்'' என்று கூறிவிட்டு உள்ளே சென்ருன்.

''எங்கே அப்பா போகணும்?''

''ஸ்டேஷனுக்கு.''

''அங்கே போயி?''

''ரெயிலில் ஏற வேணும்''.

''ஏறி?''

''ஊருக்குப் போக வேணும்.''

''எந்த ஊருக்கு?''

''பட்டுக்கோட்டைக்கு!''

''என்ன என்ன! நிஜம்மாவா?''

''ஆமாம், ஆமாம், ஆமாம்!''

''அங்கேதானே அம்மா இருக்கிருள்?''

''அங்கே தான் இருக்கிருள்.''

''என்னையும் அழைத்துக் கொண்டுதானே?''

''ஆமாம்.''

''உனக்கு....உனக்கு.... அம்மா மேலே....''

''கோபம் இல்லையடா கண்ணு.''

''அம்மாவுக்கு உன் மேலே?''

''அது அங்கே போய்த்தான் தெரிய வேணும். தாத்தா எங்கே? கூப்பிடு.''

''இதோ வந்தேன். என்ன வேணும்?''

"ஒன்றும் இல்லை. நான் குழந்தையுடன் பட்டுக்கோட்டை வரையில் போய் வருகிறேன்..."

"ஆ! நிஜமாகவா?....அம்மாளை...."

"அழைத்து வரத்தான். வீடு ஜாக்கிரதை!"

"டிபன் காபி கொண்டுவரட்டுமா?"

"வேண்டாம். குழந்தை சாப்பிட்டுவிட்டாள் அல்லவா? அது போதும். சுந்தரியைப் பார்க்கும் வரை நான் ஜலபானங்கூட பண்ண மாட்டேன்!"

பரபரவென்று உடைமாற்றிக் கொண்டான் வாசு. கைப் பெட்டியில் வேண்டியவற்றை எடுத்துக் கொண்டான். ஒரு கையில் பிரமீளாவையும் மற்றொரு கையில் பெட்டியையும் பிடித்தபடி தெருவை நோக்கி விரைந்தான்.

அவன் வராந்தாவை அடைந்த போது மற்றொரு கார் வந்து அங்கே நின்றது. சுந்தரி இறங்கி வந்தாள்.

"அம்மா!...."

"ஏனடா கண்ணே!...."

"சுந்தரீ!...."

கணவனின் முகத்தைக் கடைக் கண்ணால் பார்த்தபடி இதழ்களில் முறுவல் சிந்த உள்ளே சென்றாள் சுந்தரி. வாசுவும் அவளைத் தொடர்ந்தான். இருவர் கரங்களையும் பற்றியபடி நடுவே குதித்துக் குதித்து நடந்து சென்றாள் பிரமீளா. தெருவார் இந்தக் காட்சியைக் கண்டு வியந்தனர்; மகிழ்ந்தனர்.

"சுந்தரீ, என்மேல் கோபம் இல்லையே?"

"உங்களுக்கு என்மேல் கோபம் இல்லையே? என்னால் குழந்தையைப் பிரிந்து இருக்கவே முடியவில்லை."

"எனக்குத்தான் ரெண்டு பேர் மேலேயும் கோபம் இருந்தது. இப்போ இல்லை" என்று களுக்கென்று சிரித்தாள் பிரமீளா. பெற்றோரும் அவளோடு சேர்ந்து சிரித்தனர்.

அத்தைமகன்

கோமதி சுப்ரமணியம்

பிரித்த கடிதத்தை சுழித்த முகத்துடன் படிக்கும் தந்தையை உற்று நோக்கினாள் செங்கமலம். நீண்ட பெருமூச்சுக்குப் பின்னர் படித்து முடித்ததற்கு அறிகுறியாகக் கடிதத்தை மடக்கினார் தந்தை.

''என்னப்பா விசேஷம்.... எங்கிருந்து வந்தது கடிதம் என்று மகள் கேட்டதற்கு நேரடியான பதில் அளிக்காமல் 'கொடுத்து வைக்காதவள்' என்று கூறி நிறுத்தினார் நல்லகண்ணு பிள்ளை.

''என்ன கொடுத்து வைக்கவில்லை. அவள் கேட்டனுப்பிய டிஷ்யூ புடவை கிடைக்கவில்லையா? அல்லது அவள் செய்யச் சொல்லியிருந்த சந்திர மாலைக்கு நல்ல முத்து கிடைக்கவில்லையா....'' என்று கேட்டுக் கொண்டே அங்கே வந்தாள் மங்களம். ''அதற்கு மேலாக'' என்று கூறிய கணவனின் முகக்குறியிலிருந்து விஷயம் முக்கியமானதெனத் தெரிந்து கொண்டாள் மங்களம். ''என்ன அப்பாவும் மகளும் ஒரு மாதிரியா இருக்கிறீங்களே. என்ன விசேஷம்'' என்று கேட்கவே அன்று வந்த கடிதத்தை மனைவியிடம் நீட்டினார் நல்லகண்ணு.

''உன் அண்ணாவின் பிள்ளைக்கு கல்யாணம் நிச்சயப்படுத்தியிருக்கிறார்களாம். உதவிக்கு நம்மை உடனே புறப்பட்டு வரும்படி கடிதம் எழுதியிருக்கிறார்கள்....''

''போதுமே நம்ம உதவியைத் தான் எதிர்பார்த்திருப்பார்களாக்கும் உங்கள் தங்கை. அவர்களுக்கென்ன பணக்காரர்கள். பணத்துக்காக பத்துப் பேர் காத்திருப்பார் உதவி செய்ய, நம்மைத்தானா எதிர்பார்த்திருக்கப் போகிறார்கள்......''

''நம்மிடம் பெண் எடுக்கவில்லையென்பதற்காக நிஷ்டூரமாகப் பேசாதே மங்களம். அவர்களுக்கென்னவோ படித்த பெண்ணாக வேணுமென்கிற ஆசை.... பிள்ளையாண்டான் படித்த பெண்ணைத்

மூன்று சிறந்த ஔஷதங்கள்.

(ஒவ்வொரு வீட்டிலும் அவசியமாய் இருக்க வேண்டியது)

ஜாமா ஆயில்

ஜலதோஷம், தலைவலி முதலியவைகளுக்கு

★

ஜாமா றப்

ஜலதோஷம், தலைவலி முதலியவைகளுக்கு

★

ஜாமா இன்ஹேலர்

ஜலதோஷத்திற்கு

Grams: "ZAMA" Estd: 1900 Phone: 2182

Amarchand Sobachand

POST BOX 518.

95, NAINIAPPA NAICKEN STREET, MADRAS-3.

When ASTHMA attack is imminent use

MULTIMIX

Indo-French Pharmaceutical Co.,

P. B. No. 1542. **MADRAS-1.**

ருசிமிக்க ரொட்டி பண். ஐகிளாஸ் பிஸ்கட்ஸ்
ஆரோக்கியம் தரும் பேன்சி கேக்ஸ்
தயாரிப்பவர்: ராதா பிஸ்கட் பாக்டரி, சென்னை-1.

தான் கல்யாணம் செய்து கொள் வேன் என்று சாதிக்கும் போது தங்கைதான் என்ன செய்ய முடியும்.... என் தங்கை பெண் பிள்ளை அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை. உன் அண்ணா என்ன செய்து விட்டார்........அவரும் சேர்ந்து தானே அந்நிய சம்பந்தத்திற்கு இசைந் திருக்கிறார்....'' பேச்சு போர்முனையில் திரும்பவே இடையிட்டாள் செங்கமலம்,

உங்கள் இருவருக்குள் ஏன் மனஸ்தாபம். எல்லாம் அவரவர் பிராப்தம் போலத்தானே நடக்கும்...''

பெரிய மனுஷி போல் மகள் வேதாந்தம் பேசுவதைக் கண்டு இருவரும் சண்டையை நிறுத்திக் கொண்டனர்.

பெற்றோர் போரை நிறுத்த சமாதானம் கூறினாள் செங்கமலம். ஆனால் அவள் மனப்போரை நிறுத்த...?

டாக்டர் கருணாகரனின் கல்யாண அழைப்பிதழ் மேஜைமீது பிரித்தபடி கிடந்தது. கருணாகரன் அவள் அத்தை மகன், தாய் மாமனுங்கூட. இரண்டு பக்கத்துஉறவு. நல்ல கண்ணுபிள்ளை அந்த நாளில் தங்கையை தன் மைத்துனனுக்கே மணமுடித்துக் கொடுத்திருந்தார். நாத்தனார் தன் மதனியாக மாறியதில் மங்களத்துக்கு பரமதிருப்தி. ஒன்றுக்குள் ஒன்று. உறவுவிட்டுப் போகாமலிருக்குமென்ற எண்ணம். அவள் ஆசையை வளர்க்க கருணாகரன் பிறந்த மூன்றாவது வது வருஷம் மங்களத்திற்கு பெண் பிறந்தாள். நாத்தனார் மன்னி என்கிற உறவு போய் அன்றே சம்பந்தியாகி விட்ட நினைப்பு.

காலம் கடந்தன, அவள் கனவுகள் வளர்ந்தன. சின்னஞ்சிறுவன் கருணாகரனும் அறியாச் சிறுமி செங்கமலமும் கூடி விளையாடும் காட்சியைக் கண்டு களித்து மகிழ்ந்த நாட்கள் எத்தனை யெத்தனையோ ?

லீவு தோறும் தவறாமல் கருணாகரனையும் அவன் தங்கை சாந்தாவையும் கிராமத்திற்கு அழைத்து வருவார்கள். அவர்கள் கிராமத்தில் வந்து தங்கியிருக்கும் ஒரு மாதமும் வீடு கோலாகலம்தான்.

அளவு மீறித் தன் மனைவி உபசரிப்பதைக் கண்டு தனக்குள் சிரித்துக் கொள்வார் நல்லகண்ணு பிள்ளை. இப்பொழுதே உன் விருந்தையெல்லாம் முடித்து விடாதே மங்களம். மாப்பிள்ளையாக உன் வீட்டிற்கு வரும்போது செய்ய வேண்டிய மரியாதையைக் கொஞ்சம் பாக்கி வைத்திரு என்று பரிகசிப்பார் மனைவியை. அந்த பரிகாசத்தில் தான் அவருக்கு எத்தனை மகிழ்ச்சி.

''என்னைச் சொல்லுகிறீர்களே. நீங்கள் மட்டும் என்னவாம். இப்படவே மருமகனுக்கு டஸ்ஸூர் கோட்டும் ''பின்னி'' டிரவுசரும் தைத்து நிரப்புகிறீர்களே. வீட்டு மாப்பிள்ளையாக வந்து விட்டால் கேட்க வேண்டுமா ?'' என்பாள்.

''அப்போ மதிப்பே இருக்காது மாமி. மாப்பிள்ளை ஆகும்வரை தான் மாப்பிள்ளையாகச்சம்மதிக்க வேண்டுமே என்று உபசரணை.... மாப்பிள்ளை ஆகி விட்டாலோ திரும்பிக்கூட பார்க்கமாட்டார்கள் என்பாள் சாந்தா. குறும்புக்காரி! சதா அவள் ஏதாவது குறும்புத்தனமாகப் பேசிக்கொண்டே இருப்பாள். அவள் பேச்சோடு பேச்சாக செங்கமலத்தை கிராமத்துப் பெண் என்று சுட்டிக் காட்டாதிருக்கமாட்டாள்.

காலம் வளர்ந்தது. செங்கமலத்தின் மனதில் கருணாகரன் மீது கொண்டுள்ள அன்பு வளர்ந்தது. கருணாகரன் மனதில் ஆசை வளர்ந்தது தனக்கு வரும் பெண் படித்தவளாக இருக்க வேண்டுமென்று.

செங்கமலத்தின் படிப்பு எட்டாவதோடு நின்றது. மேலே படிப்பதற்கு கிராமத்தில் வசதியில்லை. நகரத்தில் தங்கையிடம் கொண்டு விடவேண்டும்.

குச் சம்மதிக்க வில்லை. நாலு பேர் நாலு வார்த்தை சொல்லுவார்கள். வயதுவந்தபெண்ணை அதுவும் முறை மாப் பிள்ளை இருக்கிற இடத்திலே படிக்க அனுப்பினான் என்கிற அவச்சொல் லுக்கு இடம் கொடுக்கக் கூடாதென்று அஞ்சினார்.

எத்தனை எடுத்துரைத்தும் அண்ணன் தன் ஏற்பாட்டிற்குச் சம்மதிக்க வில்லையே என்கிற ஆதங்கம் கருணாகரனின் தாய் செல்லம் மாவுக்கு. தன்னை சட்டைசெய்யவில்லை தன் சொல்லை மதிக்க வில்லை என்கிற ஆத்திரம் கருணாகரனுக்கு. ஆத்திரம் வெறுப்பாக மாறி, வெறுப்பு அலட்சியமாக மாறுமளவுக்கு விரோதம் வளர்ந்து விட்டது.

சாந்தாவோடு சேர்ந்து படிக்க நகரத்திற்கு வரச் சொல்லி அத்தை கடிதத்தின் மேல் கடிதமாக அனுப்பினாள். அதற்குச் சரியான பதில் வராது போகவே கருணாகரனை அனுப்பி அழைத்து வரச் சொன்னாள். அண்ணன் மகளது படிப்பில் மிகுந்த ஆர்வம் செலுத்தினாள் செல்லம்மா. காரணமிருந்தது. பெண் படிக்க வில்லை என்பதற்காக மகன் நிராகரித்துவிட்டால் அவள் நெடுநாளைய கனவு கனவாகவே நின்று விடும். தன் கனவை நினைவாக் கவே செங்கமலத்தின் படிப்பை விருத்தி செய்ய விருப்பம் கொண்டாள்.

கிராம சூழ்நிலையிலே ஊறிப் போன நல்லகண்ணுப் பிள்ளை அத்தனை முன்னேற்றத்திற்

கருணாகரன் சிறுவயதில் கொண்ட தீர்மானத்தை பெரியவனான பின்பு செயலில் காட்டினான். அதன் விளைவு சுகுணா எம். பி. பி. எஸ், அவன் வாழ்க்கைத் துணையாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தாள்.

நல்ல கண்ணுபிள்ளையின் ஒரே வாரிசான செங்கமலத்திற்கு போதிய செல்வமிருந்தது. காலேஜ் படிப்பு இல்லையாயினும் ஓரளவு கல்வி யிருந்தது. குடும்ப பண்பாடு நிறைந்திருந்தது. எல்லாவற்றிலும் மேலான அழகு இருந்தது. அழகென்னும் பெயரால் தலைகவிழ்த்தாடும் நாகரீகமில்லையே தவிர களை பொருந்திய தெய்வீக அழகு நிறைந்திருந்தது. அத்தானுக்கு வேறு இடத்தில்

பெண் கிடைத்தது போல செங்கமலத்திற்கும் ஒருவன் இல்லாமல் போய்விட மாட்டான்.

காலம் அவர்கள் வாழ்வின் திருப்பத்தை மாற்றி அமைத்து விட்டாலும், குழந்தை முதல் அவனுக்கு இவள் - இவளுக்கு அவன் என்று பெரியோர் சுட்டிப் பேசிய சொல்லின் ஒலி மறைந்து விடுமா? அவர்கள் பேச்சால் எழும்பிய அவளது மாளிகை சுலபத்தில் அழிந்து விடுமா? ரத்தத்தோடு கலந்துவிட்ட அன்பில் வரிந்துக் கொண்ட எண்ணம் அகன்று விடுமா? எவ்வளவோ முயன்றும் அவளது மனத்திரையிலே பதிந்து விட்ட அத்தானின் உருவத்தை அகற்ற முடியாமல் அவதியுற்ருள் பேதை.

* * *

விவாகத்திற்கு நாலு நாள் முன்னதாகவே புறப்பட்டது நல்ல கண்ணு பிள்ளையின் குடும்பம். சம்பந்தியாகச் செல்ல வேண்டியவர்கள் அந்நியரைப் போல கல்யாணம் விசாரிக்கச் சென்று கொண்டிருந்தார்கள். செங்கமலத்தின் மனதிலே பலப்பல நினைவுக் கோளங்கள். எத்தனையோ இன்ப நினைவுகளோடு செல்ல வேண்டிய பயணம். ஆனுல் இன்ரு சீறும் புயலை உள்ளடக்கி சிரித்து மழுப்பி செல்ல வேண்டிய நிர்பந்தமான நிலையில் சென்று கொண்டிருந்தாள். நேரம் கடந்தன. பாதைகள் ஓடின. அவள் மனத்தடத்திலே....

'தான் மட்டும் மணமகளாக இருந்தால்...?' எண்ணம் மின்னிய மறு கணம் வரவேற்பு வைபவத்தில் சென்று புதைந்தது நினைவு. ஸ்டேஷனுக்கு யார் யார் வந்திருப்பார்கள். மணமகனே வந்திருக்கலாம்... உடம்பு புல்லரித்தது. அதை யடுத்து நிகழும் சம்பவங்கள் கோர்வையாக நிழலாடின.... ஆம். அத்தனையும் நிழலாட்டம் தான் அவள் வாழ்வில். கனவு கலைந்து நினைவு தோன்றியபோது வண்டி திருநெல்வேலி ஸ்டேஷனில் நின்றது.

அழகுப்பையும் ஆடம்பர அலங்காரத்துடனும் வந்திருந்தாள் சாந்தா ரயில் நிலையத்திற்கு. அருகே அவள் சகோதரன் கருணுகரன்.

''நமஸ்காரம் மாமா'' என்று வணக்கம் செலுத்தி பதில் வணக்கம் பெற்றுக் கொண்டதின் பின் வழி நடந்தனர்.

''என் ஏற்பாடு தங்களுக்கு மனக்கசப்பை அளித்திருக்காதென எண்ணுகிறேன்'' என்ருன் மணமகன் கருணுகரன், முன்பே நான் கூறியதுதானே. என் போக்குக்கு நீங்கள் சம்மதியாததின் விளைவு இது என்று சொல்லாமல் சொல்லியதுபோலிருந்தது அவன் பேச்சு.

''வருத்தம் எதற்கப்பா எல்லாம் அவன் செயல் போல் நடக்கும்'' என்று ஒரே வார்த்தையில் கூறிய நல்ல கண்ணுப் பிள்ளை மேலே பேச முடியாமல் நிறுத்திக் கொண்டார். மேலே பேசுவது அவர் பலஹீனத்தை வெளிப்படுத்திக் கண்ணீரைக் கொட்டி விடுமோ என்கிற எல்லையில் துக்கம் முட்டி விடவே வாளா இருந்து விட்டார். உள்ளப் போராட்டத்திற்கு உள்ளத்துள்ளேயே வழி வகுத்துக் கொடுத்து விட்டு மேலே நீறுபூத்த நெருப்பாக விளங்கினுர்.

வண்டியை விட்டிறங்கி வீட்டிற்குள் நுழைந்தனர். ஓடிவந்த செங்கமலத்தைக் கட்டிக்கொண்ட செல்லம்மா ஒரு மூச்சு கண்ணீர் வடித்தாள்.

''எதற்காக மதனி நல்ல காரியம் செய்யும்போது கண்ணீர் வடிக்கிறீர்கள். எல்லாம் அவரவர் பிராப்தம்போலத்தான் நடக்கும்'' என்று மங்களம் மேலுக்கு கூறினுளே தவிர அவள் கண்களும் குளமாகப் பெருகின. அவர்கள் கலங்குவதைக் கண்ட கருணுகரனின் இரும்பு மனமும் சற்றே அசைந்து கொடுத்தது. மறு கணமே சுயகௌரவம் அவனுக்கு திடம் கொடுத்தது. உன் சொல்

லைக் கேட்காதவர்களை நீ மதிக்காதே. அன்றே உன் சொல்லைக் கேட்டு செங்கமலத்தைப் படிக்க வைத்திருந்தால்.... உள்ளுணர்வு இடம் கொடுக்கவே அப்பால் நகர்ந்து விட்டான் கருணாகரன்.

மேலும் வளர்த்துவதால் பயனென்ன என்று நினைத்த நல்ல கண்ணுபிள்ளை தங்கைக்கு சமாதானம் கூறி அவள் காரியத்தைக் கவனிக்க அனுப்பினர்.

* * *

விவாகத்திற்கு இன்னும் இரண்டு நாள் இருந்தது. வருகிறவர்களும் போகிறவர்களும் 'கொடுத்து வைக்காதவள்' என்ற பொருள் பதிந்து தன்னைச் சுட்டிப் பேசுவதைக் கேட்க சகியாத செங்கமலம் அந்தக் கல்யாணத்திற்கே வராதிருந்தோமில்லையே என்று நினைத்து கலங்கினாள்.

தூரத்து உறவினரான பங்கஜம் தன் வீட்டிற்கு வரச்சொல்லி யதேச்சையாக அழைக்கவே செங்கமலத்திற்கு பரம திருப்தியாக இருந்தது. இரண்டு நாட்களாவது மற்றவர்கள் நச்சுவாயினின்றும் தப்பலாமென்கிற எண்ணத்தில் அவர்களோடு புறப்பட்டுப் போய்விட்டாள்.

கல்யாண தினத்தன்று உறவு வீட்டாரோடு அவளும் வந்தாள். செங்கமலம் அவர்களோடு சென்றிருந்தது சாந்தாவுக்குத் தெரியாது. அவள் போனபின்பே தெரியும். மதனி உறவு ஏற்படாவிட்டாலும் மாமன் மக்கள் உறவும் அன்பும் விட்டா போய்விடும்? செங்கமலம் தன்னோடு கல்யாண காரியத்தில் கலந்து கொள்ளவில்லையே என்கிற ஆதங்கம் அவளுக்கு.

பிற மனிதர்களைப் போல கல்யாணத்தன்று காலையில் வந்த செங்கமலத்தைக் கண்டதும் ஒரேயடியாகக் கோபம் கொண்டாள் சாந்தா. "அயலூரிலிருந்து வந்தும் அந்நியப் பெண்ணைப் போல அடுத்தவர்கள் வீட்டில் தங்கி விட்டாயே செங்கமலம். மதனியாகப் பிராப்தமில்லாவிட்டாலும் மாமன் மகள் என்கிற அநுசரணையில் உன்னாலியன்ற ஒத்தாசை செய்யக் கூடாதா...." என்று கேட்டாள் சாந்தா. அடங்கிக் கிடந்த புயலை எழிப்பிவிட்ட நிலையை அடைந்தது செங்கமலத்தின் உள்ளம். அத்தான் தன்னை மணக்கவில்லை என்ற வருத்தத்தைவிட அதை ஆளுக்கு ஆள் சுட்டிப் பேசியதே அவள் துக்கத்தைப் பெரிது படுத்திற்று. அவள் மனப்போராட்டத்தையோ உள்ளத்தின் கொந்தளிப்பையோ கல்யாண வீட்டிற்கு வருகிறவர் அறிந்திருக்க நியாயமில்லை அவர்கள் பேச்சால் பேதைப் பெண்ணின் மனம் பிழிபடுகிறதென்பதை அறியாத அவர்களில் "இவள்தான் முறைப் பெண்ணு" என்று கேட்டவர்கள் சிலர்.

"முறைப்படி நடப்பதாயிருந்தால் இவள் மணமகள் ஸ்தானத்தில் இருக்கவேண்டியவள்" என்று பேசியவர் பலர். ஒவ்வொருவரும் பேசிய பேச்சு செங்கமலம் அடைய வேண்டிய சாயுஜ்ய பதவி இழந்து விட்டதற்காக அனுதாபத்தைக் கொட்டி அவள் மனதைப் பேயாக்கினர்.

நினைக்க நினைக்க தலை சுற்றியது. நிலை தடுமாறியது. தன்னையே தான் மறக்கக் கூடிய நிலையில் கொண்டு நிறுத்தியது கூடியோரின் பேச்சு.

பாண்டுவாத்தியங்கள் பலமாக முழங்கின. நாகரீக கல்யாணமானாலும் ரெட்டை நாயனம் ராகங்களை சக்கையாகப் பிழிந்தெடுத்துக் கொண்டிருந்தன.

மணமேடையின் கலகலப்பு. வாத்தியாரின் மந்திர உச்சாடனம் ஒருபுறம். பெண்ணை மணமேடைக்குத் தயாரிக்கும் கூட்டம் அதன் வேலையில் மும்முரமாகத் திளைத்து நின்ற காட்சி மற்றொரு பக்கம்.

கல்யாணத்திற்காக வருகிறவர்களை வாசலில் சென்று வரவேற்று உபசரித்து, கூடவே அழைத்துச் சென்று சாப்பாடு செய்து வைப்பதும் மும்முரமா அலைந்து கொண்

டிருந்தாள் செல்லம்மா. இடையிடையே மகளிடம், 'சாந்தா உன்னிடம் ஒப்படைத்த பொருள்களை எல்லாம் அவர்கள் கேட்பதை அவ்வப்போது கவனமாக எடுத்துக் கொடம்மா. ஒன்றுக் கொன்று தவருகக் கொடுத்து விடாதே. அவசரத்தில் எதையாவது கை மறதியாக வைத்து விடாதே' என்றெல்லாம் எச்சரித்துக் கொண்டிருந்தாள் சாந்தாவை.

விவாக சம்பந்தமான துணிமணி தாலிச்சரடு மற்றும் அதற்கான பொருள்களை யெல்லாம் முந்தின தினமே பிரித்துக் கொடுத்து சாந்தாவிடம் ஒப்படைத்திருந்தாள்.

தன்னுடைய மறதியிலும் சாந்தாவின் திறமையிலும் அத்தனை நம்பிக்கை செல்லம்மாவுக்கு.

'ஆகட்டும்மா கவனித்துக் கொள்ளுகிறேன்' என்று கூறிக் கொண்டாள்.

கலகலவென்ற சிரிப்பலையை எழுப்பிக் கொண்டு நாலைந்து நாகரிக யுவதிகள் பந்தலினுள் நுழைந்தனர். தனது தோழிகளை தூரத்தே கண்டு விட்ட சாந்தா ஓடிச்சென்று எதிர் கொண்டழைத்து அவர்களை வீட்டினுள் அழைத்து வந்தாள். வந்தவர்களுக்கு காபி கொண்டு வரச் சொல்லி செங்கமலத்தை அனுப்பி விட்டு தன் தோழிகளோடு சம்பாஷித்துக் கொண்டிருந்தாள்.

''மாமன் வேஷ்டி வரட்டும்' என்ற குரல் பந்தலிலிருந்து அஞ்சல் எழுந்தது. இனி அடுத்தடுத்து ஒவ்வொன்ருகக் கேட்டுக் கொண்டே இருப்பார்கள். ஒவ்வொரு முறையும் அறையில் சென்று வரமுடியா தென்பதற்காக பெட்டியை அவளிருந்த இடத்திற்கே கொண்டுவரச் சொல்லி ஒரு ஜோடி வேஷ்டியும் அங்கவஸ்திரமும் எடுத்துக் கொடுத்தனுப்பினுள்.

செங்கமலம் கொண்டுவந்த காபியை வாங்கி தன் கைபடவே தோழிகளுக்குக் கொடுத்து உபசரித்துக் கொண்டிருந்த போது 'கூரைப் புடவை வரட்டும்' என்று அடுத்து அஞ்சல் எழுந்தது. பேச்சு சுவாரஸ்யத்தில் கூரைப் புடவைக்குப் பதிலாக மாப்பிள்ளையின் தங்கைக்கு எடுத்த பார்சலைக்கொடுத்தனுப்பி விட்டாள்.

பந்தலில் பிரித்த போது கவனித்த செல்லம்மா மகளை கடுமையாகக் கோபித்துக் கொண்டாள். அம்மாவிடம் புடவையை வாங்கி பெட்டியில் போட்டுவிட்டு கூரைப் புடவையை எடுத்துக் கொடுத்தனுப்பியபோது சாந்தாவின் நாலு வயது குழந்தை அழுது கொண்டு வந்து நின்ருள்.

''என்னடி என்ன'' என்று எரிச்சலோடு அதட்டிக் கேட்கவே விம்மிக் கொண்டிருந்த குழந்தையின் அழுகை பெரிய ஓலமாக எழுந்தது. வாசலில் முழங்கிய நாயனத்திற்கு மேலாக குழந்தையின் அழுகைக்குரல் ஆரம்பிக்கவே ஆளுக்கொருபுறமாக சாந்தாவை அடக்க ஆரம்பித்து விட்டார்கள்.

''குழந்தைக்கு வேண்டியதை முதலில் கவனியேன் சாந்தா'' என்று அம்மாவும் மற்றையோரும் கூறவே சாந்தாவிற்கும் அது உசிதமாகவே பட்டது. குழந்தையின் விருப்பத்தைக் கேட்டபோது தனக்கு புதிய 'பிளவுஸ்' வேண்டுமென்று தெரிவித்தாள். இதற்குத்தான இத்தனை அமர்க்களம் என்று எண்ணியபடியே குழந்தை விரும்பிய பிளவுஸை செங்கமலத்திடம் கொடுத்து போடச்சொல்லி விட்டு பந்தலைக் கவனிக்கப் போய் விட்டாள் சாந்தா.

அங்கிருந்த பெட்டியின் மீதமர்ந்த குழந்தைக்கு உடை மாற்றி முடித்தாள் செங்கமலம். தான் விரும்பிய உடையை அணிந்து விட்ட மகிழ்ச்சியில் குழந்தை சந்தோஷமாக விளையாடிக் கொண்டிருந்தது.

''அக்கா, அக்கா இதோ பார் என்று தன் கையிலகப்பட்டவஸ்து ஒன்றை எடுத்து நீட்டியது செங்கமலத்திடம். வாங்கிப் பார்த்த செங்கமலம் திடுக்கிட்டாள்.

“புத்தம் புதிய வெள்ளிக் குங்குமச்சிமிழ். அதனுள்ளே சிவந்த குங்குமத்தினிடையே மஞ்சள் மின்னிய தாலிச்சரட்டில் பிணைத்த பொன் தாலி மின்னிக் கொண்டிருந்தது.

சற்று நேரத்தில் கருணாகரன் கைப்படவே சுகுணா எம். பி.பி. எஸ் கழுத்தை அடைக்கலமாகப் போகும் தாலிச்சரடு. செங்கமலத்தின் கையில் சிக்கியிருந்தது.

குரோதம் நிறைந்த அவள் மனதில் கொடிய எண்ணம் பிறந்தது. தன்னையும் அத்தானையும் வேறாகப் பிரிக்க வந்த அந்த சரட்டை மறைத்து விட்டால்?

மறைத்துவிட்டால் பின் என்னென்ன நிகழும் என்பதை கற்பனைக் கண் கொண்டு நோக்கினாள்.

பெட்டியில் குங்குமச் சிமிழைக் காணாத சாந்தா திடுக்கிட்டு அங்குமிங்கும் தேடுவாள். விஷயமறிந்த அத்தை கையை நெறித்துக்கொள்வாள். இதற்குள் பந்தலுக்குள் விஷயம் எட்டி விடும். கூட்டத்தில் பரபரப்பு. நல்ல அதிசயம் தாண்டி. முகூர்த்த வேளையிலே தாலியைக் காணோமாம். இந்த அபசகுணத்திலே பெண் கொடுத்தா விருத்தி வந்தாப்பிலே தான் இவா சம்பந்தமும் வேண்டாம் ஒன்றும் வேண்டாமென்று மூட்டையைக் கட்டுகின்றனர் பெண் வீட்டார். புதிய தாலி வாங்கிவர ‘ரெடிமேட்’ கடைக்கு ஆள் பறக்கிறது. ஆனாலும் பெண் வீட்டார் மூட்டை கட்டியது கட்டியது தான்....

தன் பணமும் பவிஷும் பாழாய் போகிறதே என்று அங்கலாய்க்கிறார் மாமா. மேலே நடப்பதென்ன. யாரோ ஒரு பெண்ணை குறிப்பிட்ட முகூர்த்தத்தில் மனையிலிருத்தி மணமுடித்து வைக்கிறார்கள். அந்தப் பெண் யார்? சந்தேகமில்லாமல் செங்கமலமேதான்.... அத்தை மகள் காத்திருக்கும் போது வேறு யாருக்கு அந்த உரிமை வரும்.

செங்கமலத்தின் கற்பனையில் தோன்றியது இத்தனையும். ஆசை துணிவைக் கொடுத்தது.. துரிதத்

தில் முடிந்தது வேலை. சிமிழை மறைத்து விட்டாள் நிமிஷத்தில் ஆனால் துரோகம் செய்த மனதை மறைக்க முடியாமல் அவதியுற்றாள். மேலேநடக்கப் போவதைக் கவனிக்க ஆசை ச தூண்டினாலும் குற்றம் புரிந்த மனதோடு அங்கே நிற்க விரும்பாமல் தனி இடம் தேடி மறைந்தாள்.

* *

அவள் தேடி வந்தது தனிமையை. அவளைத் தேடி வந்தாள் அவளது நெடுநாளைய தோழி மாதவி. அவள் மட்டும் வரவில்லை. கூடவே மற்றொரு பெண்ணையும் அழைத்து வந்தாள்.

“இவளை உனக்குத் தெரியவில்லையாடி செங்கமலம். இவள் தான் என் சித்தி பெண் சுபத்திரா. குழந்தையாக இருக்கும்போது நம்மோடெல்லாம் ஜாலியாக விளையாடுவாளே.... சாந்தா கூட இவளை “ஜாலிபெல்லோ” என்று அழைப்பாளே.... பாவம் அவள் வாழ்க்கைதான் அதற்கு நேர் மாறாக அமைந்துவிட்டது....” கேட்காதபோது உரிமையோடு பேசிக்கொண்டே . செங்கமலத்தையும் பேச்சுக்கிழுத்தாள் மாதவி. அவளுக்கிருந்த மனக்குழப்பத்தில் யாருடனும் பேச்சு கொடுக்க விரும்பவில்லை செங்கமலம். ஆனால் பேசாதிருப்பதும் மரியாதைக்கழகல்ல. ஆகவே ஏதாவது பேசவேண்டுமே என்று “ஏன் அவள் வாழ்க்கைக்கென்ன?” என்று அசுவாரஸ்யமாகக் கேட்டு வைத்தாள்.

“விஷயம் தெரியர்தா உனக்கு. சாந்தா சொல்லியிருப்பாள் என்றல்லவா நினைத்தேன். இவளுடைய அத்தை மகன் சந்திரகாந்தனுக்கு ஏனோ இவளை பிடிக்கவில்லை. இவளுக்கென்ன அழகில்லையா? அந்தஸ்தில்லையா? அல்லது குணம்தான் இல்லையா? எல்லாம் இருந்தும் ஏனோ அவனுக்கு பிடிக்கவில்லை. அவன் போக்கிலே விட்டு வைக்காமல் தாயார் பலவந்தமாய் பிடித்து இவளைக் கட்டி வைத்தாள். அதன் பலன் இன்று இந்தப் பேதை அனுபவிக்கிறாள். உன்னிஷ்டத்திற்குதானே பெண் கொண்டுவந்தாய் உனக்கு மருமகளாக மட்டும் வைத்துக்கொள் என்று நிராகரித்துவிட்டான். என்றாவது மனம் மாறாதா என்று காத்

திருக்கிருள்.... காத்துக்கொண்டே இருக்கிருள். பாவம் அவன் மனம் நிலை மாறுவதாக இல்லை. பாவம் அத்தையின் அனுசரணை மட்டும் இல்லாதிருந்தால் இந்தப் பெண்ணின் உயிர் எப்பொழுதோ போயிருக்கும்''.

மேலே மாதவி பேசுவதைக் கேட்க செங்கமலத்தின் மனதில் தெம்பில்லை. மாதவி சொன்ன வரலாற்றிற்கும் தன் செய்கைக்கும் ஏதோ சம்பந்த மிருப்பதைப் போன்று உள்ளுணர்வு சொல்லிற்று. தாலியை மறைத்து விட்டதால் அத்தான் தன்னையே மணந்து கொள்ளுவான் என்பதுதான் என்ன உறுதி. அப்படியே மணந்து கொண்டாலும், பலவந்தமாக மணந்துகொண்டு அவதியுறும் சுபத்ராவின் நிலைதான் தனக்கும் ஏற்படுமோ....? இருந்திருந்து வாழாவெட்டி வாழ்வுக்கா இத்தனை முயற்சி. அந்த நிமிஷமே தன் யோசனையை கைவிட்டாள். அவள் வாழ விரும்பினுள். அது போலவே அத்தானையும் வாழ வைக்க விரும்பினுள். அந்த நிமிஷமே மாடியினின்று இறங்கினுள் படபடப்பாக.

அவள் வந்த சமயம் அறை ஒரே அல்லோல கல்லோலமாக இருந்தது. சாந்தா கல்யாண சாமான் வைத்திருந்த பெட்டியையே தலைகுப்புற கவிழ்த்து எதையோ தேடிக் கொண்டிருந்தாள். அங்கு கூடி இருந்த அனைவரது முகத்திலும் கலவரம் நிறைந்த பரபரப்பு. சாந்தா எதைத் தேடுகிருள் என்பது செங்கமலத்திற்குத் தெரியும்.

''சாந்தா நீ தேடும் பொருள் என்னிடம் இருக்கிறது. குழந்தைக்கு பிளவுஸ் எடுத்துக்கொடுக்கும் அவசரத்தில் குங்குமச் சிமிழை கீழை வைத்து விட்டாய். நல்ல வேளையாக அது என் கையில்பட்டது. பத்திரமாக அதை உன்னிடம் சேர்க்க வேண்டுமென்று உன்னைத் தேடிக்கொண்டு புறப்பட்டேன். அதற்குள் இங்கே ஏக அமர்க்களம். இதோ... என்று கூறி குங்குமச் சிமிழை அவளிடம் நீட்டினுள்.

அப்பொழுது சாந்தாவின் மனதில் ததும்பி வழிந்த நன்றியை எப்படி வடிப்பதென வார்த்தைக் கிடைக்காமல் திணறினுள்.

''செங்கமலம் தக்க சமயத்தில் என் மானத்தைக் காப்பாற்றினுய் இது மட்டும் உன் கையில் அகப்படாமல் வேறு யாரிடமாவது சிக்கியிருந்தால் இந்நேரம் என் கதி.... நினைத்துப் பார்க்கவே நெஞ்சம் நடுங்குகிறது. நான் உனக்கு என்றும் கடமைப்பட்டவள்...''

''பேசுவது அப்புற மிருக்கட்டும் சாந்தா... முதலில் தாலிச் செப்பை எடுத்துக் கொண்டு மணமேடைக்குப் போ...'' என்று உணர்ச்சி ததும்பக் கூறினுள். யாதொரு தடங்கலுமின்றி குறித்த நேரத்தில் முகூர்த்தம் நிறைவேறியது.

* * *

அந்த வருஷம் தலை தீபாவளி டாக்டர் சுகுணுகரனுக்கு மட்டுமல்ல செங்கமலத்திற்கும் தான். கருணுகரனின் மாப்பிள்ளைத் தோழனுக வந்திருந்த லக்ஷ்மணன் செங்கமலத்து கிராமத்து அழகில் மயங்கி அவளை மணந்து கொள்ள விரும்பினுன். கருணுகரன் விவாகம் முடிந்த அடுத்த முகூர்த்தத்தில் லக்ஷ்மணன் செங்கமலம் விவாகம் முடிந்தது.

இரண்டு வீட்டிலும் நடந்த தீபாவளி விருந்தில் எது உயர்வானது என்று கூற முடியாதபடி ஒன்றையொன்று போட்டியிடும் அளவில் குதூகலமாய் நடந்தேறியது.

பணம் உள்ளவனும் கஷ்டப்படுகிருன். பணம் இல்லாதவனும் கஷ்டப்படுகிருன்.... முட்டாள்தனமாகச் செலவு செய்துவிட்டுக் கஷ்டப்படுகிருன் முன்னவன். இஷ்டம்போல் செலவு செய்து கெட்டுப்போக முடியவில்லையே என்று கஷ்டப்படுகிருன் மற்றவன்.

—ஞானப்பிரகாசம்

இன்று முதல்!

சென்னை வெலிங்டன், கிருஷ்ணா, உமா

மற்றும் தென்னாடெங்கும்.

அசோகா பிக்சர்ஸ்,

18, லஸ் அவென்யூ மயிலாப்பூர், மதராஸ்-4.

குளிர்ச்சிக்கும் கூந்தல் வளர்ச்சிக்கும் சிறந்தது

பிரசிடெண்ட் வெஜிடபிள் ஹேர் ஆயில்

★

முகத்தின் பருக்களை அகற்றி அழகை அளிப்பது

பிரசிடெண்ட் ஸ்னோ

★

நறுமணத்துடன் கவர்ச்சியைத் தருவது

மலபார் பொக்கே டால்கம் பவுடர்

இலங்கை, பர்மா, மலேயாவுக்கு ஏஜன்ஸி தேவை

★

தயாரிப்பவர்கள் :

RATHOD TRADING CO. MADRAS. I.

நாட்டுக்கு வேண்டியது செல்வம்
வீட்டுக்கு வேண்டியது

செல்வம்
போட்டோ மிஸ்கி
பெருங்காயம்

தயாரிப்பாளர் : செல்வம் இண்டஸ்டிரியல்ஸ், சென்னை-21.

இரவல் பேனா

ஆர். எஸ். மணி

ர்மணி கை கடிகாரத்தைப் பார்த்தான். இரவு மணி எட்டரை. நல்லவேளை! மொபெயில் போஸ்டாபீஸ் கிளம்புவதற்கு இன்னும் ஐந்து நிமிஷங்கள் இருக்கின்றன! ரமணி காரை விட்டிறங்கி மொபெயில்போஸ்டாபீஸில் ஒரு கவரை வாங்கி தன் பையிலிருந்த கடிதத்தை அதனுள் திணித்து மேல் விலாசத்தை எழுதிய பிறகுதான் மன நிம்மதி அடைந்தான்.

“உங்கள் பேனாவைக் கொஞ்சம் கொடுக்க முடியுமா?” என்றது ஒரு பெண் குரல். ரமணி திரும்பிப்பார்த்தபோது ஒரு பெண் கையில் ஒரு கார்டுடன் நின்று கொண்டிருந்தாள். ரமணி அவளிடம் பேனாவைக் கொடுத்துவிட்டு கவரின் வாயை ஒட்டி மறுபுறம் இருந்த தபால் பெட்டியில் அதைப் போட்டுவிட்டு தன் காரில் ஏறிக்கொண்டு புறப்பட்டு விட்டான். ரமணி ஸ்பென்ஸர் கம்பெனியில் ஆபீஸர் உத்தியோகம் பார்த்து வந்தான். பூர்வீக சொத்து இருந்தது. அத்துடன் மாம்பலத்தில் அவனுக்குச் சொந்த வீடும் இருந்தது. சுமார் நாலு வருஷங்களுக்கு முன்புதான் அவனுடைய தந்தை காலமானார். ரமணிக்குப் பெண் கொடுக்க பலர் முன் வந்தார்கள், ஆனால் ரமணியோ ஐநூறு ரூபாய் சம்பளமாகும்வரை கலியாணம் செய்துக் கொள்ளப் போவதில்லை என்று பிடிவாதமாக இருந்தான், அவனுடைய தாயார் மீனாக்ஷி அம்மாள் பிள்ளைக்குக் கலியாணம் செய்து வைத்துவிட வேண்டுமென்று துடியாகத் துடித்துக் கொண்டிருந்தாள். கும்பகோணத்திலிருந்து வந்திருந்த கடிதத்திற்கு பதில் எழுதி வைத்துக்கொண்டு அதைத் தபாலில் போடும்படி மூன்று நாட்களாக சொல்லிக்கொண்டிருந்தாள் ரமணியின் தாயார். அன்று மாலை அவன் ஆபீசிலிருந்து வந்தவுடன் அதை அன்றே தபாலில் சேர்த்தாக வேண்டுமென்று ஒரே பிடிவாதமாக இருந்தாள். தன் தாயாரின் நச்சரிப்புத் தாங்காமல்தான் அத்தனை அவசரமாக மொபெயில்போஸ்டாபீஸிற்கு வந்திருந்தான் அவன். ஆகவே, ‘கடவுளே’ அந்தக் கடிதம் போய்ச்சேரக் கூடாது. அப்படிப் போய்ச் சேர்ந்தாலும் பதில் வரக்கூடாது’ என்று வேண்டிக் கொண்டான்.

ரமணி காரை உஸ்மான் ரோட்டின் பக்கம் திருப்பிய போதுதான் அவனுக்கு பேனாவை இரவல் கொடுத்தது நினைவிற்கு வந்தது. உடனே காரை மொபெயில்போஸ்டாபீஸ் நிற்கும் இடத்திற்கு ஓட்டிக் கொண்டு வந்தான். ஆனால் அங்கு தபால் வண்டியோ மனித நடமாட்டமோ இல்லை. ஒரே நிசப்தமாக இருந்தது.

ரமணி அந்த பார்க்கர் பேனாவை போன மாதம்தான் வாங்கினான். அது இப்படி அநியாயமாய்ப் பறி போய் விடுமென்று அவன் சற்றும் நினைக்கவில்லை. பேனாவை இரவல் வாங்கிய அந்தப் பெண்ணின் மீது அசாத்திய கோபம் வந்தது, அதே சமயத்தில் அந்தக் கடிதத்தை உடனே தபாலில் சேர்த்து விடும்படி நச்சரித்த தன் தாயாரின் மீது ஆத்திரம் வந்தது. “உன்னால் எனக்கு முப்பத்தி ஐந்து ரூபாய் நஷ்டம். அநியாயமாய்ப் பேனா போய்விட்டது” என்றான் வீட்டிற்குப் போனவுடன்.

அவன் வாயிலாக விஷயத்தை அறிந்த மீனுக்ஷி அம்மாள், "உனக்கு வர வர ஞாபகமறதி ரொம்ப அதிகமாகப் போய்விட்டது. இந்த வயதில் இப்படி இருக்கலாமோ? அதற்குத்தான் சீக்கிரம் கலியாணம் பண்ணிக்கொள் என்று சொல்கிறேன்" என்ருள் சமயத்தை நழுவ விடாமல்.

"பேனு போனல் போகிறது. தயவு செய்து கலியாணப்பேச்சை மட்டும் ஆரம்பிக்காதே" என்று கூறிவிட்டுப் படுக்கப் போய்விட்டான் ரமணி.

2

மறுநாள் காலை ஒன்பது மணி சுமாருக்கு காரைப் பனகல் பார்க் வழியாகச் செலுத்திக் கொண்டிருந்த ரமணி யதேச்சையாக பஸ் ஸ்டாண்டைப் பார்த்தான். அதோ நிற்கிருளே! அவள் யார்? நேற்று பேனுவை இரவல் வாங்கிக் கொண்டு போனுளே அவளே தான்! ரமணி காரை அவள் அருகில் கொண்டுபோய் நிறுத்தினுன்.

'சர்'ரென்று தன் முன்னுல் வந்து நிற்கும் காரைக் கண்டு திடுக்கிட்டுப் போனுள் வனஜா.

"ஓ! நீங்களா? நான் பயந்தே போய்விட்டேன். நான் வீட்டிற்குப் போன பிறகுதான் உங்களிடம் பேனுவை இரவல் வாங்கியது நினைவு வந்தது. ஆனுலும் உங்களுக்கு ஞாபகமறதி ரொம்ப அதிகம்" என்ருள்.

வனஜாவின் எழில் உருவத்தை அப்பொழுதுதான் நன்கு கவனித்தான் ரமணி. அதுவரை அவள் மீதிருந்த கோபம் சிட்டாய்ப் பறந்துவிட்டது! "எனக்குத்தான் ஞாபகமறதி அதிகம். நீயாவது அதைக் கொடுத்திருக்கக் கூடாதா?" என்ருன் அவன்.

"இந்தாருங்கள் உங்கள் பேனு! இனிமேலாவது ஜாக்கிரதையாக இருங்கள்" என்று கூறியவண்ணம் பேனுவை எடுக்க டம்பப் பையைத் திறந்தாள். "அடடே! மேஜையின்மீது எடுத்து வைத்தேன். கொண்டுவர மறந்துவிட்டேனே! நாளைக்குக் கண்டிப்பாகக் கொண்டு வருகிறேன்" என்ருள் அவள்.

ரமணி பொங்கிவந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு 'உன் ஞாபக மறதி வாழ்க!' என்று உள்ளூர எண்ணிக்கொண்டான்.

"நீ எங்கே போகவேண்டும்?"

"மௌண்டு ரோடிற்கு"

"சரி! காரில் ஏறிக்கொள். நானும் அங்குதான் போகிறேன். பத்து நிமிஷத்தில் போய்விடலாம்" என்று காரின் பின்புறக் கதவைத் திறந்தான். வனஜா காரில் ஏறிக்கொள்ள, கார் 'விர்' ரென்று புறப்பட்டது.

"நீ எங்கே வேலை செய்கிருய்?"

"பி. எம். ஜி. ஆபீஸில்"

"நான் ஸ்பென்ஸரில் இருக்கிறேன். உன்னைப் பார்த்ததில்லையே" அதற்கு அவள் பதில் சொல்லவில்லை. அவள் குறும்பாகச் சிரிப்பதை மட்டும் எதிரிலிருந்த கண்ணுடி மூலம் கவனித்தான் அவன்.

"நீ மாம்பலத்தில் எங்கே இருக்கிருய்?"

"ராஜா தெருவில்"

"உன் அப்பா அம்மா....?"

"எனக்கு அப்பா இல்லை. அம்மாவோடுதான் இருக்கிறேன்"

"உனக்கு அண்ணு தம்பி அக்கா தங்கை யாராவது..."

"நீங்கள் சிரமப்படவேண்டாம். எல்லாவற்றையும் நானே சொல்லிவிடுகிறேன். எனக்கு சகோதர சகோதரிகள் ஒருவரும் கிடையாது. நான் என் பெற்ருேர்களுக்கு ஒரே பெண். என் அப்பா தபாலாபீஸில் வேலையாக இருந்து இரண்டு வருஷங்களுக்கு முன்பு

தான் கால்மானர். நாங்கள் இருப்பது சொந்த வீடு. எனக்கு இன்னும் கலியாணமாகவில்லை'' என்று ஒரே மூச்சில் கூறி முடித்தாள். அவளுடைய பேச்சிலிருந்தும் பார்வையிலிருந்தும் அவளை ஒரு குறும்புக்கார பெண் என்று உணர்ந்த ரமணி அதைப்பற்றி தவருக எண்ணவில்லை.

ரமணி தன் ஆபீஸிற்கு எதிரில் காரை நிறுத்தினன். வனஜா தன் விழிகளினுல் அவனுக்கு நன்றி தெரிவித்துவிட்டு எதிர்புறத்திலிருந்த நடைபாதையை நோக்கி நடந்தாள். அதே சமயத்தில் ரமணியின் முன்னுல் தன் காரை நிறுத்தி அதிலிருந்து இறங்கிய நடராஜன் வனஜாவையே உற்று கவனித்தான். இருவரும் ஒரே ஆபீஸில் ஒரே அந்தஸ்தில் இருப்பவர்கள். ஆனல் நடராஜன் மூன்று குழந்தைகளுக்குத் தந்தை! ரமணியோ ஒரு பிரம்மச்சாரி! இதுதான் வித்தியாசம்.

''யார் அவள்?'' என்று சந்தேகத்தோடு ரமணியைப் பார்த்த வண்ணம் கேட்டான் நடராஜன்.

''பஸ்ஸிற்காக காத்திருந்தாள். போனல் போகிறதென்று காரில் அழைத்துக் கொண்டு வந்தேன்'' என்று பட்டும் படாதது போல் பதிலுரைத்தான்.

''அவள் மீது பரிதாபப்பட்டு அவளைக் காரில் அழைத்துக் கொண்டு வருவாய் பிறகு வீட்டிற்குக் கொண்டுபோய் விட ஆரம்பிப்பாய். இந்தப் பரிதாபம் அன்பாகி, அன்பு காதலாகி கடைசியில் கலியாணத்தில் கொண்டு வந்து விட்டு விடும். அப்புறம் அவள் பார்க்கிற்கு பீச்சிற்கு என்று காரை எடுத்துக் கொண்டு கிளம்பி விடுவாள். நீ பஸ்ஸில் தான் ஆபீஸிற்கு வரவேண்டி இருக்கும்'' என்று எச்சரித்தான்.

''அப்படி ஒன்றுமில்லை. என் வைராக்கியத்தைப் பற்றி உனக்கு ஒன்றும் தெரியாது'' என்று ரமணி பதில் கூறினனே தவிர உண்மையில் வனஜா அவன் உள்ளத்தில் சஞ்சலத்தை ஏற்படுத்தி தான் இருந்தாள்.

3

வனஜாவின் முதல் சந்திப்பிற்குப் பிறகு பிரதி தினமும் அவளைத் தன் காரில் அழைத்துச் செல்வது ரமணிக்கு வழக்கமாகிவிட்டது. வனஜா சரியாக ஒன்பது மணிக்கு காருக்காக காத்திருப்பாள். ரமணி இயந்திரம் போல் காரை அவள் அருகில் கொண்டுபோய் நிறுத்தி அவளை ஏற்றிக்கொண்டு புறப்படுவான். இது அவனுடைய தினசரி வேலைகளில் ஒன்ருகி விட்டது.

ஒரு வாரத்திற்குப் பிறகு ஒரு நாள் வனஜா, "நான் இன்று சாயந்திரம் சீக்கிரமாக வீட்டிற்குப் போக வேண்டும். இன்று மாலை என்னை வீட்டிற்குக் கொண்டுபோய்விட முடியுமா?" என்று கேட்டாள் அவள். ரமணி மிகுந்த மகிழ்ச்சியுடன் ஐந்து மணிக்குள் தன் வேலையை முடித்துக் கொண்டு அவளுக்காக காத்திருந்தான். சுமார் கால்மணி நேரத்திற்குள் வனஜாவை அவளுடைய வீட்டு வாசலில் கொண்டு போய் இறக்கினான் ரமணி.

"என்ன புறப்பட்டு விட்டீர்களே? உள்ளே வந்துவிட்டுத்தான் போகவேண்டும்" என்று பலவந்தம் செய்தாள் வனஜா. அவளுடைய வேண்டுகோளைத் தவிர்க்க முடியாமல் வீட்டினுள் சென்று ஹாலில்போடப்பட்டிருந்த பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான்.

வனஜா மானைப் போல் துள்ளி உள்ளே சென்று தன் தாயாரை அழைத்துக்கொண்டு வந்தாள். "அன்றைக்கு ஒருவர் பேனா இரவல் கொடுத்தார் என்று சொன்னேனே இவர்தான் அம்மா" என்றாள் அவள்.

"ஓகோ! நீதானப்பா அது? நீ எங்கே இருக்கிறாய்? எங்கே உத்தியோகம் பார்க்கிறாய்? உனக்கு என்ன சம்பளம்? கலியாணமாகி விட்டதா?" என்று ரொம்ப நாள் பழக்கபட்டவள் போல மட மட வென்று கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனாள், ரமணி சுருக்கமாகவும் நாஸுக்காகவும் அவைகளுக்குப் பதில் சொன்னான்.

அச்சமயம் மாடிப் படிக்கட்டுகளிலிருந்து யாரோ இறங்கி வருவது போல்தோன்றவே ரமணி தலையை நிமிர்ந்துப் பார்த்தான். தும்பைப் பூவைப் போன்று வெள்ளை வெளேரென்று உடை அணிந்து கொண்டு மாடியிலிருந்து இறங்கி வந்துக் கொண்டிருந்தான் ஒரு வாலிபன்.

"வா சுந்தரம்! உன்னைதான் கூப்பிட வேண்டுமென்று இருந்தேன். நீயே வந்துவிட்டாய். வனஜா கூட ஆபீஸிலிருந்து வந்து விட்டாள், கடைத் தெருவிற்குப் போய் இருட்டுவதற்கு முன்பு வந்து விடலாம்" என்று கூறினாள் வனஜாவின் தாயார். அது வரை புன்னகை தவழ அங்கு நின்று கொண்டிருந்த வனஜா சட்டென்று உள்ளே சென்று விட்டாள்.

"இவன் என் நாத்தனார் பிள்ளை வனஜாவின் கலியாண விஷயமாய் வந்திருக்கிறான். இவனுக்குக் கடிதம் எழுதத்தான் வனஜா அன்று உன்னிடம் பேனா இரவல் வாங்கினாள். நல்ல வேளையில் அவள் கழுத்தில் மூன்று முடிச்சு விழுந்து விட்டால் அப்புறம் எனக்குக் கவலை இல்லை" என்றாள் அவள்.

ரமணியின் உள்ளத்திலிருந்த உற்சாகம் திடீரென்று மறைந்தது. வனஜாவுக்கும் தனக்கும் இருந்த தொடர்பு அறுந்துவிட்டது போல் தோன்றியது. அதற்கு மேல் அங்கு இருக்க அவனுக்குப் பிடிக்க வில்லை. சுந்தரம் ரமணியின் பக்கத்தில் அமர்ந்து அவனைப்பற்றியும் அவனுடைய குடும்பத்தைப் பற்றியும் ஏதேதோ கேள்விகள் கேட்டுக்கொண்டே இருந்தான். அவைகளுக்கெல்லாம் உணர்ச்சியின்றி பதில் கூறிவிட்டு விரைவில் அங்கிருந்து புறப்பட்டுவிட்டான்.

மறுபடியும் வனஜாவைப் பார்க்க அவன் விரும்பவில்லை. வேறு வழியாக ஆபீசிற்குச் சென்று கொண்டிருந்தான். ஆயினும் ஒருவித வேதனையும் கவலையும் அவனுடைய உள்ளத்தை அறித்துக்கொண்டே இருந்தது.

4

இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் மாலை ரமணி ஆபீசிலிருந்து வந்தவுடன் கலியாணப் பேச்சை ஆரம்பித்துவிட்டாள் மீனாக்ஷி அம்மாள்.

"மறுபடியும் பழைய பல்லவியை ஆரம்பித்துவிட்டாயா?

இப்பொழுது கலியாணம் செய்துக்கொள்ளும் யோசனை இல்லை. அந்த எண்ணம் ஏற்பட்டால் எனக்குப் பிடித்த பெண்ணைப் பார்த்து நானே உன்னிடம் அழைத்து வருவேன்."

"அதுசரி! இந்தப் பெண்ணை உனக்குப்பிடித்திருக்கிறதாபார்" என்று ஒரு போட்டோவை அவனிடம் நீட்டினாள் அவள். அதில் புன்னகை புரிந்தவாறு நிற்கும் வனஜாவைக் கண்டு திகைத்தான் ரமணி.

"நேற்று இந்தப் பெண்ணின் தாயார் இங்கு வந்திருந்தாள். வனஜாவின் கலியாணத்தை முடித்துவிட்டுப் போக அவளுடைய நாத்தனார் பிள்ளை பணத்துடன் வந்து காத்துக் கொண்டு இருக்கிறானும். அவனுக்குக் கலியாணமாகி இரண்டு குழந்தைகள் இருக்கின்றனவாம். மற்றபடி எல்லா விஷயங்களையும் பேசி முடித்து விட்டோம். நீ சரி என்றால் முகூர்த்தம் வைக்க வேண்டியது தான்" என்றாள்.

ரமணி சற்றும் தயங்காமல் தன் சம்மதத்தை தெரிவித்துவிட்டான். இந்த சந்தோஷ செய்தியை சம்மந்தி வீட்டில் ஒலிபரப்ப உடனே புறப்பட்டுவிட்டாள் மீனாக்ஷி அம்மாள். மறுநாள் ஆபீசிற்குச் செல்லும்போது பனகல் பார்க் பஸ் ஸ்டாண்டு வழியாகக் காரை ஓட்டிக் கொண்டு வந்தான் ரமணி. வனஜா வழக்கம் போல் பஸ்ஸிற்காகக் காத்திருந்தாள். ரமணி காரை அவள் அருகில் கொண்டு போய் நிறுத்தினான்.

"ஆபீஸிற்கு நாழியாகிவிட்டது வண்டியில்ஏறிக்கொள். இனிமேல் நீ பஸ்ஸில் போகவேண்டாம்" என்றான் அவன்.

ரமணியைக் கண்டவுடன் அவள் முகம் சிவந்தது. வெட்கத்தினால் தலை குனிந்தது.

"நான் பஸ்ஸிலேயே வருகிறேன். நீங்கள் போகலாம்" என்று கூறிவிட்டு பின்னால் வந்த பஸ்ஸில் ஏறிக் கொண்டாள்.

அவளிடம் ஏன் இத்தனை மாறுதல்? அவளுடைய விஷமப் பார்வையும் குறும்புப் பேச்சும் எங்கே போய் விட்டன? அவள் தானா? அல்லது வேறு யாராவதா என்ற சந்தேகமும் ஏற்பட்டு விட்டது. ஏமாற்றமடைந்த ரமணி உற்சாகமின்றியே ஆபீசை அடைந்தான். மறுநாள் காலை ஒன்பது மணிக்கு பஸ் ஸ்டாண்டில் நின்றுகொண்டிருந்தான் ரமணி. அங்கு வந்த வனஜா ரமணியைக் கண்டு ஆச்சர்யமடைந்து போனாள்.

"நீங்கள் எங்கே போகிறீர்கள்?"

"ஆபீசிற்குத்தான்"

"கார் கெட்டுப் போய்விட்டதா?"

"இல்லை! நன்றாய்தான் இருக்கிறது"

"பின் எதற்காக பஸ்ஸில் போகிறீர்கள்?"

"நீ தான் என்னோடு காரில்வர மறுத்து விட்டாய். நானாவது உன்னுடன் பஸ்ஸில் வரலாமல்லவா? அதனால்தான்" என்றான்.

வனஜா தன்னையும் மீறி சிரித்துவிட்டாள்.

"அது சரி! உங்கள் பேனா எங்கே? ஜேபியில் காணோமே?" என்றாள் அவள்.

"அடாடா! நேற்று ஒருவருக்கு இரவல் கொடுத்தேன். திருப்பி வாங்க மறந்துவிட்டேன்" என்றான் அவன்.

"அதை எந்தப் பெண்ணிடமும் கொடுத்து விடவில்லையே?" என்று கேட்டாள் அவள். ரமணி 'களுக்' கென்று சிரித்தான். வனஜாவும் அவனுடன் சேர்ந்து சிரித்தாள். அப்பொழுது 'விர்'ரென்று அவர்களின் முன்னால் வந்து நின்ற பஸ் அவர்களின் ஆனந்தச் சிரிப்பிற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தது.

Phone: 2200
UMA UP PRINTERS
TRADE MARK
PRINTERS &
CARD BOARD BOX MAKERS
Specialists in
CARTONS & CARDBOARD BOXES
4/32, THATHAMUTHIAPPAN ST, MADRAS-1.
எல்லாரக அட்டைப்பெட்டிகள் தயாரிப்பதில் சிறந்தது
உமா பிரிண்டர்ஸ்
போன்: 2200
4/32, தாதாமுத்தியப்பன் தெரு, மதராஸ்-1.

அதிசயத் திருமணம்

திருமலைசாமிக்கும் கனகசுந்தரிக்கும் திருமணம் நிச்சயமான செய்தி ஊரையே வியப்பில் ஆழ்த்திவிட்டது.

"திருமலைசாமி விஷயம் ஒரு வழியா தீர்ந்து போச்சு போலிருக்கே......" என்று பொறுமினான் ஒரு நித்திய பிரம்மச்சாரி.

"பைத்தியக்காரனை கலியாணம் பண்ணிக்க உலகத்திலே ஒரு பைத்தியக்காரியும் இருக்கத்தான் இருக்கிறாள்...." என்றார் ஒரு விவகாரப் பேர்வழி.

"பைத்தியமாக இருந்தால் என்ன! பணம் இருக்கிறதப்பா பணம்...." என்று கண் சிமிட்டினார் ஒரு அனுபவசாலி.

"துடைப்பக் கட்டைக்கு பட்டுக் குஞ்சம்மாதிரி ராஜாமாதிரி இருக்கற பையனுக்கு இந்த கரிக்கட்டை கிடைச்சுதே...." என்று ஒரு பாட்டி நீட்டி முழக்கினாள்.

"கனக சுந்தரிக்கு இப்படி திடீர்னு ஒரு சான்ஸ் அடிக்கும்னு அவ அப்பன் கனவுகூட கண்டிருக்க மாட்டான். சகடயோகம் என் பார்களே அது இது தான் போலிருக்கு...."

"என்னப்பா, கட்டினவனுக்கு ஒரு பெண்டாட்டி, கட்டாதவனுக்குப் பல பெண்டாட்டி என்ற கொள்கையுள்ளவனாச்சே திருமலைசாமி, அவன் எப்படியப்பா கடைசியில் கலியாணம் செஞ்சு கொண்டான்?"

"என்னமோ அந்த லூஸ், இனியும் உருப்படியா வாழ்க்கை நடத்தும்னு எனக்கு நம்பிக்கையே இல்லை. எவளாவது புதுசு ஒருத்தி பல்லைக் காட்டுகிற வரைக்கும் தான் இந்த வாழ்வு......."

இப்படியாக திருமலைசாமியின் விஷயம் ரகளைப்படுவதற்குக் காரணங்கள் இருக்கத்தான் செய்தன.

கருணைவேல் முதலியார் ஊரில் லட்சாதிபதி. மலாயாவில் யுத்த காலத்தில் பெருஞ் செல்வங்களை அள்ளிக்கொண்டு இந்தியாவுக்கு ஓடிவந்த சந்தர்ப்ப வாதிகளில் அவரும் ஒருவர். மலாயாவில் அவர் செய்துவந்த மட்ட ரகமான பிஸினஸ்களைப் பற்றி சகத் தோழர்கள் கதை கதையாகச் சொன்னாலும் 'லட்சாதிபதி' என்ற பட்டத்திற்கு முன் அவை எடுபடவில்லை.

அவருடைய ஏக புத்திரன்தான் திருமலைசாமி. கருணைவேல் முதலியார் மலாயாவில் பிஸினஸ் செய்து கொண்டிருந்த காலத்தில் திருமலைசாமி இந்தியாவில் பிறந்தவன். திருமலைசாமி அப்பன் முகத்தைப் பெற்றிராமல் எதிர் வீட்டு ஏகாம்பர முதலியாரின் ஜாடையாக இருப்பது பற்றி ஊரார் என்னென்னவோ பேசிக் கொண்டார்கள். இந்தச் செய்தி கருணைவேல் முதலியாரின் காதில் விழத்தான் செய்தது. "காலையில் எழுந்தவுடன் அடிக்கடி எந்தப் பொருளின் மீது கர்ப்பவதி விழிக்க நேரிடுகிறதோ குழந்தையும் அந்த தோற்றத்துடன் தான் பிறக்கும்" என்று ஏதோ ஒரு இல்லற சாஸ்திரத்தில் வெளியான கட்டுரை ஒன்றைப் படித்துவிட்டு முதலியார் மலாயாவில் தம் மனதைத் தேற்றிக் கொண்டார். எது எப்படியாயினும், லட்சாதிபதியின் மகன் என்ற பெயர் திருமலைசாமியின் உற்பத்தி ரகசியத்தை மறைத்துவிட்டது.

ரசம்

கருணைவேல் முதலியார் மலாயாவிலிருந்து பணம் அனுப்பிக் கொண்

டேயிருக்க திருமலைசாமி ஏராளமாகச் செலவு செய்துகொண்டே நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமாக உப்பிக் கொண்டிருந்தான்.

முதல் பாரத்துடன் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டுச் சலவை கலையாத உடைகளுடன் வாயிலே சிகரெட் மின்ன திருமலைசாமி ஊரெங்கும் பவனி வர ஆரம்பித்தான். தாராளமாக கையில் பணம் புரள்வது தெரிந்ததும் உயிர்த் தோழர்கள் அதிகமாக ஆரம்பித்தனர். பணம் செலவழிக்கும் பண்பை திருமலைசாமிக்குக் கற்றுத் தந்தனர். அத்துடன் 'காதல்' போதனைகளும் புரிந்தனர். "அழகான பெண் யாராவது கண்ணில் பட்டால் கவலைப் படாமல் அவளைக் கைப் பிடிக்க முயல்வது தான் காதல்" என்று நண்பர்கள் புது வியாக்கியானம் செய்தார்கள். காதலைப் பற்றிச் சொல்ல வேறு யாரும் இல்லாததால் நண்பர்களது வாக்கியத்தையே பசுமரத்தில் அடிக்கப் பட்ட ஆணியாக மனதில் பதிய வைத்துக் கொண்டான் திருமலைசாமி. சில நெருங்கிய நண்பர்கள், திருமலைசாமிக்கு பண அர்ச்சனை மூலம் மாடத்தெரு மோகினிகளைத் தரிசனம் செய்வித்து வைத்தனர். அதன் பயனாகத் திருமலை சாமிக்குப் பெண் பித்தும் மயக்கமும் தலைக்கேறியது. பெரும் பசி கொண்ட புலி ஆட்டு மந்தையின் நடுவேதானே புகுந்து திரியும்? வர்ணப் புடவைகள் தென்படும் இடங்களிலெல்லாம் திருமலைசாமியின் சலவைக் காலர் தென்பட ஆரம்பித்தது.

இந்த சமயத்தில் தான் கருணைவேல் முதலியார் லட்சாதிபதியாக இந்தியா திரும்பினார். மகனின் அவதார விஷயமாக ஏற்கனவே மனம் சங்கடப்பட்டுக் கிடக்கும் முதலியார் அவனது திருவிளையாடலைக் கண்டு மேலும் மனம் புண்பட்டார். தகுந்த ஆட்களைக் கொண்டு திருமலைசாமியின் நண்பர்களை பயமுறுத்தி அவர்களது காலை ஒடித்துவிடுவதாக விரட்டியதின் மூலம் மகனை சீர்திருத்துவதற்கான முதல் வேலையை ஆரம்பித்து வைத்தார்.

நண்பர்களால் பற்ற வைக்கப் பட்ட வாலிபத் தீ அவனை வாட்டி வதக்கி எடுத்தது. கிட்டத்தட்ட ஒரு பைத்தியம் போல உலாவ ஆரம்பித்தான். அவனால் ஊரில் பேய்கள் நடமாட்டம் ஜாஸ்தியாகிவிட்டது என்று பேசலானார்கள். அதன் பலனாக அந்த ஊரில் சில வினோதமான நிகழ்ச்சிகள் நிகழ ஆரம்பித்தன.

திருமலைசாமியின் வீட்டுக்கு எதிர் வீட்டு திண்ணையில் வழக்கமாக படுத்திருக்கும் ஒரு கிழவி ஒரு நாள் இரவில் "ஐய்யோ.... பிசாசு..." என்று உளறியடித்துக் கொண்டு சத்தம் போட்டாள். அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் ஓடிவந்து விசா

ரித்த போது பிரம்மாண்டமான பிசாசு வந்து தன்னருகில் நின்று தன்னை உற்றுப் பார்த்து விட்டுப் போனதாகக் கிழவி கூறினாள்.

ஒரு இரவு அம்மன் கோயில் வாசற்படியில் சுருட்டி மடக்கிப் படுத்துக் கொண்டிருந்த ஒரு காஷாய சாமியார் போர்த்திக் கொண்டிருந்த காவிப் போர்வை தானே வானத்தில் உயரப்போவதைக் கண்டு ''பேய் பேய்'' என்று திடுக்கிட்டு எழுந்து பார்த்தார். ஒரு நெட்டையான உருவம் வெகு வேகமாக அப்பால் போவது தெரிந்தது உற்றுக் கவனித்தார். என்னவென்று புரியவும் செய்தது. இதையெல்லாம் வெளியில் பிரஸ்தாபித்துக் கொண்டிருந்தால் தனக்குக் கிடைக்கும் அரை வயிற்றுக் கஞ்சிக்கும் ஆபத்து ஏற்பட்டு விடுமென எண்ணி சாது மௌனமானார்.

ஆற்றோரத்திலும்; குளத்தங்கரையிலும் கொல்லையிலும்,



இருட்டில் சுள்ளி பொறுக்கும் காட்டிலும் கிராமியப் பெண்கள் ''பைத்தியம்; பேய்!'' என்று விழுந்தடித்து ஓடினார்கள்.

இப்படியாகத் திருமலைசாமியின் திருவிளையாடல்கள் புதுப்புது அவதாரங்களை எடுக்க ஆரம்பித்தது. அதன் பயனாக அவன் புகழ் ஊரெங்கும் பரவியது. திருமலைசாமி தெருவில் நடந்து வருகிறான் என்றால் அவனை ஒரு அதிசயப் பிறவியாகக் கருதி எல்லோரும் பார்க்க ஆரம்பித்தனர். ஊரிலுள்ள பெரிய மனுஷியான பெண்களுக்கும், ஆகக்கூடிய பக்குவத்திலுள்ள பெண்களுக்கும் பலமான காவல்கள் போடப்பட்டன. வயதான ஸ்திரீகள்கூட கொஞ்சம் எச்சரிக்கையாக நடக்க ஆரம்பித்தனர். தெருத் திண்ணைகளில் படுக்கும் ஆண்கள்கூட வர்ணப் போர்வைகளை ஒழித்து வெண்மை நிறப் போர்வைகளை உபயோகிக்க ஆரம்பித்தனர்.

அபாய அறிவிப்பு சங்கொலி கேட்ட ஜனங்கள் போல மக்கள் திருமலைசாமிக்கு எதிராக தற்காப்பு முன்னணிகளைப் பலப்படுத்திக் கொண்டதால் திருமலைசாமியால் ரதிகளைக் கண்ணால் கூடக் காண முடியாமல் போய்விட்டது.

இந்த சூழ்நிலையில் மிகவும் வேகமடைந்த திருமலைசாமி தன் ஆத்திரத்தைப் பெற்றோர் பக்கம் காட்ட முனைந்தான். ''உடனடியாக தனக்குத் திருமணம் செய்து வைக்காவிட்டால்....?'' என்று பயமுறுத்த ஆரம்பித்தான்.

இனியும் அவனுக்கு திருமணம் செய்விக்காமல் விட்டுவைப்பது ஊருக்கு மட்டுமன்றி தனக்கும் ஆபத்து என்பதை உணர்ந்த முதலியார் திருமண முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டார்.

அவர் எதிர்பார்த்த மாதிரி திருமலைசாமியின் மண விஷயம் அவ்வளவு சுலபமானதாக இல்லை. திருமலைசாமி ஒரு பைத்தியம் என்ற விஷயம் மூலை முடுக்குகளிலெல்லாம் பிரசித்தமாக இருந்ததால் கண்ணை மூடிக் கொண்டு கிணற்றில் விழப் பெண்ணை பெற்றவர்கள் தயாரில் இல்லை. துணிந்து மாப்பிள்ளையைப் பார்க்க வந்த ஒரு சிலர் மாப்பிள்ளையின் திருவிளையாடலுக்கே ஆளாக நேர்ந்து இரவோடு இரவாக ஓடிவிட்டனர். ஆகையால் திட்டவட்டமாக முதலியார் வகுப்பைச் சேர்ந்த யாரும் கருணைவேல் முதலியார் வீட்டுக்குப் பெண் கொடுக்க முடியாது என்ற தீர்மானத்துக்கு வந்துவிட்டனர்.

கருணைவேல் முதலியாரின் நிலைமை தர்ம சங்கடமாகிவிட்டது. பணத்தின் பலத்தைக் கொண்டு இனி ஒன்றும் நடக்காது என்று தீர்மானமாகத் தெரிந்ததும் அசந்து போய்விட்டார்.

திருமலைசாமியின் மோக நிலை உச்சியை அடைந்து விட்டது. சம்பந்தா சம்பந்தமின்றி பேசுவதுடன் கண்டவரை அடிக்கவும் துரத்தவும் முற்பட்டு தான் ஒரு பைத்தியமே என்ற விஷயத்தை சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபித்துவிட்டான். அதன் பயனாக சென்னை பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலும் சில மாதங்கள் வாசம் செய்யும் வாய்ப்பு திருமலைசாமிக்கு ஏற்பட்டது.

இந்த சமயத்தில் தான் கனக சுந்தரியின் மூளை வேலை செய்ய ஆரம்பித்தது.

கனகசுந்தரி, முதலியார் வகுப்பைச் தேர்ந்த ஒரு அன்றாடங் காய்ச்சியின் மகள். பருவமடைந்து வீட்டிலிருந்தாள். தாய் கிடையாது. தந்தை சுப்பையா முதலியார் மசால் வடை வியாபாரம் செய்துவரும் ஊதியத்தைக் கொண்டு வயிறு வளர்த்து வந்தார்.

கனகசுந்தரி அழகியல்ல என்பதுடன் நல்ல கருப்பு நிறம். கருப்பானாலும் களையும் கிடையாது. அவள் தாயின் விஷயமும் கொஞ்சம் தகராறு நிரம்பியது

என்று ஊரார் கருதியதினுல் ஒரு ஏழை முதலியார் கூட அந்தப் பெண்ணை எடுக்க அருவைப்பட்டார். அதனுல் அவள் நித்ய கன்னியாக வேண்டியிருந்தது.

கனகசுந்தரியின் குடிசை அவ்வூரின் பெரிய குளத்தின் கரையில் படித்துறை ஓரம் இருந்தது. பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பிய பிறகு ஒரு நாள் மத்தியானம் திருமலைசாமி படித்துறையில் இறங்கிக் குளித்துக் கொண்டிருந்தபோது கனகசுந்தரி எதிர்பாராதவிதமாய்க் கவனித்தாள். உடனே மூளையும் தீவிரமாக வேலை செய்ய ஆரம்பித்தது. மங்கிமடிந்த தன் வாழ்வுக்கு உயிர் ஊட்டும் உன்னத வழி யொன்று திடீரென அவளுக்கு உதயமாயிற்று. அப்பொழுது சுப்பையா முதலியாரும் வீட்டில் இல்லை.

கனகசுந்தரி தன்னிடமிருந்த சிறு முகம் பார்க்கும் கண்ணுடியின் உதவியால் முகத்தை கொஞ்சம் அழகுபடுத்திக் கொண்டு. கட்டியிருந்த உடையை ஒழுங்குபடுத்திக்கொண்டு வேகமாக வெளியே வந்தாள்.

திருமலைசாமி அவளைக் கவனித்து விட்டான். பசி நேரத்தில் பரமானந்தம் கிடைக்கப் பெற்றவன்போல வெறித்து கனகசுந்தரியைப் பார்த்தான். உடனே அவள் அவனைப் பார்த்துச் சிரித்துவிட்டு உள்ளே ஓடிவிட்டாள். அவ்வளவு தான்! கனகசுந்தரியின் சூழ்ச்சி பலித்துவிட்டது! குளித்துவிட்டுக் கரை ஏறும்வரை திருமலைசாமி குடிசை மீது வைத்த கண் வாங்கவில்லை. அப்புறம் திருமலைசாமியின் கால்கள் கனகசுந்தரியின் குடிசைபக்கம் திரிய ஆரம்பித்தது.

இப்படிப் பல நாட்கள் காட்சி கொடுப்பதோடு நின்று, திருமலைசாமியின் மனம் முழுவதையும் தன்னிடம் ஈடுபடுத்திக் கொண்டாள் கனகசுந்தரி.

ஒரு நாள் மத்தியானம் வழக்கம் போல் குளிப்பதற்கு வந்த திருமலைசாமி அக்கம்பக்கம் பார்த்துக் கொண்டு மெதுவாக குடிசை வாசலை அடைந்து ''யார் உள்ளே?'' என்ருன்.

இதை எதிர்பார்த்திருந்த கனகசுந்தரி தைரியமாக முன்னுல் வந்து ''என்ன வேண்டும்?'' என்று கேட்டாள்.

''சிகரெட் பற்றவைக்க கொஞ்சம் நெருப்பு வேண்டும்......'' என்ருன் திருமலைசாமி.

கனக சுந்தரி உள்ளே சென்று தீப்பெட்டியை எடுத்து வந்து ''இதோ'' என்று நீட்டினுள். திருமலைசாமி கையை நீட்டி வாங்கும்பொழுது கனகசுந்தரி வேண்டுமென்றே அவன் கையைத் தொட்டுக்கொண்டு கொடுத்தாள். அவனுடைய தக்காளிப்பழம்போன்ற மூக்கைத் தொடாத குறைதான். திருமலைசாமிக்கு தேவலோகம் கண்முன்னுலேயே வந்து விட்டது மாதிரி இருந்தது.

இப்படியாக பல நாட்கள் அரை குறைப் பேச்சுக்களுடன் ஓடின. கிட்டதட்ட திருமலைசாமி கனகசுந்தரி விரித்த வலையில் நன்ருக விழுந்துவிட்டான். கனகசுந்தரியும் அவன் மனதை சன்னமாகக் கரைத்துக் கொண்டே வந்து அவனை தன் அழகுக்கு அடிமையாக்கிவிட்டாள்.

ஒருநாள் இரவில் கனகசுந்தரி படித்துறையில் குளித்துக் கொண்டிருந்தாள். பூனைபோல வந்த திருமலைசாமி மெதுவாக கனகசுந்தரியிருந்த படிக்கட்டிற்கு இறங்கி ''கனக....'' என்று அவள், கையைப் பற்றப் போனுன்.

கனகசுந்தரி ஆத்திரப்பட்டவள் போலப் பின்னடைந்து, ''என்ன இது....'' என்று மெதுவான குரலில் கேட்டாள்,

''இனி என்னுல் தாளமுடியாது கனகு....'' திருமலைசாமி பரிதாபமாக கெஞ்சினுன்.

''என்னை என்ன திருவொற்றியூர்த் தேரோடும் வீதிச் சதுர்க்காரி என்று நினைத்துக் கொண்டீர்களோ...'' என்று சற்று கடுமையான குரலில் கேட்டாள் கனகசுந்தரி.

நீரிழிவு

ஏழு நாட்களில் குணமாகும்

சிறு நீரில் அதிக சர்க்கரை இருப்பின் நீரிழிவு (DIABETES) என்று சொல்லப்படும் இப் பயங்கர வியாதியுள்ள நோயாளி நாளுக்கு நாள் தன் முடிவு நெருங்குவதைக் காண்கிறான். இதை நிவர்த்திக்க டாக்டர்கள் இன்ஸுலின் இன்ஜக்ஷன் ஒன்றைத்தான் கண்டு பிடித்தார்கள். இதைக் குத்திக் கொள்வதால் பூரண குணம் ஏற்படுவதில்லை; இன்ஜக்ஷன் மருந்து உள்ள வரை சர்க்கரை தற்காலிகமாக மறைந்து விடுகிறது.

அபரிமிதமான தாகம், பசி, அடிக்கடி சிறு நீர் சர்க்கரையுடன் போதல், எரிச்சல் ஆகியவைகள் இந்த வியாதியின் முக்கிய அறிகுறிகள். வியாதி முற்ற ராஜப் பிளவை கட்டிகள் சாலேஸ்வரம் இதர கொடிய வியாதிகள் ஏற்படும். வீனஸ் சார்ம் நவீன விஞ்ஞான அதிசயமாகும். அதை உபயோகித்ததால் பலர் மரணத்தினின்று தப்பியுள்ளனர்,

வீனஸ் சார்ம் உபயோகித்த 2-வது அல்லது 3-வது நாளில் சிறு நீரில் சர்க்கரை குறைந்து அடிக்கடி போகும் சிறு நீரும் குறைகிறது. 3-வது அல்லது 4-வது நாளில் வியாதி பாதிக்குமேல் குணமடையும். இந்த மருந்துக்கு பத்தியம் கிடையாது; இன்ஜக்ஷன் கிடையாது. நன்கு விளக்கும் **இலவச ஆங்கில புத்தகத்திற்கு எழுதிக் கேளுங்கள்.**

50 வில்லைகள் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 6-12-0

[பாக்கிங் தபாற் செலவும் இனம்]

வீனஸ் ரிஸர்ச் லாபரட்டரி (U. M.)

தபால் பெட்டி நெ. 587, கல்கத்தா

"அப்படி சொல்லக் கூடாது கனகு. உனக்காக உயிரைக்கூட விடத் தயார்!" என்று குசு குசு வெனக் கூறினான் திருமலை.

"உயிரை விட வேண்டாம். அதனால் எனக்குக் காலணுவுக்குக் கூட பிரயோசனமில்லை. இன்றிரவே உங்கள் தந்தையிடம் என்னை கலியாணம் செய்து கொள்ளப் போவதாக தீர்மானமாகக் கூறிவிடுங்கள், யார் எதைச் சொன்னாலும் கேட்காமல் ஒரு வாரத்திற்குள் நமக்கு கலியாணம் நடக்க வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொள்ளுங்கள். என்னை கலியாணம் செய்து கொண்டதற்கு அப்புறந்தான் மேலே கையை வைக்கலாம். நாளானால் எனக்கு வேறு இடத்தில் கலியாணமாகி விடும்.......!" என்றாள் கனகசுந்தரி ரகசியக் குரலில்.

"ஓ....எஸ்...பார், என் சாமர்த்தியத்தை!" உற்சாகத்துடன் கூறி விட்டு திருமலைசாமி அகன்றான். கனகசுந்தரி குதூகலத்துடன் நீரில் ஒரு குதி போட்டாள்.

திருமலைசாமி சொன்னபடியே செய்து முடித்தான். கனகசுந்தரியை திருமணம் செய்யத் தவறினால் தூக்குப் போட்டுக் கொண்டு உயிரை விட்டு விடுவதாக பயமுறுத்தினான்.

வேறுவழியின்றி லட்சாதிபதியான கருணைவேலு முதலியார் அன்னக்காவடி சுப்பையா முதலியாரின் மகளை மருமகளாக ஏற்றுக் கொள்ளத் துணிந்தார்.

கட்டழகனை திருமலைசாமி கருப்பழகியான கனகசுந்தரிக்கு மாலையிடுவது நிச்சயமாயிற்று.

கதாசிரியர்கள் கற்பனையில்கூட சிக்காத இந்த விநோதத் திருமணத்தைப் பற்றி ஊர்வாசிகள் கனவு கூடக் கண்டிருக்க மாட்டார்கள்.

அதனால் திருமலைசாமியின் காதல் மனம்பற்றி ஊரே ரகளைப் பட்டதில் வியப்பென்ன?

சித்தன்ன வாசல்

வித்யாரத்னம் டி. எஸ். ஜானகி

இந்திய நாட்டுச் சரித்திரத்தில் ஏழாம் நூற்றுண்டு மிகவும் சிறப்பானது. சிறந்த கலைஞரும் முன்னேற்ற ஆர்வம் நிறைந்தோருமான மன்னர் இந் நாட்டில் பல இடங்களிலும் அரசு புரிந்தார்கள்.

தமிழ்நாடு அக் காலத்தில் பல்லவ மன்னருக்கு உட்பட்டிருந்தது. மகேந்திரவர்மன் என்ற பல்லவ சக்கரவர்த்தி காஞ்சிபுரத்தைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி புரிந்தான். இவன் ஒப்பற்ற போர் வீரன் மாத்திரமல்ல; சிறந்த கவிஞன்; சங்கீதத்தில் கரைகண்டவன், அறிய சிற்பி, நல்ல ஓவியன்.

அக்காலத்திலே கல்லும் மண்ணும் சுண்ணும்பும் கொண்டே வீடுகளும் அரண்மனைகளும் கட்டப்பட்டிருக்கும். கோயில்களும் இப்படித்தான். காலக்கிரமத்தில் கோயில்கள் கிலமாவதுமுண்டு. பரம்பொருள் குடிகொண்டுள்ள வீடாகிய கோயிலை என்றும் அழியாதபடி நிலைத்திருக்குமாறு எப்படிச் செய்யலாம் என்று மகேந்திரவர்மன் நெடுநாளாகச் சிந்தனை செய்து வந்தான். அரசனுடைய சிற்பசாஸ்திரி இதற்கு ஏற்ற யோசனையைக் கூறினுன். அழியாப் பொருளான இறைவனுக்கு அழியாத வீட்டைக் கட்டுவோம் என்று அவன் அரசனுக்கு உறுதி கூறியதைக் கேட்ட முதிய சிற்பிகள் பலர் நம்பவில்லை. சிலர் அஞ்சினர், சிலர் அதைக் கோபித்தனர். 'முன்னேர் கட்ட இயலாத புதுக் கோயில்களை இவ்விளஞ் சிற்பியா கட்டப் போகிருன்? இதெல்லாம் வெறும் பகற் கனவு' என்று பரிகசித்தார்கள். அரசனுடைய போக்கைக் கண்டு அவனை விசித்திர சித்தன் என்றும் சொன்னுர்கள்.

உண்மையில் அரசன் 'விசித்திர சித்தன்'தான். இளைஞுன சிற்பியின் துணை கொண்டு தான் எண்ணின காரியத்தை நிறைவேற்றிஞன். தென் ஆற்காடு ஜில்லாவிலுள்ள மண்டகப்பட்டு என்ற ஊரில் முதன் முதலாக ஒரு சிறு குன்றைக் குடைந்து அதைக் குகைக்கோயிலாக அமைத்தான். இது அழகாக அமைந்ததைக் கண்ட பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் அளவிலா மகிழ்ச்சி கொண்டான். பிறகு அவ்விளஞ் சிற்பியைக்கொண்டே தன் நாடு முழுமையும் அனேக குகைக் கோயில்களை நிர்மாணித்தான், சென்னைக் கருகிலே பல்லாவரம் என்று இப்போது சிதைந்து வழங்குகின்ற பல்லவ புரத்திலும், செஞ்சிக் கோட்டைக் கருகில் உள்ள தனவானூரிலும், திரிசிராப்பள்ளி மலைக் கோட்டையிலும், புதுக்கோட்டையைச் சார்ந்த பல இடங்களிலும் மகேந்திர வர்மனின் கட்டளைப்படிக் குகைக் கோயில்கள் எழுந்தன.

மகேந்திரவர்மன் முதலில் ஜைன சமயத்தை தழுவியிருந்தான். இதை அப்பர் சுவாமிகள் சரித்திரத்தால் நாம் அறிவோம். தனது சமயத்தை நிலை நாட்ட எண்ணிச் சைன சமய சின்னங்களுடன் இந்தக் குகைக் கோயில்களைக் கட்டினுன். நார்த்தாமலை, மலையடிப்பட்டி, குன்னந்தர் கோயில் என்ற கிராமங்களிலே அக் கோயில்களைக் காணலாம். மகேந்திரவர்மனது குகைக் கோயில்களுள் மிகச் சிறப்பானது சித்தன்னவாசல் என்ற இடத்திலுள்ளதாகும்.

புதுக்கோட்டையிலிருந்து வட மேற்கே 9 மைல் தூரத்தில் அன்னவாசல் என்ற ஊருக்குப் போகும் பாதையை விட்டு

வடக்கே ஒரு மைல் தூரத்தில் சித்தன்னவாசலுக்கு ஒரு ரஸ்தா பிரிகிறது. அங்கே உள்ளது மலே யும் குகையும்தான். மலே சுமார் இருநூறு அடி உயரமுள்ளது. தென் வடவாகப் படுத்துக் கிடக் கிறது. அதன் வட கோடியில் மேற்குச் சரிவில் மலேயில் குடைந்த குகை ஒன்றிருக்கிறது. இங்கேதான் உலகப் பிரசித்தி பெற்ற ஓவியங்களும் சிற்பங் களும் இருக்கின்றன.

சித்தன்ன வாசலேச் சுற்றிச் சுமார் இருபது குளங்களிருக்கின் றன. எல்லாம் சாகுபடிக்கு உதவு கின்றன. கற்களால் கட்டப்பட்ட மதில் சூழ்ந்திருக்கும் இடந்தான் குகை. இது ஒருஜைன மதத்தைச் சேர்ந்த குகை. ஜைனர்களுள்

நான்
விரும்பி வாங்குவது
உம்மிடியார்
ஸ்டெயின்லெஸ்
ஸ்டீல்
பாத்திரங்களே
VUMMIDIARS
Stainless Steel
வெள்ளி
ஸ்டெயின்
லெஸ் ஸ்டீல்
பாத்திரங்களை
ஸை ஷ ரே
விணல்
துலக்குங்கள்
உம்மிடியாரின் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்களையே நான் பொருக்கி எடுப்பதற்கு பலகாரணங்கள் உண்டு. உம்மிடியார், உடையாத, நொறுங்காத துருஏருதமுதல் தரமான ஸ்டெயின்லெஸ் ஸ்டீலையே உபயோகிக்கிருர்கள். பெண்மணிகளால் பெரு மதிப்பைப் பெற்ற இந்த ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள் வெகு காலம் உழைக்கக் கூடியவை. ஆனுலும் மிக மலிவானவை.
உம்மிடியார்ஸ்
(மான்யுபாக்சரர்ஸ்) லிமிடெட்.
சென்னை-2.
V.R.Z-32

தாம்பூலச் சிலவு காலணா தான்

30 ஆண்டுகளாகப் பொது மக்களின் ஆதரவு பெற்று
தினசரி வாழ்க்கையிலும், கலியாண காலங்களிலும்,
மற்ற விசேஷ காலங்களிலும் சிறந்து விளங்குவது.

REGD. No. 1515
ஸ்டுடென்ஸ்
STUDENTS
பாக்குதூள்
NUT

எங்கும் கிடைக்கும்

தயாரிப்பவர் :

P. R. வடிவேலு முதலியார் & சன்.

28, முல்லா சாயபு தெரு, சென்னை—1.

பஞ்ச நமஷ்காரம் என்ற ஒரு மத சமஸ்காரம் உண்டு. அதாவது பிரதி தினமும் ஒரு ஜைனன் ஐந்து பேர்களுக்கு வந்தனம் செய்ய வேண்டியது. அவர்களில் சித்தர்கள் ஒருவராவர். ஆகவே இதனின்றும் ஜைனர்களுக்குள் சித்தர்களுக்கு அதிக மதிப்புண்டு என்பது தெரிகிறது. "சித்தானும் வசஹ" அதாவது சித்தர்கள் வசிக்கும் இடம் என்பதிலிருந்து 'சித்தன்ன வாசல்' என்ற பெயர் ஏற்பட்டதாக தெரிகிறது.

சித்தன்ன வாசல் குகைக் கோயில் சிறிய கோயில்தான். எல்லாம் சேர்ந்து 20 அடி சதுரம் இருந்தால் அதுவே அதிகம். இந்த 20 சதுர அடி இடம் உலகப் பிரசித்திபெற்றிருப்பதைப் பாருங்கள். தாழ்வாரத்தில் நான்கு கல் தூண்கள் இருக்கின்றன. அவை குகையின் கூரையைத் தாங்கி நிற்பது போலிருக்கிறது. கல் தூண்களின் மேல் பாகமும் கீழ் பாகமும் சுமார் ஒன்னரை அடி சதுர அளவுள்ளவை. நடு பாகம் எட்டுக் கோண முள்ளது. அதையொட்டியதுதான் வெளி மண்டபம். இதன் சுவற்றின் ஒரு கோடியில் யோக நிலையில் ஒரு ஜைன தீர்த்தங்கரர் வீற்றிருக்கிறார். அதற்கு நேர் எதிரிலுள்ள சுவற்றில் ஐந்து தலை நாகத்தின் கீழ் உட்கார்ந்திருப்பவர் ஜைனர்களின் ஏழாவது தீர்த்தங்கரரான பரஸ்வநாதர். இவ்விரு சிற்பங்களும் வெகு அழகானவை. வேலைப் பாடுடையவை. அங்க லக்ஷணங்களெல்லாம் நன்றாக அமைந்திருக்கின்றன. நிமிர்ந்து உட்கார்ந்திருக்கும் தோரணை பார்ப்பதற்கு ஒரு கம்பீரத்தையும் அழகையும் கொடுக்கிறது.

உள்ளே உள்ள சதுர அர்த்த மண்டபத்திலே உள்ள சுவரில் ஜைன மத தீர்த்தங்கரர்களைக் காணலாம். இவை தான் சித்தன்ன வாசலிலே உள்ள சிற்பங்கள்.

சித்தன்ன வாசல் ஓவியத்திற்குத்தான் பிரசித்தமானது. இங்குள்ள ஓவியத்தின் விசேஷம் என்னவென்றால் எங்கும் தாமரைப் பூவுக்குத்தான் பெருமை.

வெளி மண்டபத்தின் உள்ளே நுழைந்ததும் மேல் விதானத்தைப் பாருங்கள்! தாமரையும் அல்லியும் நிரம்பிய தடாகம் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. இத்தடாகத்திலே இயற்கையைப் பழிக்கும் தாமரை மலர்களும் மொட்டுக்களும், கொடிகளும், மற்றும் அல்லி செங்கழுநீர் மலர்களும், அவற்றின் மொட்டுக்களும், இலைகளும் கொடிகளும் உரிய வர்ணங்களில் தீட்டப்பட்டிருக்கின்றன. மலரும் தாமரைகள், மலர்ந்த தாமரைகள், மீன்கள், மாடுகள், யானைகள், அன்னப் பறவைகள், மூன்று மனிதர்கள், குளத்தில் பூ பறித்துக்கொண்டிருக்கும் காட்சி, இவையெல்லாம் மறக்க முடியாதவை. மலர்களும், அவற்றின் இதழ்களின் ரேகைகளும் மிக மிக நுட்பமாகக் காட்டப்பட்டிருக்கின்றன. யானைகளும், மாடுகளும் நீரைக் கலக்கிக் களியாடுகின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கவிஞர் இத்தகைய கவின் காட்சியைக் கண்டு மனமுவந்து பாடியுள்ள பாடல் நினைவுக்கு வருகிறது.

"அன்னற் பழனத்து
அரக்காம்பல் வாய் அவிழ
வெள்ளம் தீப்பட்டது
எனவெரீ இப் - புள்ளினம் தம்
கைச் சிறகால் பார்ப பொடுக்கும்"
(முத்தொள்ளாயிரம்)

எல்லாம் கல்லின் மேல் சுண்ணம்பு பூசி அதன் மேல் என்றும் அழியா வர்ணங்களைக் குழைத்துத் தீட்டிய சித்திரங்கள் தான். இச்சித்திரங்கள் 'மணிமேகலை'யில் குறிப்பிட்டுள்ள 'வித்தகரியற்றிய கைவினைச் சித்திரங்களோ' என வியப்புறும்படி அமைந்துள்ளன.

தாமரைத் தடாகத்திலே ஒரு புறத்திலே கோவணம் தரித்துத் தொள்ளைக் காதுகளுடன் மூவர்

சதுரமான தூண்களிலுள்ள சித்திரங்கள் உலகப் பிரசித்தமானவை. இச்சித்திரங்களெல்லாம் ஒன்னரை அடி சதுரத்திற் கதிகமாயிருக்காது. வடபுறத்திலே ஒரு நடன மாதைப் பார்க்கிறோம். அங்கங்களிலே ஒரு குழைவு; கண்களிலே ஒரு கவர்ச்சி. அணிகளிலே ஒரு வியப்பு. ரோஜா வர்ண உடல் அழகும், கருங் கூந்தலிலே தாமரை சொருகியிருக்கும் நேர்த்தியும் உள்ளத்தை தட்டியெழுப்புகிறது. நிருத்தம் செய்யும் இவள், தன் இடது புயத்தை கசஹத நிலையில் உடலுக்குக் குறுக்கே தொங்கவிட்டு தன் வலது கையை மடக்கி அக் கையால் அழகுபெற அவய முத்திரை காட்டுகிறாள். இதை 'லோல ஹஸ்தம்' என்பார்கள்.

மற்றொரு நாட்டியக்காரி நிருத்தத்திலே இடது புயத்தை ரேசிதமாக நீட்டி வலது புயத்தை மடக்கி அக்கையால் அபய முத்திரை காட்டி உடலை லாகவமாக வளைத்து நிற்கிறாள். இவ்விரு நடிகளும் நாட்டியக் கச்சணிந்து பல அணிகலன்களை அணிந்துள்ளார்கள். கைகளில் வளையல்கள், காப்புகள், முழுங்கைக்கு மேல் கடகம், கழுத்தில் பலவித மணிமாலைகள், காதுகளில் ஓலைகள் (பத்ர குண்டலங்கள்), கொண்டையிட்ட கூந்தலில் தாமரை, தழை மடல்கள், சுட்டி முதலிய அணிகள் அணிந்து காணப்படுவர். இவர்களில் ஒருவன் தன் வலக்கையில் தாமரை மலர்களைக் கொய்கிறான். அவனது இடக்கையில் ஒரு பூக்குடலை தொங்குகிறது. மற்றொருவன் தாமரை மலரைக் கொடியுடன் கொண்டு வலக்கையை நீட்டி, ஆள் காட்டி விரலையும், சுண்டு விரலையும் நீட்டி மற்ற விரல்களையும் மடக்கி முத்திரையிட்டுக் காட்டுகிறான். ஒருவனது நிறம் கருஞ் சிவப்பு. மற்றவனுடைய நிறம் கிச்சலி. மூன்றுமவனின் நிறம் பொன் போன்றது. இம் மூவரின் (உருவ அமைப்பு) வனப்பு, நிற்கும் லாகவமான நிலை, மேனியின் வடிவம், கண்களின் பார்வை, பிடரியளவிலுள்ள கரிய தலைமயிர், நடுவில் வகிர்ந்திருக்கும் ஒழுங்கு, யாவும் உள்ளத்தை, ஒருங்கே கவர்கின்றன.

துள்ளார்கள். பொன்னிறமான மேனியின் அழகு, குறுகிய இடை, உடலின் பாங்கு, சர்ப்பங்களைப் போல நெளியும் சரங்கள், கண்களின் ஒளி இவைகள் யாவும் ஒருங்கே சேர்ந்து 'ஜீவகளை' ததும்பும் கணிகைகள் காவியங்களில் 'அப்சரஸ்' என விவரிக்கப்படும் தேவ கன்னிகைகளையே நினைவூட்டுகின்றன.

இவ்விரு அப்சர பெண்களை இடுப்புவரைதான் ஓவியக்காரர் வரைந்திருக்கிறார்கள். அவர்கள் உடலில் துணி என்பதே கிடையாது. அவர்களுடைய உருண்டு திரண்ட அவயவங்களும், கட்டான உடம்பும், முகத்தில் தவழும் ஆனந்தமும், லயம் நிறைந்த தோற்றமும் இங்குள்ள ஓவியத்தைப் பார்த்தாலே தெரியும்.

அடுத்த தூணைப் பார்த்தால் அங்கே காட்சி கொடுக்க மகேந்திர வர்மனே காத்து நிற்கிறான். ஆம்! அவன் பெரிய வீரன். கலா ரசிகன், கவிஞன், மத்த விலாச நாடகாசிரியன், சித்திரப்புலி என்றெல்லாம் படித்திருக்கிறோம். ஒருபெரிய 'சித்திரக்காரப் புலி'தான் என்பதை எண்ணுந்தோறும் நம்மை அறியாமலேயே மீண்டும் மீண்டும் அவனது தோற்றத்தை ஆராயத்தோன்றுகிறது. அவனுடைய காம்பீரியம் அவனுடைய மகுடத்திலேயே தெரிகிறது. முகத்திலே 'வீரக்' களை ஜொலிக்கிறது. 'நாம் செய்த இப்பணி என்றென்றும் யாவரும் போற்றிப் பாராட்டுவர்' என்ற ஆத்மார்த்ததிருப்தியை அவன் கண்களிலே கண்டு வியப்படையாமல் இருக்க முடியாது. கலைக்கண் கொண்டு மிகவும் நிதானமாக காண வேண்டும் மகேந்திர வர்மனை!

ஜைனர்கள் கற்பனை செய்துள்ள தெய்வலோகக் காட்சியை உள்ளே போனதும் கண்டு களிக்கலாம். கம்பளம் விரித்தாற்போல உள்ள சித்திரம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகிறது.

இச்சித்திரங்கள் வரைந்துள்ள இடங்களில் கல்லின் மேற்பரப்பு சமமாகப் பொலியப்பட்டு, பிறகு அதன் மீது உமியும்புல்லும் சேர்த்துச் செய்த ஒரு சாந்தை பூசி, அதன் மேல் வெண் சுண்ணும்பும் மணலும் சேர்ந்த சாந்தை அரைக்கால் அங்குல கனத்திற்குப் பூசி, அதை வழ வழப்பாகத் தேய்த்து, அது காய்வதற்கு முன் சித்திரங்களின் ரேகைகளும் வர்ணங்களும் தீட்டப்பட்டுள்ளனவாம். இதுதான் சுதைச் சித்திரம் என்பது 'Fresco secco' என்று மேல் நாடு ஓவியர் பெயரிடுவர். இங்கு உபயோகப் படுத்தப்பட்ட வர்ணங்கள் யாவும் கனிப் பொருள்களே யன்றித் தாவரப் பொருள்கள் அல்ல. உபயோகப்படுத்தப்பட்ட வர்ணங்

கள் கருப்பு, மஞ்சள், பச்சை, கிச்சலி, (பீதவர்ணம்) சிவப்பு நீலம், வெள்ளையாகும். இத்தாலி தேசத்திலே தோன்றிய இச் சித்திரப் பணி வெகுகாலத்திற்கு முன்னமே நம் நாட்டில் வழங்கி வந்தது என்பதற்கு. அஜந்தா, சிகிரியா, முதலிய இடங்களிலுள்ள அற்புதச் சித்திரங்களும், வடமொழி நூலிலுள்ள ஆராய்ச்சிக் குறிப்புகளும் தெளிவாக்குகின்றன. மணிமேகலை இரண்டாம் காதை 31வது வரியிலே குறிப்பிடப்பட்டிருக்கும் 'ஓவியச் செந்நூல்' என்ற தத்திலிருந்து இப் பெயருள்ள நூல் ஒன்றைத் தமிழர் கையாண்டனர் என்பது தெளிவாக விளங்கும். சுண்ணம் தீட்டிய சுவரில் ஓவியம் வரைதல் தமிழ் நாட்டில் ஏழாம் நூற்றுண்டுக்கு முன்னரே யிருந்தது என்பது மணிமேகலை மூன்ரும் காதை (129-131) வரிகளான

> "எவ்வகை யுயிர்களு முவமங் காட்டி
> வெண்சுவை விளக்கத்து
> வித்தகரியற்றிய
> கண்கவ ரோவியங் கண்டு"

என்பவற்றிலிருந்து விளங்கும்.

இங்குள்ள சித்திரங்கள் யாவும் ஓவிய லட்சணங்கள் அமைந்து இயற்கைப் பிராணிகளையும் மனித சித்திரங்களையும் கற்பித்து வரைந்துள்ள ஓவியர்கள் "மணிமேகலையிலே குறிப்பிடப்பட்டுள்ள "வரந்தர லெழுதிய வோவிய மாக்களே" யாவர் என்பதில் என்ன சந்தேகம்.

தமிழ் நாட்டுப் பண்டைய ஓவியச் சிறப்பை விளக்கும் ஒப்பற்ற புராதன இடமாகிய 'சித்தன்ன வாசலை' ஒவ்வொரு தமிழ்த் தாயின் புதல்வனும் பார்த்து பரவசமடைய வேண்டும். பார்த்தால் தமிழ் நாகரீகத்தின் மேன்மையை, கலாசாரத்தின் பண்பையும் பரப்பையும் நன்கு அறிந்து தானும் ஒரு தமிழன் என்று பெருமை பாராட்டிக் கொள்ளுவான். தமிழ் நாகரீகம், புராதனம், கலாசாரம், இவற்றில் ஆழ்ந்த நம்பிக்கையும் ஏற்படும். தமிழனது பெருமை அளவிடற்கரியது என்பதை எண்ணுந்தோறும் மகிழ்ச்சி பொங்கித் ததும்புகிறது அல்லவா!

பிரமை

நாரண துரைக்கண்ணன்

எங்கு பார்த்தாலும் ஒரே மூடு பனி கவிந்திருந்தது, ஜீவராசிகளை மறைக்கும் மாயையைப் போல. இஞ்சின் செய்துகொண்டு வந்த சப்தமும், போர்ட்டர்கள் போட்ட இரைச்சலும், பிரயாணிகள் அவசர அவசரமாக இறங்கியதாலும் பரபரப்பாக விழுந்தடித்துக் கொண்டு ஏறுவதாலும் ஏற்பட்ட சந்தடியும்தான், ரயில் ஜங்ஷனில் வந்து நின்றிருக்கிறதென்பதை அறிவித்தன. வைகறை கழிந்து அருணோதயம் உண்டாகியும் மனிதர்கள் ஒருவர் முகத்தை மற்றொருவர் பார்க்கமுடியாதபடி பனிப் படலம் படர்ந்திருந்தது. ஆட்கள் போவதும் வருவதும் மேகமண்டலத்தில் மிதந்து செல்வதுபோன்று காட்சியளித்தது.

நான் மதுரைக்கு ஒரு காரியமாகப் போய்விட்டு நண்பர்களுடன் 'திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில்' திரும்பிக் கொண்டிருந்தேன். ரயில் செங்கல்பட்டு ஜங்ஷனில் வந்து நின்றதுமே, சூடாகக் காபி அருந்திக் குளிரைப் போக்கிக் கொள்ள நண்பர்கள் வண்டியை விட்டிறங்கி விரைந்து போயினர். குளிர் மிகுதியினாலும், ஜன சந்தடியினாலும் இரவெல்லாம் தூக்கமே வராமல் நான் அவதிப்பட்டுக் கொண்டிருந்ததால், உடம்பெல்லாம் அசதியாக இருந்தது; ஆதலால், நண்பர்களைக் காபி வாங்கிக் கொண்டு வரச் சொல்லிவிட்டு, நான் வண்டியிலேயே உட்கார்ந்திருந்தேன்.

குளிர் அடைப்புக்காக உடம்பில் 'ஸ்வெட்டரை'ப் போட்டிருந்தேன். 'பிளானல் மப்ளரைக்' காதுகளை மூடும்படியாக தலையைச் சுற்றிக் கட்டியிருந்தேன். அப்படியிருந்தும், பனிச்சாரலை என்னால் தாங்கமுடியவில்லை. நான் உட்கார்ந்திருந்த ஜன்னல் பக்கத்தை விட்டு நகர்ந்து உட்புறம் போய் விடவும் மனம் வரவில்லை. எனக்கு எப்போதுமே புறக்காட்சிகளைப் பார்த்துக்கொண்டிருப்பதிலும் சூழ்நிலையைக் கூர்ந்து கவனிப்ப

என்னப்பா இது! வியாபாரம் சுருங்கிப் போச்சே, புது போர்டு மாட்டினா ஒருவேளை நல்லா நடக்குதோ, பாக்கலாம்னு, ஒங்கிட்டே போர்டு எளுதி வரச்சொன்னா, நீ என்னடான்னா போர்டுலேயே வியாபாரத்தை சுருக்கித் தொலைச்சுட்டியே!

திலும் சிறுவர்களைப் போல் ஆவல் அதிகம். ஆகவே, நான் பனிச்சாரல் படாமலிருக்க, கண்ணாடி ஜன்னலை மட்டும் மூடிவிட முயன்றேன். இச்சமயத்தில் முன் கம்பார்ட்மெண்டிலிருந்து எழுந்த இனிய குரல் செவியில் நுழைந்து என் கவனத்தைக் கவர்ந்தது. ஆகவே, கண்ணாடி ஜன்னலை உயரத் தூக்காமல், அப்படியே விட்டுவிட்டு ஓசை வந்த திசையில் கூர்ந்து கவனிக்கலானேன்.

''எந்த ஊருக்குப் போய்விட்டு வருகிறீர்கள்?....'' இது ஆடவரொருவரின் குரல்.

''கடலூருக்குப் போய்விட்டு வருகிறோம், அண்ணா!........ நீங்கள்....?''

இதுதான் என் இதயத்தை இழுத்த இனிய குரல். இது ஒரு பெண் குரல் என்பதில் சந்தேகமில்லை. பொதுவாகவே, பெண்களுடைய குரலில் இனிமை தொனிப்பது இயல்பு. ஆனால் இந்தக் குரலில் உள்ள இனிமையை நான் இதுவரை எங்கும் கேட்டதில்லை. 'இசைவாணியின் கண்டத்திலிருந்து எழும் இனிய கீதமோ! யாழ் என்று சொல்லுகிறார்களே! அந்த இன்னிசைக் கருவி இசைவாணனொருவனால் மீட்டப்பட்டால் இப்படித்தான் இனிமையைப் பொழியுமோ?' என்றெல்லாம் என் கலையுள்ளம் கருதியது.

''நான் திருச்சிக்கு ஒரு அலுவலாகப் போய்விட்டு வருகிறேன், அம்மா!'' என்று ஆணின் கரகரத்த குரல் என் மயக்கத்தைக் கலைக்க முயன்றது. ''ஆமாம் வேலாயுதம் கூட வரவில்லையா?

''இல்லையண்ணா, அவருக்கு ஆபீஸில் லீவு கிடைக்கவில்லை. பையனை அழைத்துக் கொண்டு போய் வருகிறேன்; இதோ அவன் தூங்கிக் கொண்டிருக்கிறான்.''

மீண்டும் மிழற்றிய அந்த மோகனக்குரலில் நான் இம்முறை முன்னைவிட லயித்துப் போனேன். இவ்வளவு இனிய குரல் வாய்ந்த அந்தப் பெண்மணி பேரழகியாகத்தான் இருக்க வேண்டுமென்று, சௌந்தர்ய உபாசனை செய்து வரும் என் உள்ளம் எண்ணியது. அப்பெண்ணைப் பார்க்க வேண்டுமென்று எனக்குச் சபலம் உண்டாயிற்று. ஆயினும், யாதொரு சம்பந்தமுமில்லாது, முன்பின் தெரியாத ஒரு பெண்ணைப் பார்க்க விரும்புவது முறையல்ல என்று அகமனம் எனக்கு இடித்துக் கூறியது.

இவ்விதம் நான் என் உள்ளத்தோடு போராடிக் கொண்டிருந்த சமயத்தில், ''ஏன் அம்மா, இப்படியே இறங்கி வீட்டுக்கு வந்து போங்களேன்....'' என்று அவளுடன் பேசிய மனிதர் கேட்டார்.

''இருக்கட்டும், அண்ணா! அதற்கென்ன! இன்னொரு சமயம் வருகிறோம்...''

'அவள் குரல்தான் என்ன இனிமையாக ஒலிக்கிறது? முன் பிறப்பில் அவள் ஆண்டவனுக்குத் தேன் அபிஷேகம் செய்திருப்பாளோ!' இவ்விதமெல்லாம் எண்ணி என் உள்ளம் வியந்தது.

"அப்படியானல், நான் வருகிறேன், அம்மா! கூடவந்திப்பவர் காத்திருக்கிருர்..."

பிளாட்பாரத்தில் நின்றவாரே பேசிக்கொண்டிருந்த அம் மனிதர் அவளிடம் விடைப்பெற்றுப்போக முயன்ருர்.

என் மனம் ஒரே மூர்த்தனியமாக எழுந்து கூத்தாடியது. 'அம் மனிதர் போய்விட்டால், அவருடன் பேசிக்கொண்டிருந்த பெண் யாரெனத் தெரியாமல் போய்விடுமோ? வண்டியில் எத்தனையோ பெண்கள் பிரயாணஞ் செய்கின்றனர். அக் கூட்டத்தில் இவளை எப்படி அடையாளம் கண்டுபிடிக்க முடியும்?''

இந்தச் சர்ச்சையில் என் தீர்ப்பை எதிர்பாராமலே, மனம் துரிதமாக வேலை செய்தது. அப்புறம் அது இயக்கியபடி நான் இயங்க வேண்டியதைத் தவிர, வேறு வழியில்லை, நான் இருப்பிடத்தை விட்டு எழுந்தேன். கால்கள் விரைந்து நடந்தன. சில விநாடிகளில் வண்டியை விட்டு இறங்கி, அப் பெண்ணுடன் பேசிக்கொண்டிருந்த மனிதரைக் குறிவைத்து வேகமாக நடந்தேன். நான் அப் பெண்ணைப் பார்க்கப் போகிறேன் என்பதை யாராயினும் அறிந்துகொள்ளப் போகிருர்களே என்ற அச்சத்தால் எனக்குத் தெரிந்த யாரையோ கூப்பிட்டுக் கொண்டு போவதுபோல் பாவனை செய்தவாறு செல்லலானேன்.

"ஓ! அப்படியா! போய் வாருங்கள்" என்று அப் பெண் அவருக்கு விடை கொடுப்பது நான் அவ்விடத்தைக் கடந்து போகும் போது கேட்டது. அம்மனிதரும் அவ்விடத்தைவிட்டு நடக்கலானர்.

'ஐயோ! இவ்வளவு சிரமப் பட்டு ஓடிவந்தும் அவளை இன்னரென அறிந்து பார்க்க முடியாமல் போய்விடும் போலிருக்கிறதே!' என்று என் மனம் எண்ணி ஏங்கியது. ஆனல், அதிர்ஷ்டவசமாக, அப் பெண் போகும் தன் உறவினரைக் கூப்பிடலானள்.

"அண்ணு, அண்ணு! இருங்கள்; ஒரு வார்த்தை......"

"என்ன அம்மா...." என்று கேட்டுக் கொண்டு போன மனிதர் திரும்பிவந்தார்.

"கேட்க மறந்தேபோய் விட்டேன்; அண்ணு! பெரியம்மா, அண்ணி, தங்கை, குழந்தைகளெல்லாம் சௌக்கியந்தானே!"

"சௌக்கியந்தான்".

"நான் கேட்டதாக எல்லோரிடமும் சொல்லுங்கள்."

நான் இதற்குள் அந்தக் கம்பார்ட்மெண்டைக் கடந்து, தூரப்போய் நின்று அந்தக் குயில் மொழியாளைக் கூர்ந்து நோக்கினேன். 'என்ன இவளா, இவ்வளவு இனிமையான குரலில் பேசினுள்? நம்ப முடியவில்லையே! பனிப்படலத்தின் ஊடே பார்ப்பதால், அந்த

அழகி இப்படி விகாரமாகக் காட்சி யளிக்கிறாளோ?' இவ்வித ஐயப் பாட்டுடன் நான் துணிந்து அணு கிப் போய் அவளைப் பார்த்தேன்.

கீழ் வானில் கிரணங்களைப் பரப்பியவாறு சூரியன் உதய மாய்க் கொண்டிருந்ததால், மூடுபனி மெள்ள மெள்ள விலகிய வண்ணமிருக்கவே, ஆட்களை நன் றாகப் பார்க்க முடிந்தது.

சந்தேகமில்லை. அவளே தான். அந்த மனிதருடன் பேசிக் கொண் டிருந்த அப்பெண் அவலக்ஷணமே அவதாரமெடுத்தது போல், அமர்ந்திருந்தாள். அவளுடைய கருமேகம் போன்ற உருவத்தை யும் பருவதாகாரமான தேகத்தை யும் பார்க்க என் கண்கள் கூசின. உடனே நான் பார்வையைத் தாழ்த்திக் கொண்டு நடக்க முயன் றேன். இவ்வளவு பெரிய ஏமாற் றத்தை என்னால் தாங்க முடிய வில்லை, 'என்னுடைய சபல புத் திக்குச் சரியான சம்மட்டியடி விழுந்தது' என்று சுட்டிக் காட்டி ஏளனம் செய்தது அகமனம். 'இவ்வளவு குரூர சொரூபத்தில் கோகிலத்தின் குரலினும் இனிய தொனி எப்படி யமைந்திருக் கிறது? சிருஷ்டிகர்த்தாவின் முட் டாள் தனத்துக்கு இது ஒரு உதார ணமோ!' என்று கேட்டு என் பேதைமையை மறைக்க முயன் றேன்.

"என்ன ராஜா, இங்கே நிற் கிறீர்கள்?"

என் நண்பர்களின் இக்கேள்வி என்னை விழிப்புறச் செய்தது.

அவர்களைக் கண்டு நான் திடுக் கிட்டேன். என் செயலை அறிந்து விட்டால், கேலி செய்வார்களே என்று பயந்தேன். என் முகத்தில் அசடு வழிந்தது. ஆனாலும், நான் சமாளித்துக் கொண்டு, "ஒன்று மில்லை. ரொம்ப நேரமாக உங் களைக் காணோமே என்று பார்க்க வந்தேன்" என்று கூறினேன்.

"என்ன அவசரம்?"

"எங்களைப் பார்க்க வந்தீர் களா? அல்லது வேறு யாரையா யினும்....?" என்று மற்றொரு நண் பன் தமாஷ் செய்தான்.

"உனக்கு எப்போதுமே கேலிப் பேச்சுத்தான். வாங்கப்பா, போக லாம். காபி சூடாயிருக்கிறதோ இல்லையோ!" என்று கூறிக் கொண்டே, அவர்களின் தோள் களைப் பற்றிய வாறே அவ் விடத்தை விட்டு நடந்தேன்.

ரயில் புறப்படப் போகிறதென் பதற்கு அடையாளமாக, மணி யடிக்கலாயிற்று. பிரயாணிகள் பரப்பரப்பாக ரயிலில் ஏறலா யினர். நாங்களும் வேகமாக நடந் தோம்.

சூரியன் மேலெழுந்து விட்டான். பனி இருக்குமிடம் தெரியாமல் போய்விட்டது. என் அறிவை மறைத்தமாயையும் என்னை விட்டு அகன்றது.

45 ஆண்டுகளாக புகழ் பெற்றது.

ஆர். எஸ். பதி மருந்து

இது வீட்டிலிருந்தால் ஒரு டாக்டர் இருப்பது போலாகும்.

தலைவலி, ஜலதோஷம், ஜன்னி முதலிய

240 வியாதிகளுக்கு கைகண்டது

தயாரிப்பவர்கள் :

ஆர். எஸ். பதி அண்டு கோ.,

தபாற் பெட்டி நிர். 99. மதுரை.

குணத்தில் மேலானது

L. G. எல். ஜி.

மிஸ்கி பெருங்காயம்

மார்க்கை கவனித்து வாங்கவும்

லால்ஜி கோது & கம்பெனி

சௌகார்பேட்டை, மதருஸ்-1.

தலைமை ஆபீஸ்: பம்பாய்.

ஏ. ஸி. ஸி.

" நீலகிரி " பிராண்டு

போர்ட்லண்டு சிமெண்டு

பிரிட்டிஷ் ஸ்டேன்டார்டு
தரத்தைவிட சிறந்தது

கீழ்கண்ட எங்கள் டிபோக்களில் கிடைக்கும்

ராயப்பேட்டை : *சிமெண்டு கான்கிரீட் ஒர்க்ஸ்,*
11-A, வெஸ்ட்காட் ரோடு.

திருவல்லிக்கேணி : *131, பைகிராப்ட்ஸ் ரோடு.*
283-A, திருவல்லிக்கேணி ஹைரோடு.
173, பார்பர்ஸ் பிரிட்ஜ் ரோடு.

மயிலாப்பூர் : *14, கச்சேரி ரோடு.*

புதுப்பேட்டை : *73, ஹாரிஸ் ரோடு.*

பெரியமெட் : *"ஜயாமான்ஷன்" பூந்தமல்லி ஹைரோடு.*

சூளை : *139, சூளை ஹைரோடு.*
40, காலத்திய முதலி தெரு, புதிய மார்கட்.

புரசவாக்கம் : *139/2 புரசவாக்கம் ஹைரோடு.*

பார்க் டவுன் : *20-B, வெங்கடாசல முதலி தெரு,*
(அய்யா பிள்ளை தெரு)

வண்ணாரபேட்டை : *105, ஹைரோடு திருவொற்றியூர்.*

கீழ்க்கண்ட வெளியூர் டிப்போக்களிலும் கிடைக்கும்.

ஆற்காடு : *(வ. ஆ. ஜில்லா) "கஸ்தூரி பில்டிங்ஸ்"*

காஞ்சீபுரம் : *(செங்கல்பட்டு ஜில்லா) 99, ராஜா தெரு.*

15, செம்புதாஸ் தெருவிலுள்ள எங்கள் ஆபீஸிலும் கிடைக்கும்

எம். குப்புஸ்வாமி நாய்க்கர்

15, செம்புதாஸ் தெரு, சென்னை-1

போன் : *2489.*

மனைப்புயல்



யோகி சுத்தானந்த பாரதியார்

“வள், வள்” என்று நரக நாய் போல் வருகிறது சலாம் – நம் மேல் அதற்கு என்ன கோபமோ! சங்கிலியை அறுத்துக் கொண்டு நம்மைக் கடித்துக் குதறப் பாய்ந்து குதிக்கிறது. அதற்குச் சலாம் போட்டாலும் மூர்க்கச்சினம் தணிவதில்லை. அதன் பைரவியைக் கேட்டதுமே டவாலிச் சேவகன் ஓடி வருகிறான் — ஆளைப் பார்க்கிறான் – சட்டை தொப்பி எல்லாம் நாகரிக மோஸ்தரில் இருந்தால் “ஸார் குட்மாணிங் (குட் ஈவணிங்) வாருங்கோ ஸார் டிராயிங் ஹாலில் இருங்கோ; விசிடிங் கார்டு கொடுங்கோ – என்று “ங்கோ” போட்டு உள்ளே அழைத்துச் செல்லுகிறான். நாயும் அடங்கி வாலை ஆட்டு

கிறது. வெள்ளை வேட்டி ஷர்ட்டு போட்டு ஆள் டீக்காக இருந்தால் "ஐயா திண்ணையில் இரும் செய்தியைச் சொல்லும்" என்று 'உம்' போட்டுப் பேசுவான் டவாலி தடிராமன். அழுக்கு கந்தல் பிச்சை என்றுகண்டதும் 'சூசூகடி, போடா மடயா" என்றெல்லாம் அவனும் நாய்க்கு மேல் பேயாகக் குலைப்பான். சந்தா கடன் வசூல் என்று கண்டால் "ஷூடிங் அம்மா போயிருக்கிருள் — விலாசம் கொடுங்கள்" என்று அனுப்பி விடுவான். பத்திரிகை ஆசிரியர் பேட்டி என்ருலோ "வாருங்கள் — அம்மா நேற்றே எதிர்பார்த்தாள் உட்காருங்கள் — காப்பி சாப்பிடுங்கள்" என்று ஏராளமான "கள்" போட்டு உள்ளே அழைத்துச் சென்று — காமிராவுடன் அமர்த்துவான். ஃபோனில் செய்தி செல்லும்; உடனே ராஜன் வருவான். எதிரிப் பத்திரிகைகளைக் கண்டனம் செய்து "உங்கள் பத்திரிகைதான் பத்திரிகை ஸார். ஊரில் எத்தனையோ நடிகைகள் பொருமைக் கண்ணுல் ரம்பாவைப் பார்க்கிருர்கள். அவள் போல ஆடக் காலெடுத்து வைக்கிருர்கள்; இவர்களெல்லாம் ரம்பா ஆவார்களா ஸார் — நீங்கள் இதெல்லாம் உங்கள் "கலைவனத்தில்" அழுத்தமாக எழுத வேண்டும்—சரி முதலில் காப்பி சாப்பிடலாம்" என்று 'லாம்' போட்டு ஆளை மயக்கிப் பிறகு தனது கலா ராணியுடன் பேட்டி செய்து வைப்பான் அந்த விநோதங்களைப் பிறகுகாண்போம். வருவோர் முதலில் காத்திருக்கும் ஹால் மெத்தை நாற்காலிகளும், அணி மணி அலங்காரங்களும், பூஞ் செம்புகளும், கண்ணைக் கவரும் கலைப்படங்களும் தந்தவேலைப் பாடுகளும் கூடியது. இதில் அமர்ந்தவுடனேயே "அடடா ரம்பா பாய் எவ்வளவு பெரிய கலைச் செல்வியோ, சீமாட்டியோ" என்று நினைக்கத் தோன்றும். இதற்கு அடுத்தது "டின்னர்ஹால்" இதில் நாகரிகமான வட்டமேஜை முன் வெல்வெட் நாற்காலிகள் காணும். கண்ணாடி பீரோக்களில் பானங்களும், பல வகைப் பணிகாரங்களும் காணும். எல்லாம் பள பள தக தக வென்றிருக்கும்........

இதற்கு மூலஸ்தானமான சமயலறை, உக்கிராணம் எல்லாம் அடுத்தடுத்திருக்கும். இவ்வளவும் கீழே. மேலே இரண்டாம் அடுக்கிற்குச் சென்ருல் இந்திர லோகந்தான் — இளங் காளைகள் மயங்கும் மோகனக் காட்சி சாலை அதுவே, அங்கே நடன மேடை, இசையரங்கு, உல்லாச அறைகள் கவர்ச்சியான ஜோடனைகள் ஆடல் பாடல் அழகுமிக்க யுவதிகள் அவர்களைச் சூழ்ந்து மொய்க்கும் யுவர்கள் எல்லாம் காணலாம். யாழ், குழல், பிடில் கின்னரி. சாரந்தா, யஸ்ராஜ், ஸ்வரகெத்து, மத்தளம், கஞ்சிரா, டோலக், தபிலா, முகர்சிங் முதலிய பல வாத்தியங்கள் முழங்க ரம்பா ஆடிப்பாடி அட்டகாசம் செய்யும் இந்திர லோகத்திற்கு வந்ததும் மனம் பறிகொடுக்காத மனிதரில்லை — பள பள வழு வழு வென்று கண்ணாடிபோலிருக்கும் சுவர்களில் நிலைக் கண்ணாடிகள் அங்கு நடக்கும் காட்சிகளை நிழற்றிக் காட்டும். ஒரு ரம்பை நடனமாடினுல் எட்டு ரம்பைகளைக் காட்டும். நடன மேடையில் ஒரு கமல ஜோதியுள்ளது. கமலத்திற்குப் பதினுறு விரிந்த தளங்கள். அவை சொக்கப் பொன்னுல் மெருகிடப் பெற்றவை. நடுவே ஒரு மின் மணி விளக்கு — சிறு மயிலைப் போல உருவாக்கப் பெற்றது. அதில் பல நிறங்கள் தீட்டப்பெற்றுள்ளன. அந்த விளக்கு மின்சக்தியாலே சுழலும். அதன் வெளிச்சம் பதினுறு தளங்களிலும் படும் போது மயில் கூட்டம் தோகை விரித்து நடனமாடுவது போலிருக்கும். இது ரம்பை நடனத்தை எடுத்துக் காட்டும் பின்னணிக் காட்சியாயிருந்தது. ரம்பைக்குத் தன்னழகே யழகு பிறர் அழகும் அவலட்சணம் என்ற மேட்டிமை இருந்ததால், வேறு எந்தப் படத்தையும் அங்கே வைக்கவில்லை —

லக்ஷ்மி; சரஸ்வதி, உமா, ராதா வள்ளி படங்களைக் கூட அவள் அருவருத்தாள். வேணு கோபாலன் சிலை ஜெயபூரில் நல்ல வேலைப்பாடு செய்தது— அது மட்டுமே அங்கேயுள்ளது. அதற்கு எதிரே ரம்பாவின் உருவப் படம் நல்ல வேலைப்பாட்டுடன் விளங்கியது. முதல் அடுக்கில் அறுசுவை விருந்தும், இரண்டாம் அடுக்கில் கலைச்சுவை விருந்தும் அமளியாக நடக்கும் – மூன்ரும் அடுக்கு பரம ரகசியம்— ரம்பாவுக்கே தனியுரிமை—அவள் அங்கே வா என்ருலே வரலாம். போ என்ருல் உடனே போய்விட வேண்டும். வராதே என்ருல் யாரும் வரக் கூடாது— ராஜன் கூடத்தான். மூன்ருவது மாடி நல்ல காற்று வீசும் நீலா முற்றத்தையுடையது, அங்கிருந்து மௌண்டு ரோடு காட்சிகளை நாற்புறமுங் காணலாம். அங்கிருந்து பார்த்தால் லீலா ஸ்டூடியோ நன்ருகத் தெரியும், இங்கிருந்து பைனுகுலர் வைத்துப் பார்த்தால் அங்கிருக்கும் ஆட்களைக் காணலாம்; லீலா ஸ்டூடியோவை ராஜன் வாங்கி ரம்பாவுக்கே நடத்துகிருன் — இப்போது அங்கே புன்னகை என்ற படம் ஷூடிங் நடக்கிறது. அதில் ரம்பாபாய் தலைவி — அவள் நடிக்கும் பகுதி முதலில் காதல் பிறகு நோதல், வீதல்.

4 மனப்புயல்

லீலா ஸ்டூடியோவில் பிரபல நடிக நடிகையர் தயாராக வந்து ஒத்திகை நடத்துகின்றனர். எல்லாரும் ரம்பாபாயை எதிர்பார்க்கின்றனர். மானேஜர் ஜிந்தாலால் ரம்பா வீட்டிற்கு ஆள்விட்டார்; அங்கில்லை. கடற்கரையில் இருப்பதாகச் செய்தியறிந்து அங்கே ஆள் விட்டான். அங்கேயும் காணும். ஓட்டல் ஓட்டலாகத் தேடித்திரிந்து மீண்டும் ரம்பா விலாசத்திற்கே ஆள் வந்தான். ரம்பா பாய் அதற்குள் வீட்டிற்கு வந்து யாருடனும் பேசாமல், சாப்பிடாமல் கூட நேராக மூன்

> கடவுளின் பெயரை மட்டுமே ஜெபித்துக் சொண்டிருப்பவன் உருப்பட மாட்டான். 'பணம், பணம்' என்று உருப்போடுகிறவன் எங்காவது பணம் பெற்றிருக்கிருனு என்ன? இரண்டையும் அடைய முயற்சி செய்ய வேண்டியது அவசியம் எனப் பொருள் கொள்க!
>
> — ஞானபிரகாசம்

ரும் மாடிக்கு விரைந்து சென்று பட்டென்று கதவைத் தாழிட்டுக் கொண்டாள். வெளியே "பார்க்க முடியாது" என்ற குறிப்புப் போட்டிருந்தது. ராஜன் கூடப் போக முடியவில்லை. ராஜனுக்கும் மனப்புயல் வீசத் தொடங்கியது. அவனும் ஒன்றுந்தோன்ருமல் ஒரு குறிப்புமில்லாமல் ஏதேதோ எண்ணிக் கொண்டு, வேணு கோபாலன் படத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்; இன்னும் மங்கலாகத் தெரியும் ரங்க விலாஸையும் பார்த்துப் பார்த்துப் பழைய பாரதத்தை அவன் மனம் புரட்டிக் கொண்டிருந்தது. லீலா ஸ்டியோவில் அவனுக்கும் ஜிந்தாலாலுடன் பங்குண்டு.

"இல்லாடி" என்ற படமும் தயாராகிறது; ஒத்திகை நடக்கிறது. அதிலும் ரம்பாவே "புல் புல் தாரா"வாக நடிக்கிருள். அவள் ஆடல் பாடலாலே தான் முதலாளி பெட்டி நிரம்ப வேண்டும். ஒரு படத்தின் வெற்றிக்கு அளவுகோல் பணப் பெட்டி என்பதே படாதிபதிகளின் கருத்து. ரம்பா வராமல் முதலாளிக்கு ஒன்றும் ஓடவில்லை. போனில் அழைத்தான். பதிலில்லை. சட்டென்று ஸ்டூடியோ மாடியில் ஏறி, பைனுகுலர் வைத்து ரம்பா விலாஸ் மூன்ருவது மாடியை நோக்கினுன். யாரோ ஒரு பெண் பாவாடை மட்டும் கட்டிக் கொண்டு, திண்டில் சாய்ந்து தலைவிரி கோலமாயிருந்ததைக் கண்டான். அவள் ரம்பாவா

நேரத்தில் வருகிறேன். பிறகு ஒத்திகையில் கலந்து கொள்கிறேன்.

வந்தனம் ரம்பா — உன்னை நம்பியிருக்கிறேன் ஜிந்தாலாவிடம் கருணையிருக்க வேண்டும்.

அதற்கென்ன சேட்ஜீ — குட்பை!

குட்பை, ரம்பாபாய்! ராஜன் ரம்பாவை அழைத்து வரவேண்டும்.

*　　*　　*

எனக்கும் ஒரு மணி நேரம் வேண்டும்....

''ராம்பா மனச்'' சோர்வுக்குக் காரணம் என்ன என்று சிந்தித்துக் கொண்டே ஜிந்தாலால் மோட்டாரில் ஸ்டுடியோ சென்றுன். ஜிந்தா சென்றதுமே ராஜன் ''நான் வரலாமா ரம்பா'' என்று போனில் உத்தரவு கேட்டான் ''இரு; அழைக்கும் போது வா, ராஜா'' என்று பதில் வந்தது. ராஜனும் போனை வைத்துவிட்டுச் சிந்தனையில் ஆழ்ந்தான். இங்கும் சிந்தனை, அங்கும் சிந்தனை. அங்கே மனப்புயலில் பழைய கறுப்பாயி கதை ஓடுகிறது. இங்கே பழைய ரங்க விலாஸ் கதை ஓடுகிறது. இரண்டையும் அரைமணியில் ஓட்டித் தீர்த்தால் பிறகு காட்சிப்

என்று கூர்ந்துபார்த்தான். டெலஸ் கோப் வைத்துப் பார்த்தான். முகம் அமாவாசைக்குக் கரிதட விளுற்போலிருக்கிறதே.... அவளா என்று கூர்ந்து நோக்கினுன். சட் டென்று காரில் புறப்பட்டு ரம்பா விலாசத்திற்கே வந்தான் ஜிந்தா லால், ராஜனைக் கண்டான். காரி யத்தைச் சொன்னுன். "ரம்பா வுக்கு உடம்பு சரியாயில்லை; எனக்கும் மேற்படியே" என்ருன் ராஜன். ஜிந்தாலால் வைத்தியரை அழைக்க போனை எடுத்தான்... ராஜன் "அவள் உத்தரவில்லாமல் அப்படிச் செய்யக் கூடாதென்று" தடுத்தான். பிறகு தன் விண்ணப் பத்தை மூன்றும் மாடிக்கே அனுப் பினுன் ஜிந்தாலல்.

— ஹல்லோ ரம்பா பாய், ஹல்லோ – இருக்கிறீரா.

— இருக்கிறேன் சேட், இருக் கிறேன்.

— ஏன் தங்கள் குரல் சோர்ந் தது.

— மனம் சோர்ந்தால் வாழ்வே சோர வேண்டியதுதானே.

— ஏன்பாய், மனச் சோர்வேன்.

— அதைப் போனில் எப்படிச் சொல்லுவது.

— சேட்ஜீ நீங்கள் ஸ்டுடியோ செல்லுங்கள். நான் ஒரு மணி

படங்கள் புதிய வேகங் கொண்டு விறு விறுப்புடன் பாய்ந்து செல்லும்—மூன்ருவது மாடியை நோக்கிக் காண்போம்.

அடடா என்ன அலங்காரம், என்ன ஜோடனை. சப்பிரமஞ்சத்தில் அன்னத்தூவி மெத்தை மேல் ரம்பா சாய்ந்து கிடக்கிருள், அவளைச் சுற்றி உலக போக சுகங்கள் சண்ட தாண்டவ மாடுகின்றன, அவள் போன் எடுத்தால், எத்தனை விசிறிகள் ஓடிவந்து கட்டளைக்கு காத்துச் சேவை செய்வார்கள்! அவள் முறுவலுக்கு அடிமைப்பட்ட ஆண் உள்ளங்கள் எத்தனை—அவள் பூச்சழகில் பொருமை கொண்டு, விரல்முறிக்கும் கலைவாணிகள் எத்தனை, அவள் கண்காட்டினுல்காலில் கலகலவென்று பொன்னும் வெள்ளியுமாகக் கொட்ட எத்தனை ஜிங்தாலால்கள் காத்து நிற்கின்றனர்! அவள் மணியடித்தால் இதோ என்று தட்டுத் தட்டாக விருந்து வரும். அவள் ஒரு சிட்டனுப்பினுல் பட்டும் சரிகையும் பொன்மணியணிகளும் அவளைச் சரண் புகும். அவள் ஒரு குலுக்குக் குலுக்கினுல் வாலிபர்களுக்கு வெறிபிடிக்கும். அவள் ஆட்டத்தை பில்மில் பார்த்தாலும் ஜனங்கள் மாலையும் மோதிரமும், பவுனும் விசிறிவர்; சிலர் மதி மயங்கி ரம்பாவின்நிழற்படத்திற்கே மாலை சூட்டக் கிளம்புவர்-ரம்பாவுக்கு உலக சுகபோகங்களில் யாதும் குறைவில்லை. அவள் அகம் பாவத்திற்கும் அழகுச் செருக்கிற்கும், படபடப்பிற்கும், வசைக்கும், நையாண்டிக்குங் கூடங் தனிப் பெருமையுண்டு.

இப்படியிருந்தும் ரம்பா அடிக்கடி கதவடைத்துக் கொண்டு கவலைக் கனவில் ஆழ்ந்துவிடுவாள்; அவள் முகத்தில் அழகுண்டு, நகையுண்டு; அகம் இருள் விசனக் காடாயிருக்கிறது. அவள் மனம் ஓயா அலைகளை வீசிக் கொந்தளித்துக் கொண்டேயிருக்கிறது.

இன்று அந்தக் கொந்தளிப்பில் ஊழிப்புயல் வீசுகிறது. இப்புயலைத் தூண்டிவிட்டது அந்தக் கிழவியின் வார்த்தையும், கிழவன் வார்த்தையும். இருவரும் யார் என்பதை ராஜன் மனப்புயலால் அறிவோம். இப்போது ரம்பாவின் மனச் சித்திரத்தைக் காண்போம்:-

"பழைய கறுப்பாயி, உன்னைத் தெரியுமடி" இதுதான் முதலில் அவளை உறுத்தியசொல். இரண்டாவது சொல் "சிவப்பி கறுப்பியானுல், இந்தக் கழுதைக்குப் புத்திவரும்", இது இரண்டாவது ஊசிக்குத்து. அது சென்ற காலச் சொல், இது வருங்காலச் சொல். இரண்டிற்கும் நடுவே மனப்புயல் வீசுகிறது. "ஹா நான் பழைய கறுப்பியே....என்னைப் புதிய சிவப்பியாக்கியது முகப்பூச்சும் உதட்டுச் சாயமும், போலி வேடமும்....புன்னகை நடிப்பும், களியாட்டமுமே. கீழே சென்ருல் நான் ரம்பாபாய், என் படத்தைப் பத்திரிகையில் போடுகிருர்கள்....சுவர் விளம்பரங்களில் என் உருவங்களும் புகழ் பெறுகின்றன. ஆனுல் என்னுள்ளே மனச்சாட்சி "அடி பழைய கறுப்பியே" என்று ஏளனம் செய்கிறது. மனச்சாட்சியின் ஏளனத்தை எப்படித்தடுப்பது—மேடையில் நான் நடனராணி! நூறு ஆடவர் எனக்குச் சேவை செய்கிருர்கள்—இங்கே தனித்திருக்கும்போது நான் பழைய கறுப்பிதானே என் வாழ்க்கைச் சுருள் மனப்புயலில் ஓயாப்படமாக ஓடுகிறதே....ஹு....
என்று ரம்பா பெருமூச் செறிந்து கண்ணுடியில் தன் இயலுருவைப் பார்த்துக்கொண்டே கனவு கண்டாள். அவள் கதையை நாமும் உலகின் முன் ஓட்டிக் காட்டுவோம். உள்ளிருப்பது தானே உலகிலும் நடக்கிறது.

ரம்பாவின் பூர்வ கதை

5. கண்டித் தோட்டம்

இலங்கை மரகதத் தீவு; பசுவளச் சோலை, கடல் முரசும், மேக கர்ஜனையும், அருவிப் பாட்டும், குருவிப் பாட்டும், மந்த மாருதக் குழலும் இசைக்க, அழகுத் திரு

நடமாடும் கலையரங்கம் இலங்கை. இலங்கையை எத்தனை தரம் சுற்றிப் பார்த்தாலும் மனம் சலிக்காது. மன்னார் தென்னை, மட்டக்களப்புச் செஞ்நெல், யாழ்ப்பாணம் பனை, கொழும்பு ரப்பர், குண்டசாலை கொக்கோ எல்லாம் சூழக் கண்டிமலை தேயிலைத் தோட்டங்கள் இலங்கைக்குச் செல்வம் பொழிகின்றன. நுவரேலியா உபவனம், பெர்தேனியாவின் அற்புதத் தோட்டம், கதிர்காமத்தின் அருள்வளம், திரிகோண மலையின் துறைவளம், கொலனியா புத்த விஹாரத்தின் காம்பீரியம், லூசிய சர்ச்சின் சிலுவைக் காட்சி, சிகிரியாச் சித்திரம், அனுராதபுரம் சிற்பம், கொழும்பு முருகன் கோயில் வழிபாடு எல்லாம் இலங்கையின் அழகிற்கு அழகு செய்கின்றன. இலங்கை இதயவடிவா யிருக்கிறது. இதயத்தில் நான்கு அறைகள் இருப்பது போலவே இலங்கையிலும் சைவம், பௌத்தம், கிறிஸ்துவம், இஸ்லாமியம் ஆகிய நான்கு சமயங்களும் வளர்கின்றன. இலங்கை பண்டைக் காலத்திற்கேற்ற நாகரிகத்திலும் பற்றுடையது; மேற்கும் கிழக்கும் இணைந்த புதுமை பெற்றது. இலங்கை, ஆதியில் தமிழர் நிலமாயிருந்தது. தமிழ் மன்னர் அங்கே ஆண்டனர். வடக்கேயிருந்து விஜயன் தனது பரிவாரங்களுடன் வந்து இலங்கையிற் குடியேறினன். பாண்டி நாட்டுப் பெண்களை மணந்து அவன் மரபு பெருகியது. இந்த மரபே சிங்கள மரபானது. அசோகன் இங்கே பௌத்த சமயத்தை நாட்டினன்; சிங்களவர் பௌத்தராயினர். அனுராதபுரத்தில் அசோகன் நடச்செய்த அரசங்கிளை இன்றும் தழைத் தோங்குகிறது. சிங்கள மொழியில் ஏராளமான தமிழ்ச் சொற்கள் கலந்துள்ளன. தமிழர் இரத்த வேர்வைதான் இலங்கையை வளப்படுத்தியது. இலங்கையைப் பறங்கியரும் ஆங்கிலேயரும் ஆண்டனர். ஆங்கிலேயர் காலத்தில் இலங்கையின் கலாச்சாரம் முற்றிலும் மாறியது. வியாபாரத்தில் கண்ணுங் கருத்துங் கொண்ட ஆங்கிலேயர், இலங்கையில் தேயிலை, கொக்கோ, காப்பி, ரப்பர் முதலிய பயிர்களை விளைவேற்றிச் செல்வச் செழிப்படைந்தனர்.

இந்தச் செழிப்பிற்கு உழைப்பைத் தந்தவர் தமிழரே. தமிழர் ஒப்பந்தக் கூலிகளாகச் சென்று இரத்த வேர்வையைச் சிந்திப் பாடுபட்டு, இலங்கையை வளப்படுத்தினர். இந்தக் கூலிகளைச் சேர்க்கக் கங்காணிகள் செய்த தந்திரச் சூழ்ச்சிகள் பல. கைநிரம்பப் பணம், வயிறு நிரம்பச் சோறு, கண் குளிரப் புடவை, ரவிக்கை, இருக்க நல்ல வீடு, படுக்க நல்ல கட்டில் என்று ஆசை காட்டித் தமிழ் மக்களைக் கங்காணிகள் இலங்கைத் தோட்டங்களுக்குக் கொண்டு சென்று கடுமையான வேலை வாங்கினர்.

* * *

சினிக் கங்கானியைப் பாருங்கள்! இதோ சிவகங்கைச் சந்தையில் வட்டமிடுகிறான். அங்கே ஒரு சிறுமி பொரியுருண்டை வாங்கினாள். வாங்கி அதைக் கொரித்துக் கொண்டே சுற்றிப் பார்த்தாள்; ''ஆத்தா, ஆத்தா'' என்று கூவினாள். அப்போது சினிக் கங்காணி தோன்றினான். ''ஏ பிள்ளே. உன் ஆத்தா கூட்டிவரச் சொன்னாள் — வா — வா'' என்று அழைத்துச் சென்று, ஒரு தோட்டத்திற்குள் புகுந்தான் சீனி. ''ஆத்தா எங்கே'' என்று சிறுமி அழுதாள். ''அழாதே தங்கமே, நான் உனக்கு எல்லாம் செய்கிறேன் — இந்தா மாம்பழம்'' என்று தந்தான் சீனி. சிறுமி மாம்பழத்தை விட்டெறிந்து — ''ஆத்தாதான் வேண்டும்'' என்று கண்ணைக் கசக்கியழுதாள். ''என் கண்ணே! அழாதே, உனக்கு என்ன குறை? நான் இருக்கிறேன். என்னை நம்பு, இந்தா சாயச் சேலை; உடுத்திக் கொள்; இந்தா மாம்பழத்தைச் சாப்பிடு; உனக்குச் சாயங்காலம் நல்ல சோறு கிடைக்கும், பேசாமல் வா....'' என்று அழைத்துச் சென்றான்.



முனியன்:— ஹி! ஹி!! தீவுளிங்க?

அய்யர்:— தீவாளி. எனக்கென்னடா தீவாளி · எங்க மாப்பிள்ளையிடம் போயிக் கேள்!

சீனிக் கங்காணி வாட்டசாட்டமாயிருந்தான். மதுரைச் சல்லாவும், வெள்ளை குடுத் துணியும், கிராப்புத் தலையும், "கிறிக்" சடாவும், வைரக் கடுக்கனும், தங்க மோதிரமுமாயிருந்த அவனைக் கண்டு சிறுமியும் மயங்கிவிட்டாள். குடிக்கக் கேப்பைக் கூழும், கடித்துக் கொள்ள ஒரு மிளகாயும், கட்டக் கந்தையும், படுக்கக் கிழிந்த பாயும் இருக்க ஓட்டைக் குடிலுமே அவளுக்குண்டு. "நாயே, எழுதே" என்ற வசவுடன் ஆத்தாள் அவளை வேலை ஏவுவாள்; அரை வயிற்றிற்குச் கஞ்சி தருவாள். இங்கே சீனிக் கங்காணி நல்ல சோறும், நல்ல துணியும், நல்ல வீடும், இனிய சொல்லும் தரும்போது சிறுமி அவனை நம்பிப் பின் சென்றது இயற்கை தான். இருந்தாலும் சீனி அவளை வண்டியேற்றித் தொண்டிக்குக் கொண்டு சென்றதும், மறுதரம் "ஆத்தா எங்கே" என்று மெல்லக் கேட்டாள் சிறுமி. "அடி குட்டி இதோ பார், இங்கே இருப்பவரெல்லாம் உனக்கு ஆத்தாவும், அக்காளுமே. ஏன் அந்தக் கழுதையை நினைக்கிறாய் வா" என்று சுற்றிக் காட்டினான் சீனி. தொண்டிக் கடற்கரையில் இருபது பெண்களும், நாற்பது ஆண்களும் நின்றனர். அவர்கள் முகத்தில் சோகம் வழிந்தது. "நீயும் வந்தாயா அம்மா" என்று அவர்கள் சிறுமியைப் பார்த்தனர். ஆண் பிள்ளைகள் மட்டும் சந்தோஷமாகவேயிருந்தனர். "வயிற்றுக்குக் கஞ்சியாவது கிடைக்குமல்லவா; போவோம் தைரியமாக" என்று அவர்கள் தம்முள் பேசிக் கொண்டனர். சீனிக் கங்காணி "ஏ முத்தம்மா, இந்தக்குட்டியைப் பார்த்துக் கொள்" என்று தள்ளிய பிறகு, சிறுமி பக்கங்கூடத் திரும்பிப் பார்க்கவில்லை.

முத்தம்மா: குட்டி உன் பெயரென்ன? ஊரென்ன?

குட்டி: வீராயி, சிவகங்கை.

முத்தம்மா: ஆத்தா, அப்பா உண்டா?

குட்டி: அப்பா இல்லை, ஆத்தாளை விட்டு இந்த ஐயா என்னைக் கூட்டி வந்தாங்க....

முத்தம்மா: வீராயி, இனி ஆத்தா, அப்பா எல்லாம் கங்காணி தான். உனக்கு இனிக் குறையில்லை. பேசாமல் சந்தோசமாக எங்களுடன் வா?

குட்டி: எங்கே? நாம் எங்கே போகிறோம்?

முத்தம்மா: கங்காணி ஐயா கூட்டிச் செல்லுவார்; அந்த இடத்திற்குப் போவோம்.

குட்டி: எந்த இடம்? அது எப்படியிருக்கும்?

முத்தம்மா: அதுவா: அது தான் நமக்குக் கைலாசமடீ. அழகு சொட்டும் அமுத நிலம்.

கண்ணுக்குக் குளுமை; மனதுக்கு இனிமை. அங்கே பாலும் தேனும், கனிரசமும் பாய்ந்தோடும். அங்கே கைலாசம் போல பங்களாவில் படுக்கக் கட்டில்–மெத்தை, உடுத்தப் பட்டாடை, குடிக்கப் பால் பாயாசம் உண்டு. சுகமாயிருக்கலாம்.

TEL
"EMMES"
M.S
பட்டணம் பொடி
மோகன் கம்பெனி
த.பெ.நெ.1161....சென்னை.21.

எம். டி. வி
அளிக்கும்
தீபாவளி பரிசு

நண்பன்

★★★ டைரக்ஷன்: P. S. ஸ்ரீநிவாஸ ராவ் B.A.

BHARAT
STUDIO

வேலைக்குக் கைநிரம்பக் கூலி யுண்டு.

இதற்குள் கப்பல் வந்துவிட்டது, எல்லாரும் துறைமுகத்தை நோக்கிச் சென்றனர்; சீனி "ஏறுங்கள்" என்றான். சிலர் பாய்ந்தேறினர்; சிலர் மெல்லச் சென்றனர்; சிலர் மீண்டும் தமிழகத்தைத் திரும்பி விசனப் பார்வையுடன் நோக்கிச் சென்றனர். வீராயி "ஆத்தா தேடுவாளே" என்று முனகி, சிவகங்கைப் பக்கம் திரும்பிப் பார்த்துக் கொண்டே கப்பலுக்குள் சென்றாள். ஆடுமாடுகள் கட்டியிருக்கும் மூன்றாம் வகுப்பில், இந்த ஆண் பெண் ஜீவர்களும் அடைந்து கிடந்தனர். இவர்களே ஒப்பந்தக் கூலிகள். இவர்கள் உற்றார் உறவினர், நாடு நகரங்களை விட்டு, இரத்தக் கண்ணீர் பாய்ச்சி உழைத்த உழைப்பினாலே தான் இலங்கையும், பிஜியும், மலாயும், பர்மாவும், தென்னாப்பிரிக்காவும் பொன்னும் பசுமையும் குலுங்கின. இந்தக் கூலிகள் உள்ளத்திலும் பாட்டுதிக்கிறது....
....ஏலேலோ லேலேலோ !

கப்பல் முன் செல்லுகிறது; வீராயி மனம் பின் செல்லுகின்றது. சுற்றியுள்ள பெண்கள் பேசும் பேச்சினால் அவள் மனம் ஒருவேளை மகிழ்கிறது; ஒரு சமயம் கலங்குகிறது; சிறுமி ஒன்றுமே பேசவில்லை. "என் ஆத்தா" என்று பேச்செடுக்கும் போதே முத்தம்மா அவள் வாயை அடைத்துவிட்டாள். கப்பலும் தொண்டியிலிருந்து கொழும்புக்கு வந்து கூலிகளை இறக்கியது. எல்லோரும் ரயிலில் ஏறினர்; ரயிலும் கபகப வென்றோடிக் கண்டி சேர்ந்தது. தொண்டியிலிருந்து கண்டிக்கு வந்த கூலிகள் கங்காணி பின்னே, மலையேறினர். அங்கே தோட்ட முதலாளிகளிடம் கூலிகளை ஒப்புவித்ததும், சீனிக் கங்காணி ஒரு கத்தை நோட்டுகளைப் பெற்றுக்கொண்டு வீடு சென்றான். முதலாளி தன் ஏஜண்டுகளிடம் கூலிகளை ஒப்பித்துத் தன் பங்களாவுக்குச் சென்றான். ஏஜண்டு கூலிகளுக்கு வேலை பிரித்துக் கொடுத்து அவரவர் குடில்களுக்கு அனுப்பினான்.

6 தாயின் கண்ணீர் !

வீராயி முத்தம்மாளுடன் வசித்தாள்; இருவரும் ஒரு கூரைக் குடிலில் சமைத்துண்டனர். மலைமேல் ஏறிச் சென்று, கொழுந்து பறித்துக் கூலி வாங்கிப் பிழைத்தனர். முத்தம்மாள் வாய் முத்து; மனம் பித்து; வயிறு நெருப்பு; கைகத்தி; கண் மாயவலை; அவள் இனிமையாகப் பேசிக் கொடுமையாக நடத்துவாள். அவள் வீட்டு வேலை முழுதும் வீராயி மேல் சுமத்தினாள். தான் அங்குமிங்கும் செல்வதும், ஆட்களை வலைபோடுவதும், நகை நட்டுச் செய்வதுமாயிருந்தாள். கூட்டி மெழுகி, சமைத்து, தேய்த்துக் கழுவி வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்வதும், கொல்லைத் தோட்டத்தில் பயிர் வைப்பதும்—எல்லாம் வீராயி வேலைதான். வேலையில் தயங்கினால் வசவும் அடியும் கிடைக்கும். முத்தம்மா சில சமயம் அரக்கி போல் சிறுமியை மிரட்டுவாள். சில சமயம் நயமாகப் பேசி அவள் கூலிப் பணத்தைக் கூடப் பறித்துக் கொள்வாள். வீராயி வாய் திறக்க முடியாமல், மனப்புயல் விம்ம உள்ளம் துடிதுடித்துக் கொண்டேயிருந்தாள்.

வீராயிக்குப் பதினேழு வயதானது. இளமைக்கேற்ற அழகும் வனப்பும் அவள் முகத்திற் பொலிந்தன. முத்தம்மாள் அவளை "ராசாத்தி" என்று புகழ்ந்து, மெல்ல மெல்லத் தனக்குச் சிநேகமான வாலிபர்களிடம் அழைத்துச் செல்லத் தொடங்கினாள். முதலில் சீனிக் கங்காணி அவளைத் தொட்டான்; பிறகு அவன் மகன்; பிறகு அவன் தம்பி-வீராயி விழித்துக் கொண்டாள். இதென்ன வாழ்க்கை என்று மனங் கசந்தாள். மனதை அடக்கவும் முடியவில்லை. அதில் காமப் புயலும் வீசியது கவலைப் புயலும் வீசியது. இரண்டிற்கும் இடையே

பெண்மைக்குரிய நாணம் சிற்றலைகள் வீசியது. தக்க காதலனை மணம் புரிந்து குடும்பம் நடத்த விரும்பினாள் குமரி. இந்த நினைப்பு முத்தம்மாளுக்கு வெறுப்பாயிருந்தது. இருவருக்கும் மனத்தாங்கல் வந்தது. "உன் மூஞ்சியைப் பார்க்க யாரோ வாரான்" என்றெல்லாம் பேச்சுத் தடித்தது. சினிக் கங்காணியிடம் வீராயி தன் எண்ணத்தைத் தெரிவித்தாள். அவன் தன் அடிமையான நாகப்பனுக்கு வீராயியைக் கட்டிக் கொடுத்தான். அடிமை நாகப்பன் மனைவியும், தனக்கே அடிமை என்பது சினி எண்ணம்.

நாகப்பனும் வீராயியும் தனிக் குடித்தனம் நடத்தினர். இவர்கள் குடியைக் கெடுக்க முத்தம்மாள் செய்த சூழ்ச்சி கொஞ்சமன்று. நாகப்பன் இருக்கும்போதே சீனியும் உள்ளே வந்து வீராயி கையைப் பிடிக்கத் தொடங்கினான். இது வீராயிக்குக் கட்டுடன் பிடிக்கவில்லை. நாகப்பனுக்கும் பிடிக்கவில்லை. எதிர்த்தால் சீனி சீறுவான். கொலை கூட நடக்கும். என்ன வந்தாலும் தனது மானத்தைக் காப்பது என்று வீராயி உறுதிப் பூண்டிருந்தாள். அவள் மேல் முத்தம்மாள் இல்லாத கதையெல்லாம் கட்டிவிட்டு "ஊர்வசி" என்று கேலியும் செய்தாள். சீனியிடம் அவளைப் பற்றி அவதூறு கூறினாள். நாகப்பன் மனதையும் கலைக்கத் தொடங்கினாள். இதனிடையே வீராயிக்கு ஒரு பெண் பிறந்தது. அதற்கு அவள் தனது தாயின் பெயரை வைத்தாள். அந்தப் பெண் குழந்தையே கருப்பாயி.

(தொடரும்)

'உமா' பொங்கல் மலர்

ஜனவரி இதழ் பொங்கல் மலராக பொங்கலன்று
எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

150 பக்கங்களுடன்

கண்ணைக் கவரும் வண்ண ஓவியங்களுடனும்,
கருத்துக்கள் பொதிந்த கட்டுரைகளுடனும்,
சிறந்த சிறு கதைகளுடனும்
வெளி வருகிறது.

விலை 8 அணா.

உங்கள் பிரதிக்கு உள்ளூர் ஏஜன்டிடம் சொல்லி வையுங்கள்

விபரங்களுக்கு :

மானேஜர் : 'உமா' த. பெ. நெ. 1377. சென்னை-1.

மதிப்புரை

"இலவு காத்தகிளி" (சிறு கதைத் தொகுப்பு) சிறு கதைகள் என்ற தலைப்பில் ஏராளமான கற்பனைகள் பிரசுரமாகின்றன. சொற்சுவையும் பொருட்சுவையும் கொண்டு வாழ்க்கையின் பிரதிபலிப்பாக இருப்பவை மிகச் சில தான். அந்த வகையிலே சேர்க்கப்பட வேண்டியதுதான், பிரம்மம் எழுதிய 'இலவுகாத்த கிளி' என்ற சிறு கதைத் தொகுதி. மேலெழுந்த வாரியாகப் படித்து விட்டு வைத்துவிடக் கூடிய கதைகளல்ல அவை. ஒவ்வொன்றிலும் ஆழ்ந்த கருத்து இருக்கிறது.

நளினி, குஞ்சம்மாள், நர்ஸ் ரமணி, அம்மணி போன்ற கதைகள் நமது உள்ளத்தைத் தொடுகின்றன. 'இப்படியும் நடக்க முடியுமா?' என்று சந்தேகம் தோன்றும் இடங்களில், சிறிது நிறுத்திவிட்டு யோசிக்க ஆரம்பித்தோமானல் 'ஏன் நடக்காது?' என்ற கேள்வியும் நம்முள் எழும். ஆசிரியரின் நடை அனுபவமுள்ளதாகவும் சரளமாகவும் இருக்கிறது. புலிக்குப் பிறக்கும் பூனையைப்போல், சர்வ சாதாரணமான இரண்டொரு கதைகளும் இந்தத் தொகுப்பில் ஏனே வெளியாகியிருக்கின்றன. பிரம்மத்தின் இலவுகாத்த கிளி தொகுப்பு மிகவும் ரசமாக இருக்கிறது; ரயில் பிரயாணத்திற்கு உகுந்த உறு துணைவன்.

எழுதியவர்: பிரம்மம், கிடைக்குமிடம்: மனோஹரி பிரசுரம், 43, லிங்கி செட்டித் தெரு, சென்னை -1.

திரு நூல்: பூர்வ ஜன்மநல்வினைப் பயனாலோ வேறு எந்த நற்செய்கையினின் காரணத்தாலோ, இப் புனித மனிதப் பிறவி கிடைத்தது. மனிதன் உண்மை மனிதனுக வாழ விருப்பங் கொள்கிருன். ஆனல் சூழ் நிலையினல் பாதிக்கப்பட்டு, வாழ்க்கையிலும் எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படுவதும் கண் கூடு. ஆனல் மன திடமுள்ள, வாழ்க்கையில் பூரண நம்பிக்கையுள்ள மனிதப் பிறவியின் உன்னதத்தை உள்ளது உள்ளபடி அறிந்த எந்த மனிதனையும், சூழ்நிலையோ அல்லது வேறு எந்தவித சந்தர்ப்பங்களோ மாற்ற இயலாது. அப்படிப்பட்ட மனத் திடத்தை வளர்க்க, ஆஸ்திகத்தில் நம்பிக்கை ஊன்ற, ஆன்மசுத்தியை கொடுக்க பெரிதும் பயனுள்ளது இந்நூல். வேதாந்தத்தைவேம்பென வெறுக்கும், பச்சாதாபத்திற்குறிய பிறவிகளுக்கு, இச் சிறு நூல் அமுதம் போன்றது. பல பகுதிகளைத் தாங்கி நிற்கும் இந்நூலுக்கு நடு நாயகமான இருக்கும் பகுதி **'சுத்த சன்மார்க்கம்'** ஆசிரியரின் அனுபவ வாயிலாக எழுதப்பட்டிருக்கும் இந்நூலை செவ்வனே பயன்படுத்திக்கொள்ள முன்வரும் அறிவாளிகள் எத்தனை பேரோ!

ஆசிரியர்: யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார், வெளியிட்டோர்: காவேரிப் பதிப்பகம். புதுக்கோட்டை. திருச்சி ஜில்லா, பக்கங்கள் 120 விலை ரூ. 1-12-0.

'குமரப் பருவம்': பிறக்கும் குழந்தை நாளடைவில் பொருப்பும் சிறப்பும், அந்தஸ்துடன் உண்மை மனிதனுக வாழ முக்கிய காரணமாக இருப்பது குமரப் பருவத்தின் சூழ்நிலை என்கிருர். ஆசிரியர் போதிய ஆதாரங்களை ஆங்காங்கு எடுத்துக்காட்டி, பகுதி பகுதியாகப் பிரித்து, பொருள் நயம்பட எளிய நடையில் எழுதப்பட்டிருக்கும் இந்நூல் யாவருக்கும் குறிப்பாக குழந்தைகளைப் பேணி வளர்க்கும் பெற்ருேர்களுக்கு பெரிதும் பயன்படும்.

ஆசிரியர்: பெ. தூரன், வெளியிட்டோர்; அமுத நிலையம் லிமிடெட், தேனும்பேட்டை. சென்னை 18. 58 பக்கங்கள் விலை 12 அணு.

— புனர்வசு.

நடனமணிகள் வரிசையில்...

எம்பியெஸ்

குமாரி ஏ. ஸி. கோமளா

'மூர்த்தி சிறிதானுலும் கீர்த்தி பெரிது' என்பார்கள். சின்னஞ் சிறு வயதிலே முறையாக சாஸ்திரீய நடனம் பயின்று முதல் கச்சேரியையே முதல் தரமாகவும் செய்து விட்டு ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்ற குமாரி ஏ. ஸி. கோமளா இந்தியாவின் பல பாகங்களிலும் நடனக் கச்சேரிகள் செய்திருக்கிருர். வழுவூர் ராமய்யா பிள்ளையின் சிஷ்யை கோமளாவிற்கு நல்ல உடற்கட்டும் பாவமும் இருக்கின்றன. உடலை நன்கு வளைத்து அருமையாக ஆடுகிருர்.

இந்த நடன மணி சமீபத்தில் மலாயா நாட்டுக்குச் சென்று பல நடனக் கச்சேரிகள் செய்து இந்தியாவின் கௌரவத்தை உயர்த்தி விட்டு வந்திருக்கிருர். இந்தியாவிலிருந்து சென்று முழு நீள பரத நாட்டியக் கச்சேரி செய்தவர் கோமளாதான் என்பது குறிப்

குமாரி துளசி

'சக்ரதாரி' படம் வந்தபோது அதிலே பூக்காரச் சிறுமியாக நடித்த குமாரி துளசியின் நடிப்பை யாவரும் பாராட்டினுர்கள். அந்தப் படத்தின் மூலமே ரசிகர்களைக் கவர்ந்து விட்ட குமாரி துளசி, ஒரு சிறந்த நடனமணியும் கூட. முறையாக நடனம் பயின்று ஏராளமான நடனக் கச்சேரிகள் செய்திருக்கிருர் அவர். மோதிரக் கையால் குட்டுப்படுவது போல் ஜெமினியின் படத்தில் தோன்றிய இவர் பிறகு ஏழை உழவன், ஔவையார், சண்டிராணி போன்ற படங்களிலும் நடித்தார். இளமையும் திறமையும் கொண்ட குமாரி துளசி தற்போது "புது வாழ்வு" "புதையல்" போன்ற படங்களில் நடித்துவருகிருர். இவை திரையிடப்பட்டதும் குமாரி துளசியின் புகழ் மேலும் ஒருபடி உயரும் என்று நம்பலாம்.

பிடத் தக்கது. மலாயா ரசிகர்கள் பெருவாரியாக வந்திருந்து குமாரி ஏ. ஸி. கோமளாவின் நடனத் திற மையை வெகுவாகப் புகழ்ந்தனர்.



பி. ஆர். சுலோசனு

'மாங்கல்யம்' படம் திரையிடப் பட்டதும் அதில் லக்ஷ்மியாகத் தோன்றி நடித்த பி. ஆர். சுலோ சனுவைப் பற்றி ரசிகர்களுக்கு ஒரு உயர்ந்த அபிப்பிராயம் ஏற் பட்டது. அதற்கு முன்பே பல படங்களில் சிறு சிறு பாத்திரங் களில் தோன்றிய சுலோசனு மாங் கல்யத்தின் மூலமே ரசிகர்களுக்கு நன்கு அறிமுகமானுர்.

சரஸ்வதிகான நிலையத்தில் முறையாக நடனம் பயின்றவர் சுலோசனு. நடிப்புத் திறமையும் நடனத் திறமையும் கொண்ட சுலோசனு தெலுங்கு, மலையாளம், தமிழ் ஆகிய முப்பாஷைப் படங் களிலும் நடித்திருக்கிருர். மாங் கல்யம் படத்தில் அவரது நடிப்புத் திறமையைக் கண்டு பல படங் களில் அவருக்குச் சந்தர்ப்பமளித் தார்கள் பட முதலாளிகள், தற் போது பெண்ணரசி, காளஹஸ்தி மஹாத்மியம் (தெலுங்கு), டவுன் பஸ், நல்லதங்கை, எல்லாம் இன்ப மயம் போன்ற பல படங்களில் நடித்து வருகிருர் சுலோசனு.

குமாரி வனஜா

'மந்திரி குமாரி'யின் மூலம் அறிமுகமான குமாரி வனஜா, வாஸன் கண்ணில் பட்டதன் விளை வாக ஜெமினி நக்ஷத்திரமானுர்! ஜெமினி நிரந்தர நடிகையான இவர், சம்சாரம், மூன்று பிள்ளை கள், சௌதாமினி, சன்ஸார், ஔவையார் முதலிய பல ஜெமினி படங்களில் நடித்திருக்கிருர்.

குமாரி வனஜா நடன உலகில் தனிப் புகழ் பெற்று விளங்கினுர். இவர் சாஸ்திரீய நடனம் பயின்ற வர். இளமையும் உடற்கட்டும் கொண்ட வனஜா விரைவில் நக்ஷத் திர ஸ்தானம் பெற்றதில் வியப் பில்லையல்லவா!

இன்னும் அநேக நடனமணி களை இந்த வரிசையில் ரஸ மான அம்சங்களுடனும் விசேஷ புகைப் படங்களுட னும் அடுத்தடுத்து வெளி யிடப்போவதை மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக் கொள் கிருேம்.

பட உலகம்

[வியார்பி]

நண்பன்

வருடந்தோறும் தீபாவளி வெளியீடுகளாக திரைப் படங்கள் வர தவறுவதில்லை. இவ்வருடம் தீபாவளியன்று திரையிடப்படும் படங்களில் எம். டி. வி. யாரின் நண்பனும் ஒன்று. பி. எஸ். ஸ்ரீனிவாஸ ராவ் பி. ஏ. அவர்களின் டைரக்ஷனில் 'நண்பன்' வளர்ந்துள்ளான். இதில் பி. கே. சரஸ்வதி, மனோஹர், டி. எஸ். பாலையா, பிரண்ட் ராமசாமி, லக்ஷ்மணன் முதலியோர் நன்ருக அவர்களுக்கேற்ற பாத்திரத்தில் நடித்துள்ளதாகத் தெரிகிறது. 'நண்பன்' மிகவும் நல்லதொரு படம் என்றே தெரிகிறது.

முதல் தேதி

தங்களது முதல் தயாரிப்பிலேயே வெற்றியை அடைந்த பத்மினி பிக்சர்ஸார், இப்போது தங்கள் இரண்டாவது தயாரிப்பான 'முதல் தேதி'யில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். ப. நீலகண்டன் டைரக்ஷனில் தயாராகி வரும் முதல் தேதியில், சிவாஜி கணேசனும், அஞ்சலி தேவியும் பிரதம பாகத்தில் நடிக்கின்றனர். பி. ஆர். பந்துலு, என். எஸ். கிருஷ்ணன். டி. ஏ. மதுரம் முதலியோரும் பங்கு கொள்கின்றனர்.

பெண்ணரசி

தங்கள் முதல் தயாரிப்பு நல்ல வெற்றியை அடைந்துவிட்ட பூரிப்புடன் எம். ஏ. வி. பிக்சர்ஸார் தங்கள் அடுத்த தயாரிப்பில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். கோவை சென்ட்ரல் ஸ்டுடியோவில் வளரும் பெண்ணரசியை, நால்வர் புகழ் ஏ. பி. நாகராஜனே தன் நல்ல வசனத்தின் மூலம் வளர்த்துவிட்டார். பெண்ணரசியின் முழு டைரக்ஷன் பொறுப்பை கே. சோமு ஏற்றுக்கொண்டுள்ளார். இப்படத்தில் ஏ. பி. நாகராஜன், எஸ். ஏ. நடராஜன், எம். என். நம்பியார், பி. கண்ணும்பா, ஆர். சுலோசனு. சூர்யகலா, முதலியோர் நடிக்கின்றனர்.

'காவேரி'யில் உல்லாஸ பூங்காவில் லல்லியும் கனேசனும்

நள்ளிரவில் நடந்தது

ரேவதி புரொடக்ஷன்ஸார் தாங்கள் எடுக்கும் படத்துக்கு 'நள்ளிரவில் நடந்தது' என்று மகுடமிட்டு இருக்கின்றனர். இப்படம் டைரக்டர் வேம்புவின் தயாரிப்பில் வளருகிறது. ரேவதி ஸ்டுடியோவில் தயாராகும் இதில் ஹாஸ்ய

நடிகர் டி. ஆர். ராமச்சந்திரனும் நடிக்கிறார். எஸ். வரலக்ஷ்மிதான் கதாநாயகி.

அண்ணியின் வளையல்

'வைர மாலை' யைத் தயாரித்து வெற்றியுடன் வெளியே அனுப்பி ரசிகர்களின் பாராட்டுதலை பெற்ற வைத்யா பிலிம்ஸார் சூட்டோடு சூடாக தங்களுடைய இரண்டாவது தயாரிப்பான 'அண்ணியின் வளையல்' என்ற குடும்பச் சித்திரத்தை தயாரிப்பதற்கான ஏற்பாடுகளை ஜரூராகச் செய்து வருகிறார்கள். இக்கதை 'வதீஞ்சியா பகிடி' என்ற மராத்திய பாஷைப் படத்தின் தழுவல்! அதை தமிழில் வெளியிட எல்லா உரிமையும் வாங்கி அண்ணியின் வளையலை தயாரிப்பார்கள். இதில் ஜூனியர் ஸ்ரீரஞ்சனியும், எம். கே. ராதாவும், பிரதம பாகத்தில் கே. நாகேஸ்வர ராவும் நடிக்கலாம் என்று கருதப்படுகிறது. கதை-வசனம் கண்ணதாசன் எழுதுவாராம்!

செந்தாமரை

மதராஸ் பிக்சர்ஸாரின் செந்தாமரையின் படப்பிடிப்பு நடந்து வருகிறது. நியூடோன் ஸ்டுடியோவில் உருவாகும் செந்தாமரையின் கதை-வசனம் அரங்கண்ணலால் எழுதப்பெற்றது. சிவாஜி கணேசன், எம். கே. ராதா, லலிதா-பத்மினி முதலியோர் நடிக்கும் இப்படத்தின் டைரக்ஷன் பொறுப்பை பீம்சிங் ஏற்று டைரக்ட் செய்து வருகிறார். இதுவே மதராஸ் பிக்சர்ஸாரின் அடுத்த வெளியீடு என்று நம்பப்படுகிறது!

என் மகள்

தீபாவளி வெளியீடுகளில் அசோகாவின் என் மகளும் ஒன்று. விருதை ந. ராமசாமி கதை-வசனம் எழுதியிருக்கும் இதில், நீண்ட காலத்துக்குப் பின் ரஞ்சன் தோன்றுகிறார். இதில் ரஞ்சன் பல வித நூதன உடைகள் அணிந்து நடித்துள்ளார். என் மகளை கே. வி. ஆர். ஆச்சார்யாவும், எம். கே. ஆர். நம்பியாரும் டைரக்ட் செய்துள்ளனர். தமிழ்நாட்டு ஏஸ் டைரக்டர்களில் ஒருவரான ராஜா சந்திரசேகரின் மேற்பார்வையில் வளர்ந்துள்ள என் மகள் அசோகா பிச்சர்ஸாருக்கு வெற்றியை அளிக்கும் என்பதில் ஐயமில்லை. இதில் ரஞ்சனோடு எஸ். வரலக்ஷ்மி, எம். ஜி. சக்கரபாணி, மைனாவதி முதலியோரும் நடித்துள்ளனர். சங்கீத பொறுப்பை சி. என். பாண்டுரங்கனும், பாடல்களை சேலம் பாவலர் வேலாயுதசாமியும் ஏற்றுக் கொண்டு உள்ளனர்.

'போனமச்சான் திரும்பிவந்தா'வில் ஸ்ரீராம்

போன மச்சான்—திரும்பிவந்தான்

பட உலகில் தற்போது பழமொழிகளைத் தலைப்பாகக் கொண்டு படம் எடுப்பது என்ற புதிய சகாப்தம் ஆரம்பமாகியுள்ளது. மெர்க்குரி பிலிம்சார் தாங்கள் எடுத்துக் கொண்டிருக்கும் [illegible] படத்துக்கு "போன மச்சான் திரும்பிவந்தான்" என்ற

பெயரை சூட்டியிருக்கிறார்கள். அநேகமாய் இப்படம் முடிவடையும் தறுவாயில் இருப்பதால் டிசம்பரில் வெளியாகலாம். மின்னும் நட்சத்திரங்களான ஸ்ரீராம், குசலகுமாரி, தங்கவேலு முதலியோர் நடிக்கின்றனர். காலஞ்சென்ற இசைக் கலைஞர் சி. ஆர். சுப்பராமனின் பிரதம மாணவர் எம். எஸ். விஸ்வநாதம் சங்கீத டைரக்ஷன் பொறுப்பை ஏற்றுள்ளார். பட உலகில் நிறைந்த அனுபவமுள்ள வெங்கிடசாமியின் தயாரிப்பென்றால் அதன்-அருமையைக் கேட்க வேண்டுமா?

காவேரி

கிருஷ்ணாபிக்சர்சாரின் ‘காவேரி’ சிவாஜி கணேசன், லலிதா, பத்மினி, குசலகுமாரி, எம். சரோஜா முதலிய பெரிய நட்சத்திரங்களைக் கொண்டு தமிழ் – தெலுங்கு இரு பாஷையிலும் தயாராகிறது. தெலுங்குப் படத்துக்கு விஜய கௌரி என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள். சிவாஜி கணேசனுக்குப் பதில் என். டி. ராமராவும், டி. ஆர். ராமச்சந்திரனுக்குப் பதில் ரேலங்கியும் நடிக்கிறார்கள். ஏ. எஸ். ஏ. சாமி கதை, வசனம் எழுதியிருக்கும் காவேரியை யோகாநந்த் டைரக்ட் செய்கிறார்.

குடும்பம்

காதல், கடமை, தியாகம் அன்பு, பரிவு, பாசம், எல்லாமே நிறைந்த ஓர் உன்னத சமூக சித்திரமாக குடும்பத்தை தயாரித்துள்ளனர் ஜம்பனா-நந்தி புரொடக்ஷன்சார்! இதுவும் ஒரு தீபாவளி வெளியீடே. இதை ஜம்பனா நன்றாக டைரக்ட் செய்துள்ளார். வாஹினியிலே வளர்ந்து—முடிந்து—வெளியாகும் இதில் சாவித்திரி, ஸ்ரீராம், துரைராஜ், ஜி. வரலக்ஷ்மி முதலிய நடிகர்கள் நடித்துள்ளனர்.

மாதவிடாய்

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of the Govt. of India, under No. (CDL\688) எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாயை அதிக சுலபமாக தவறாமல் உடனே வெளியாக்கும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10—8—0. (த. சி. தனி)

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) Regd No. 266
12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத் தடுக்கும். மாதவிடாய தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். பில்ஸ் விலை ரூ. 12-0-0. (த. சி. தனி)

SEENU & Co., P. B. 1638.( )MADRAS-1.

பிராஞ்ச் : 134, SARANGOON ROAD, SINGAPORE

சிலோன் ஏஜண்ட் : NEW COLOMBO MEDICAL STORES, 82, Main St., கொழும்பு-11

அச்சிட்டு வெளியிடுபவர், ஆசிரியர் : ஜி. உமாபதி எம். சி., உமா பிரிண்டர்ஸ், 4/32, தாதா முத்தியப்பன் தெரு, சென்னை-1.

சபையோர்களே! மிஷின்
கெட்டு விட்டதால் படம்
நடுவில் நின்று விட்டது.
ஒரு சிட்டிகை ரத்தினம்
பொடி, சபையில் யாரேனும்
கொடுத்தால், ஆப்பரேட்டர்
ஒரு நிமிஷத்தில் ரிப்பேர்
செய்து முடித்து விடுவார்!
T.A.S. ரத்தினம் பட்டணம் பொடி
தபால் பெட்டி 1151. மதராஸ்-21.

THE REGISTRAR OF BOOKS
7 OCT 1954
MADRAS

Edited, Printed and Published by G. Umapathy, M.C. at Uma Printers,
4|32, Thathamuthiappan Street, Madras-1 Phone: 2200